உள்ளே...

விழிச்சுடரே 5

பசகி 119

சுட்டும் விழிச்சுடரே

1

தாயின் கருவறைக்குள் இருக்கும் குழந்தை பூமித் தாயின் புத்தம் புது வெளிச்சத்தைக் காண காத்திருப்பது போல... பின்னிரவின் இருட்டு அதிகாலையைக் காண ஆவலோடு காத்திருந்தது.

கனரக வாகனங்களின் சத்தமும், பால்காரப் பையனின் சைக்கிள் மணியோசையும், ராகமிழுத்து ஓலமிட்ட நாயின் குரைப்பும் தவிர வேறெந்த சப்தமுமின்றி, மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

காஞ்சனாதேவிக்கு மட்டும் உறக்கம் வஞ்சித்திருந்தது. 'எப்போதடா விடியும்' என்று கொட்டக் கொட்ட விழித் திருந்தாள்.

கட்டிலைச் சுற்றி அரவணைத்திருந்த மிகப்பெரிய கொசுவலையை விலக்கி எழுந்தாள்.

லேசாய் வாய் பிளந்து, மிதமான குறட்டையோடு, சற்றே மேடிட்டிருந்த வயிறு ஏறி இறங்க... நல்ல தூக் கத்திலிருந்தார் பாலகிருஷ்ணன்.

காஞ்சனா பால்கனிக் கதவைத் திறந்து வந்து நின்றாள். முன்தினம் பெய்த மழையின் குளிர்ச்சி காற்றில் நீக்கமற நிறைந்திருந்தது.

கைகளை இறுகக் கட்டிக் கொண்டு, மூச்சை உள்ளிழுத்து கன்னிக் காற்றை சுவாசித்தாள். சாலையில் முப்பது வய தொத்த பெண்ணொருத்தி, சைக்கிள் காரியரில் மூலிகைச் சாறுகளை எடுத்துக் கொண்டு கடற்கரைக்குச் செல்வது சோடியம் விளக்கின் ஒளியில் தெரிந்தது.

உறக்கம் வராத பல சமயங்களில் காஞ்சனா இதுபோல் வந்து நிற்கும்போதெல்லாம் அப்பெண் கண்களில் விழுவ துண்டு. நேரம் காலம் பார்க்காத அவளின் அயராத உழைப்பைக் கண்டு வியப்பதுடன் மனதிற்குள் வாழ்த் தவும் செய்வாள்.

காஞ்சனா மாடியில் இருந்தபடியே கீழேப் பார்வையை ஓடவிட்டாள்.

ஐந்து கிரவுண்டு நிலத்தில் முன்புறம் விஸ்தாரமான தோட்டம். மெயின் கேட்டிலிருந்து போர்டிகோ வரை மெத்தென்ற புல்வெளி. வலப்புறம் முழுக்க ரோஜா உட்பட பலவகை பூச்செடிகள். இடப்புறம் முழுக்க

வரிசையாய் மா, பலா, சப்போட்டா உள்ளிட்ட ஏகப்பட்ட பழமரங்கள், வாசல் சுவரோரம் கரும்பு பயிரிடப்பட்டிருக்க, நடுவில் அழகிய குளம், அதில் தாமரை பூத்திருந்தது. பாட்மின்ட்டன் விளையாட வலை கட்டப்பட்டிருக்க, சற்றுத் தள்ளி, ஆடி, குதூகலிக்க ஊஞ்சலும் இருந்தது. அமர்ந்து இளைப்பாற உயர்ரக சேர்கள், கம்பீரமாய் வளைய, வர நான்கு ஜாதி நாய்கள் என ரசனையாய், வித்தியாசமாய் இருந்தது.

நடுவில் வெள்ளை வெளேரென்று பளிங்குக் கற் களால் மின்னிக் கொண்டிருந்தது ரசனையுடன் கட்டப் பட்டிருந்த பங்களா.

தோளில் கை வைத்து விழ, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

பாலகிருஷ்ணன்!

"என்னங்க... இவ்ளோ சீக்கிரம் எந்திரிச்சிட்டீங்க?"

"நான் கேக்க வேண்டிய கேள்வி? இந்நேரத்திலே இங்கே நின்னுக்கிட்டு என்ன பண்றே?" தூக்கம் விலகாத கரகரத்த குரலில் கேட்டார்.

"தூக்கமே வரலீங்க!"

"கண்டதையும் போட்டுக் குழப்பிக்காம வந்து படு. பனிக்காத்து... உனக்கு ஆகாது... உள்ளே வா!"

"எந்தக் குழப்பமும் எனக்கில்லீங்க. சொல்லப் போனா சந்தோஷத்துலதான் தூக்கமே வரலே!"

"அப்படியென்ன சந்தோஷம்? சொன்னா நானும் தூங்காம இருப்பேனே!"

"கிண்டல் பண்ணாதீங்க. விடிஞ்சா நம்ம ஷியா மோடப் பிறந்தநாளாச்சே?"

''.....!''

''என்னங்க அமைதியாய்ட்டீங்க?''

''ஒண்ணுமில்லே தேவி... எப்படியும் நாளைக்கு அர்ச் சனை, அன்னதானம்னு கோவில் கோவிலா ஏறி இறங்கப் போறே... அதுக்காவது உடம்புல எனர்ஜி வேணாமா? வாம்மா... மணி மூணரையோ, நாலோதான் ஆகுது. ரெண்டு மணி நேரமாவது வந்து படு!'' கைப்பிடித்து அழைத்துச் சென்றார்.

''இப்படி விடிய விடிய முழிச்சிக்கிட்டிருந்தா உடம்பு என்னத்துக்காகும்? நீயொரு ஹார்ட் பேஷண்ட். அதை மறந்துடாதே.. தூங்கு!'' விளக்கை அணைத்தார்.

''ஷியாமுக்குப் பிறந்த நாள்ங்கறேன்... எப்படித் தூக்கம் வருமாம்?'' சிணுங்கியபடி கண்களை மூடியவளுக்கு உறக்கம் கண்ணாமூச்சி காட்டியது.

இரண்டே நிமிடத்தில் பாலகிருஷ்ணனிடமிருந்து குறட்டைச் சத்தம் வெளிப்பட... கண்களை மூடி, பழைய வைகளை அசைபோட்டபடி விழித்திருந்தாள்.

* * *

வீடு முழுக்க சாம்பிராணிப் புகை!

நாசியில் ஏற... தொண்டைக் கமறியது. இருமிக் கொண்டே விழித்தார் பாலகிருஷ்ணன்.

இருட்டும், விடியற்காலையும் கைக்கோர்த்துக் கனிந்து கொண்டிருந்த ஐந்துமணிப் பொழுது!

சலிப்புடன் கீழே இறங்கி வந்தார். பூஜையறையில் ஈர டவலால் கொண்டை போட்டு மஞ்சள் மினுமினுக்க ஸ்லோகம் சொல்லியபடி தெய்வப் படங்களுக்கு பூப் போட்டுக் கொண்டிருந்தாள் காஞ்சனா தேவி.

''ஏம்மா, உன்னை நீயேக் கஷ்டப்படுத்திக்கறே? எப்போ எந்திரிச்சே.. அஞ்சு மணிக்கெல்லாம் பூஜையிலே உட்கார்ந்துட்டே... நான் கண்ணை மூடினதும் எழுந்து வந்திருப்பே... அப்படித்தானே?''

''சரி... அப்படித்தான் வச்சுக்குங்களேன்! நேரமாயாச்சு... போய் குளிச்சிட்டு வாங்களேன்...''

''இன்னும் ஒரு மணி நேரம் தூங்கிட்டு வர்றேனே... ப்ளீஸ் தேவி!''

''அதெல்லாம் முடியாது. இப்பவே லேட். சரியா ஆறரை மணிக்கு மணக்கேஸ்வரி அம்மன் கோவில்ல பாலாபிஷேகம். அதை முடிச்சிட்டு வித்யா மந்திர் முதியோர் இல்லம் அன்னதானத்தை முடிச்சிட்டு, சிவா விஷ்ணு கோவிலுக்கு வரணும்.''

மனைவியை கோபித்துக் கொள்வதா, பரிதாபப்படுவதா என்று புரியாமல் பெருமூச்சுடன் பாத்ரூம் நோக்கி நடந்த பாலகிருஷ்ணனுக்கு ஐம்பத்தைந்து வயது.

காலியான பூக்கூடையை ஓரமாக வைத்து விட்டு எழுந்தாள் காஞ்சனா தேவி.

''இன்னும் இதுங்க ரெண்டையும் எழுப்பி தயார்ப் படுத்தணுமே...'' அவசரமாய் இடப்பக்க அறையை நோக்கி நடந்தவளுக்கு ஐம்பது வயது.

தெய்வீகமான முகம். இளம் வயதில் பேரழகியாய் இருந்ததற்கான மிச்சங்கள் இன்னும் இருந்தன.

கை வைத்ததும் கதவு திறந்து கொள்ள உள்ளே சென்றாள்.

இழுத்துப் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தாள் மகள் வித்யா.

''வித்யா... வித்தும்மா... என் கண்ணு.. டைமாய்டுச்சிப் பார்! எந்திரிடா...''

''ம்...''

''எந்திரிடா செல்லம்!''

''நைட்ல ஏம்மா வந்து எழுப்பறே... தூக்கம் வருது... போம்மா...''

''நைட்டா... விடிஞ்சி ரொம்ப நேரமாய்டுச்சு... எந்திரிம்மா!'' போர்வையை உலுக்கினாள்.

பெட்ஷீட்டை விலக்கிச் சிணுங்கிய வித்யா, அம்மாவின் சாயலை பிரம்மனிடம் வாங்கி வந்திருந்தாள்.

''எனக்கு எட்டரை மணிக்கு காலேஜுக்குப் போனா போதும்மா... இப்ப எதுக்கு எழுப்பறே?''

''ஷியாம் அண்ணனுக்குப் பிறந்த நாள்டி... கோவிலுக்குப் போக வேணாமா?''

''வருஷா வருஷம் உன்னோட இதே தொல்லையாப் போச்சும்மா! அண்ணன் பர்த்டேயைக் கொண்டாட பெரியப்பா, பெரியம்மா இருக்காங்க... நீ வேற எதுக்கும்மா?''

''யார் பிள்ளையா இருந்தா என்ன? ஷியாம் எனக்கும் பிள்ளை தான். பேசிட்டிருக்க நேரமில்லே... எந்திரி!''

''ஏன் தான் இப்படி ஷியாம் பைத்தியம் பிடிச்சி அலையறியோத் தெரியலே...''

''பேசிட்டிருக்க நேரமில்லே... சீக்கிரம் ரெடியாகு!'' அழுத்தமாய் உச்சரித்துவிட்டு வெளியேறினார்.

அம்மா போன அடுத்த கணமே பெட்ஷீட்டை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுக்க... ''வித்யா'' என்ற அம்மாவின் அதட்டல் வந்தது.

''ச்சே... தூங்கக்கூட எனக்குச் சுதந்திரமில்லையா? உன்னை டைவர்ஸ் பண்ணாம விட மாட்டேன்!'' போர்வையைத் தூக்கி எறிந்து விட்டு அட்டாச்டு பாத்ரூமில் வித்யா புகுந்துக்கொள்ள... சிரித்தபடி விஷ்ணுவின் அறை நோக்கி நடந்தாள் காஞ்சனா.

அவன் அறைக்கதவைத் தட்ட கை ஓங்குமுன் கதவுத் திறந்தது.

'விஷ்ணு' என்று வாயெடுத்தவள் அசந்துப் போனாள்.

குளித்து முடித்து, அழகாக டிரஸ் பண்ணிக் கொண்டு தயாராக நின்றிருந்தான் விஷ்ணு!

''வி...ஷ்...ணு!'' நெகிழ்ந்தாள்.

''நான் ரெடிம்மா!''

''ரொம்ப தாங்க்ஸ்ப்பா!''

''பிள்ளைக்குப் போய் தாங்க்ஸா? வாபஸ் வாங்குங்க...''

''சரி... சரி... வா!''

அம்மா பின்னேயே சென்ற விஷ்ணுவுக்கு இருபத்தாறு வயது. அப்பாவின் தொழில்களையும், கோடிக் கணக்கான பணத்தையும் கட்டி மேய்த்துக் கொண்டிருப்பவன்.

வித்யா இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்து விட்டு சாப்ட்வேர் படித்துக் கொண்டிருக்கிறாள்.

ஷியாம்?

பாலகிருஷ்ணனின் அண்ணன் மேகநாதனின் மகன்!

2

அன்னதானம் முடித்து விட்டு குடும்பத்துடன் கோவிலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள் காஞ்சனா தேவி.

வித்யாவின் முகம் உம்மென்றிருந்தது.

''அம்மா... என்னை விட்ரும்மா... முக்கியமான க்ளாஸ் இருக்கு... நான் போகணும்!''

''பரவாயில்லே... இன்னைக்கு ஒரு நாள் லீவு போடு!''

''இதென்னம்மா அநியாயமா இருக்கு. கொஞ்சம் விட்டா... அங்கபிரதட்சணம் பண்ணுன்னு கூடக் கம்ப்பல் பண்ணுவே போலிருக்கே. நான் ஏன் ஷியாம் அண்ணனுக்காக லீவு போடணும்?''

''நல்ல நாளும் அதுவுமா என்கிட்டே வாங்கிக் கட்டிக் காதே... வாயை மூடிட்டு வா!''

''ஆமா... கிருஷ்ண ஜெயந்தி மாதிரி இன்னைக்கு ஷியாம் ஜெயந்தி! என் பிறந்த நாளைக்கூட, இல்லை... என்னை விடு, விஷ்ணு அண்ணாவோட பிறந்த நாளைக் கூட இந்தளவுக்கு நீ கொண்டாடியதில்லை. அப்படியென்ன அந்த ஷியாம் அவ்ளோ ஸ்பெஷல்... சரியான சிடுமூஞ்சி!''

''வித்யா... சும்மாயிருக்க மாட்டே?'' கோபத்துடன் கர்ஜித்தாள் அம்மா.

ஆடிப்போனாள் வித்யா.

பாலகிருஷ்ணன் மனைவியின் தோளைப் பிடித்து அழுத்தினார்.

''அவ சும்மா விளையாட்டுக்குச் சொல்றா... நீ ஏன் டென்ஷனாகறே தேவி?''

''.....?!''

''வித்யா... ப்ளீஸ்!'' மகளைப் பார்த்துக் கண்களால் கெஞ்சினார் பாலகிருஷ்ணன்.

அமைதியானாள் வித்யா.

இவை எதுவும் காதில் விழாதது போல் கவனமாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் விஷ்ணு.

பாலகிருஷ்ணனும் கவனிக்காமல் இல்லை.

ஒன்றாகக் கூடியிருக்கிற பல சமயங்களில் இதுபோல் ஷியாம் பற்றிய விவாதங்கள் எழுவதுண்டு. அப்போதெல்லாம் விஷ்ணு மவுனமாகவே இருப்பான்.

பொறாமையா, ஒதுங்கிப் போகிறானா?

புரியவில்லை.

தோளில் கை வைத்தார்.

''என்னப்பா?'' புன்னகையுடன் கேட்டான்.

''ஏதோ, யோசனையிலே இருக்கேப் போல...''

''ஆபீஸ்ல ஒரு டீலிங் மேட்டர் இருக்கு. அதைப் பத்தி யோசிச்சிட்டிருந்தேன்.''

''தப்பாச்சே... கார் ஓட்டிக்கிட்டிருக்கும்போது... அதைத் தவிர வேற யோசனை... ஆபத்தில்லையா?''

''ஸாரிப்பா...!''

''பீ கேர் புல்?''

சற்று நேரத்தில் கோவில் வந்துவிட... காரை ஓரம் கட்டினான்.

காரிலேயே செருப்பைக் கழற்றிப் போட்டுவிட்டு அனைவரும் இறங்கினர்.

பூக்கடையில் சரம் சரமாய் மாலைகள் வாசமுடன் தொங்கிக் கொண்டிருந்தன.

நான்கைந்தை வாங்கிக் கொண்டாள் காஞ்சனா.

''எதுக்கு இத்தனை மாலை? ஒண்ணு போதா?'' முணுமுணுத்தாள் வித்யா.

''என்னது?'' அவள் பக்கமாய் திரும்பிக் கேட்டாள் காஞ்சனா.

''ஒண்ணுமில்லையே!''

''இல்லே... இப்ப என்னவோ சொன்னியே!''

''எவ்ளோ மாலைங்கத் தொங்குது பார்'னு ஆச்சர்யப் பட்டேன்... வேறொண்ணுமில்லே!''

''ஓஹோ...!''

''இப்படிக் கொடு தேவி... எல்லாத்தையும் நீயே சுமக்கிறே!'' மாலைகளை வாங்கிக் கொண்டார் பால கிருஷ்ணன்.

வித்யா மணிக்கட்டைத் திருப்பி நேரம் பார்த்தாள்... வேண்டுமென்றே... அம்மா பார்க்கும்போது.

''என்ன?'' முறைத்தாள் அம்மா.

''வாட்ச்சுல முள்ளு ஒடுதான்னுப் பார்த்தேன்!''

''திமிருடி!''

''இது கோவில்லம்மா... பக்தியிலே மட்டும் தான் கான்சன்ட்ரேஷன் இருக்கணும்.. ஒக்கே?''

''ஒக்கே டாடி!''

ஒரு சன்னிதானம் விடாமல் எல்லா சுவாமிகளுக்கும் அர்ச்சனை செய்தாள் காஞ்சனா.

''கிளம்பலாமா தேவி?''

''ம்'' என்றாள் பூரிப்புடன்.

''திருப்தியா?''

''ரொம்பவே!''

''சரி... வா!''

அனைவரும் வாசலுக்கு வரவும்... கறுப்பு நிற கான்டஸா வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

அதிலிருந்து முதலில் மேகநாதனும், அவர் மனைவி அம்சவேணியும் இறங்கி வர... டிரைவிங் சீட்டில் ஷியாம்!

பாலகிருஷ்ணனும், காஞ்சனாவும் தர்ம சங்கடத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அவர்களும் இவர்களை எதிர்பார்க்கவில்லை.

வாய்நிறையச் சிரிப்புடன் நெருங்கி வந்தனர்.

''வாங்கண்ணா... வாங்கண்ணி!''

''அடடே பாலா... எங்களுக்கு முன்னாடி நீங்க முந்திக் கிட்டீங்களா? எப்படிம்மா இருக்கே காஞ்சனா?''

''நல்லாயிருக்கேங்க'' ஒதுங்கி அம்சவேணி அருகில் நின்று கொண்டாள்.

''உடம்புக்கு முடியலேன்னு கேள்விப்பட்டேன். இப்ப பரவாயில்லையா காஞ்சனா?'' அம்சவேணி பரிவுடன் விசா ரிக்க... ''பரவாயில்லைக்கா!'' என்றாள் குரல் அமுங்கி.

"பிஸினஸ் எப்படிப் போகுது விஷ்ணு?"

"அமர்க்களம் பெரியப்பா!"

"வித்யாக்குட்டி ஒழுங்காப் படிக்கிறியா?"

"ஒழுங்கா காலேஜ் போக விட்டா... நல்லாவேப் படிப்பேன் பெரியப்பா! கோவில், குளம்னு என் டைமை வேஸ்ட் பண்றாங்க."

"அதானே... படிக்கிற புள்ளைய படிக்க விடாம ஏன் டிஸ்டர்ப் பண்றீங்க!" என்று வாய் விட்டுச் சிரித்தார் மேகநாதன்.

ஷியாம் கார்க் கதவைப் பூட்டிவிட்டு அருகில் வர... விஷ்ணு கையை நீட்டினான்.

"மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே ஷியாம்!"

அவனை அசட்டை செய்தவனாய் நகர்ந்தவன், தலை கவிழ்ந்திருந்த காஞ்சனா தேவியை அலட்சியமாய் பார்த்து விட்டு கோவிலுக்குள் நுழைந்தான்!

போனால் போகட்டும் வாழ்த்துச் சொல்லுவோம் என்று வாயெடுத்தவள், அண்ணனுக்கு கிடைத்த 'மரியாதை'யை கண்டு வாயை மூடிக் கொண்டாள்.

அலட்சியப்படுத்தப்பட்டதில் விஷ்ணுவின் முகம் மாறியது.

மேகநாதன் தம்பதியர் சங்கடத்தில் நெளிய... காஞ்சனாவின் கண்களில் கண்ணீர். பாலகிருஷ்ணனின் முகமும் கூம்பிப் போயிருந்தது.

அம்சவேணி, காஞ்சனாவின் கைகளை ஆறுதலாய்ப் பற்றியவுடன், விசும்பினாள்.

"அவனுக்காகத்தான் அர்ச்சனைப் பண்ண வந்தேன்."

"ஷியாம் பத்தி உனக்குத்தான் தெரியுமே காஞ்சனா. கொஞ்சம் முரட்டுத்தனம் ஜாஸ்தி. எதையும் மனசுல வச்சுக்காதே..."

"ம்..."

"ஈவ்னிங் வீட்லே பார்ட்டி இருக்கு... குடும்பத்தோடு வந்திடணும் பாலா..."

"அது எப்படிண்ணா...?"

"ஷியாம் பண்றது சிறுபிள்ளைத்தனம். பெரிசுப் பண்ணாதே. உன் பிள்ளையா இருந்தா மன்னிக்க மாட்டியா? வந்து வாழ்த்துப்பா!"

அண்ணனை ஏறிட்டு தலையாட்டிவிட்டு மவுன மானார்.

"டாடி... எனக்கு நேரமாச்சுக் கிளம்பலாமா?"

"வித்யாக்குட்டி கோபமா இருக்காப்போலத் தெரியுது."

"ஆமாம் பெரியப்பா... இல்லேன்னு கோவில்ல வச்சு பொய் சொல்லக் கூடாதில்லையா? நான் கார்ல இருக்கேன். வாண்ணா!" விஷ்ணுவின் கைப்பற்றி இழுத்துச் சென்றாள்.

* * *

ஒரு வழியாய் அர்ச்சனை முடிந்தது.

"சரி... புறப்படுவோமா?"

"என்ன ஷியாம் அவசரப்படறே... கோவிலுக்கு வந்தா கொஞ்ச நேரம் உட்காராமப் போகக் கூடாது. சித்த உட்காரு!" அம்மா கைப்பற்றி அமர வைக்க, எரிச்சலுடன் அமர்ந்தான்.

"அவன் அவனுக்கு ஆயிரம் வேலைங்க. சமயம், சாஸ்திரம், சம்பிரதாயம்னு சொல்லி நேரத்தைக் கொன்னு...

அரசாங்கத்துக்கு அதனால கிடைக்க வேண்டிய வரு மானத்திலேயும் கைய வைக்கறீங்க. எப்பதான் உருப்படப் போறீங்களோ?'' அலுத்துக் கொண்டான்.

''கோவில்ல வச்சு இப்படியெல்லாம் பேசக் கூடாதுப்பா!''

''.....?!''

''ஏன் ஷியாம் அப்படி நடந்துக்கிட்டே?'' என்ற அப்பாவை அழுத்தமாய்ப் பார்த்தான்.

''எப்படி நடந்துக்கிட்டேன்?''

''விஷ்ணு வாழ்த்துச் சொன்னப்ப... இன்டீசன்ட்டா பிஹேவ் பண்ணினது... பார்க்க நல்லாவா இருக்கு?''

''அவன் யார் எனக்கு வாழ்த்துச் சொல்ல?''

''உனக்காகத்தான் ஷியாம் குடும்பமே கோவிலுக்கு வந்திருக்கு. நீ நல்லாயிருக்கணும்னு அன்னதானமெல் லாம் பண்ணிட்டு வந்திருக்காங்க.''

''அதைத்தான் கேக்கறேன். இவங்க யார் இதையெல் லாம் செய்ய? எனக்காக செய்யறாங்களா, இல்லே செஞ்ச பாவத்தைப் போக்க புண்ணியம் தேடிக்கறாங்களா?''

''சரி... சித்தப்பா, சித்திக்கிட்டே கோபம்! அந்த வித்யா என்ன பண்ணினா? காலேஜுக்கு லீவுப் போட்டுட்டு வேண்டிக்க வந்தவளை கோபமா முறைச்சியே! பாவம்... சின்னப்பிள்ளை... மிரண்டுட்டா! சரி... ஒண்ணு கேக்கறேன்... தீப்தி உன் தங்கச்சி தானே? கோவிலுக்கு வரச் சொல்லிக் கெஞ்சிக் கூப்பிட்டோமே... வந்தாளா?''

''அவளுக்கு முக்கியமான க்ளாஸ் இருக்கு... அதுதானே முக்கியம்?''

''வித்யாவுக்கும் முக்கியமான க்ளாஸ் இருந்தது ஷியாம்...''

''போதும்ப்பா... அந்தக் குடும்பத்தைப் பத்திப் பேசி எரிச்சலை உண்டாக்காதீங்க. என் மூடையே ஸ்பாயில் பண்ணிட்டாங்க. சே!'' கோபமுடன் எழுந்தவன், காரை நோக்கி நடந்தான்.

3

காரை வேகமாக ஓட்டினான் ஷியாம்!

பெற்றோருக்கு அவன் கோபம் புரிந்தது. எதுவும் பேசாமல் அமைதி காத்தனர்.

வீடு வந்து சேர்ந்தனர்.

ஷியாம் மட்டும் காரை விட்டு இறங்கவில்லை.

''வாப்பா...!''

''இல்லே டாடி... நான் அப்படியே ஆபீஸ்க்குப் போறேன்!''

''என்ன ஷியாம்... பிறந்த நாளாச்சேன்னு ஸ்பெஷலா, வெரைட்டியா, ஏகப்பட்ட அய்ட்டம் சமைக்கச் சொல்லி யிருக்கேன். நீ என்னடான்னா எதுவும் சாப்பிடாமப் போறேங்கறே...!''

''மனசு சரியில்லே மம்மி... விட்ருங்க!''

''நாங்க என்னப்பா பண்ணினோம்? எங்க மனசைப் புண்படுத்தறியே...!''

''ஐயோ... நீ வேற ஏம்மா சென்டிமெண்ட் டயலாக் எல்லாம் பேசி கஷ்டப்படுத்தறே... வர்றேன் போங்க!'' என்று அனுப்பி வைத்தான்.

காரிலிருந்து இறங்கிய ஷியாம் மெத்தென்ற தோட்டத்துப் புல்வெளியில் அமர்ந்தான்.

கைகளைப் பின்பக்கமாய் வைத்து கால்களை நீட்டியவன் கண்களுக்கு பிரம்மாண்ட பங்களாத் தெரிந்தது.

பங்களா மட்டுமே இருபது கோடி. இதுப்போன்று ஏகப்பட்ட பங்களாக்கள், வீட்டு மனைகளை வாங்கிப் போட்டிருக்கிறார் மேகநாதன்.

எல்லாத் தொழில்களையும் ஒரு கைப் பார்த்தவர் மேகநாதன். பட்டு நெசவுத் தொழிலைக் கூட விட்டு வைத்ததில்லை. அப்படிப்பட்ட பிஸினஸ் சாம்ராட்!

துவக்கத்தில் தம்பியும், அவருமாகச் சேர்ந்து தான் பிஸினஸ் செய்தனர். பணம் கொட்டியது. ஆனால் ஷியாம் தலையெடுத்தபோது, அவன் விருப்பப்படி பிஸினஸ் உடைந்தது. ஷியாம் பொறுப்பேற்றான். அபார திறமை சாலி என்பதால் பத்தை நூறாக்கினான்.

விஷ்ணுவிற்கு ஷியாம் அளவிற்கு பிஸினஸ் தகிடுதத்தங்கள் தெரியாது என்பதால்... அவன் அளவிற்கு உயர முடியவில்லை. முட்டி மோதித்தான் லாபம் பார்த்தான். அவன் பிஸினஸில் வேகமாய் ஓடி வெற்றிக் கனியைப் பறிக்கும்போது, நடு வழியிலேயே கல் வைத்து தடுக்கி விழ வைப்பது ஷியாமிற்குப் பிடித்த விளையாட்டு மட்டுமல்ல, லட்சியமே அதுதான்.

ஷியாம் ஏன் தன்னை கவிழ்ப்பதற்கான அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்கிறான் என்பது விஷ்ணுவிற்குப் புரியவில்லை. ஆனால், அது அவனின் பெற்றோருக்கும், இவனின் பெற்றோருக்கும் மட்டுமே தெரியும்.

அந்தக் குடும்பத்தை ஒரு வழி பண்ணாமல் விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான் ஷியாம்.

ஏன்?

ஆழ்ந்த யோசனையில் இருந்தவனின் தோள் மீது வலிமையான கரமொன்று மென்மையாய் அமர்ந்தது.

திடுக்கிட்டுத் திரும்பினான்.

அப்பா!

"என்னப்பா?"

"நேரமாச்சே... பசிக்கலையா? எந்திரி..."

"நீங்க போங்கப்பா... வர்றேன்."

"உனக்காக ரொம்ப நேரம் வெய்ட் பண்றோம் ஷியாம். அம்மா சாப்பிட்டு மாத்திரைப் போட வேண்டாமா?"

ஷியாம் எழுந்தான்.

"சியர் அப்! பர்த் டேயும் அதுவுமா டல்லாயிருக்காதே கமான்!"

போனால் போகட்டும் என்று கொஞ்சமாய் சிரித்து வைத்தான்.

நான்கு வேலைக்காரர்கள் காத்திருக்க, அவர்களை கையமர்த்தி விட்டு தானேப் பரிமாறினாள் அம்மா.

ஏகப்பட்ட உணவு வகைகள் சுடச்சுட பரிமாற தயாராய் இருந்தன.

மகனுக்கும் கணவருக்கும் வெள்ளித் தட்டுகளை வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள்.

"என்னம்மா இது இவ்ளோ ஐட்டம்?"

"உன் பர்த்டேன்னா சும்மாவா? உனக்கு 'நான் வெஜ்'ன்னா ரொம்பப் பிடிக்குமே? அதுவும் என் கையால ஆட்டுக்கால் சாப்ஸ் செய்தா நல்லா சாப்பிடுவியே. அதான் செய்தேன்."

"அதுக்காக இப்படியா? பரோட்டா, மட்டன் தொக்கு, தோசை, மூளை வறுவல், இட்லி, சிக்கன் குருமான்னு மட்டனையும், சிக்கனையும் ஒரு வழி பண்ணியிருக்கியே!"

"காலைல எந்திரிச்சா ஒழுங்கா ரெண்டு வாய் சாப்பிட முடியுதா உன்னால? கம்பெனிக்கு ஓடிடறே! ஏதோ பிறந்த நாளை சாக்கா வச்சாவது உன்னைச் சாப்பிட வைக்கணும்னு ஆசை... மிச்சம் வைக்காம சாப்பிடுப்பா."

"பத்து நாள் சாப்பாடை வச்சு மிச்சம் வைக்காம சாப் பிடுங்கறியே... உனக்கு மனசாட்சியே இல்லையாம்மா?"

"இந்த வயசுல சாப்பிடாம எந்த வயசுல சாப்பிடறதாம்? மதியத்துக்கு ஹைதராபாத் பிரியாணி ரெடியாய்ட்டிருக்கு. உனக்குத்தான் ரொம்பப் பிடிக்குமே ராஜா!"

"பிரியாணியா? கடவுளே காப்பாத்து!" மயக்கம் வருவது போல் நடித்தான்.

அவன் செய்கைக்கு லோகநாதனும், அம்சவேணியும் சிரிக்க, அவன் பாக்கெட்டிலிருந்த செல்போன் அலறியது.

"ஹலோ..."

"ஹாய்... ஷியாம்... நான்தான் ரேவதிப் பேசறேன்."

"வாவ்... ரேவதிக்கா எப்படியிருக்கே?"

"ரேவதியா, ரேவதியா?" பெற்றவர்கள் பரபரத்தனர்.

"எனக்கென்ன... யு.எஸ்ல. சகல சவுபாக்கியத்தோட குடும்பத்தோட நல்லாயிருக்கோம். மெனிமோர் ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே..."

"பரவாயில்லையே ஞாபகம் வச்சிருந்து வாழ்த் தறியே!"

"என்ன பேச்சு பேசறே? என் தம்பியோட பர்த்டேயை நான் மறப்பேனா? உனக்கும் வயசாகிட்டேப் போகுதே? அதனால இங்கே சுப்பரா ஒரு தமிழ்ப் பொண்ணைப் பார்த்து வச்சிருக்கேன்... முடிச்சிடலாமா ஷியாம்?"

"ஐய்யே... அமெரிக்காப் பொண்ணா? உவ்வே... கலரிங் ஹேர், மைதா மாவுக் கலர், வழவழா இங்லீஷ், மேக்ஸி, மினின்னு கண்றாவி டிரஸ்ஸிங் சென்ஸ்... நான்சென்ஸ்... ஸாரிக்கா... என் டேஸ்ட்டே வேற..."

"ஸ்டாப்... ஸ்டாப்... நான் என்ன அமெரிக்காப் பொண் ணுன்னா சொன்னேன்? அமெரிக்காவுலப் பிறந்த அக்மார்க் தமிழ்ப் பொண்ணு. ஸ்டைலிஷா இருந்தாலும் ஓரளவுத் தமிழ் பேசுவா? அங்கே வந்து எல்லாத்தையும் கத்துக்குவா!"

"ம்ஹூம்... என் டேஸ்ட்டே வேறன்னு சொன்னேனே... பாரின் மோகம் என்னிடம் இல்லை. தமிழ்நாட்ல பிறந்த தமிழ்ப் பொண்ணுதான் எனக்கு வேணும். நிறையப் படிச்சிருந்தாலும் அலட்டாம தமிழ்ப் பேசற, சமையல் தெரியலேன்னாலும், சமைக்கிற ஆர்வம் இருக்கிற, கரு கரு கூந்தலோட, தலைநிறைய மல்லிப் பூச்சூடிக்கிற, மாமனார், மாமியாரை, அப்பா அம்மாவா நினைக்கிறப் பொண்ணு போதும் எனக்கு. நடுவிலேப் புகுந்து நீ வேற குட்டையக் குழப்பாதே! இரு... அம்மா பேசணுமாம்..." என்று போனை அம்மாவிடம் கொடுத்தான்.

"சொல்லு ரேவதி... நல்லாயிருக்கியா? கிரணும், கிருத்தி காவும் எப்படியிருக்காங்க? மாப்பிள்ளை ஆபீஸ்க்குப் போய்ட்டாரா? ஆமா, என்னவோ பொண்ணு, கிண் ணுன்னு காதிலே விழுந்துச்சே... யாரு, என்ன ஜாதி?" அம்மா அவளுக்கே உரிய ஆவலுடன் விசாரிக்க...

ஷியாமின் கண்ணுக்குள் பாவனா ரம்யமாகச் சிரித்தாள். அவளை மனத்திரையில் மறுபடி மறுபடி ரீவைண்ட் பண்ணி ரசித்து... சிலிர்த்தான்.

* * *

வீடு மொத்தமும் காஞ்சனாவைச் சுற்றி ஆவலுடன் அமர்ந்திருந்தது. அவள் முன் உடைகளடங்கிய அட்டைப் பெட்டிகள் வீற்றிருந்தன.

தீபாவளி வரப்போகிறதே! அதற்கான புத்தாடைகள் தான்!

எவ்வளவு வசதி வாய்ப்புகள் இருந்தாலும் வீட்டில் உள்ள அனைவருக்கும், நாள் கிழமை, பண்டிகை என்றால் காஞ்சனாதான் உடை வாங்கி வருவாள். பொதுவாகவே தேர்வு செய்து வாங்குவதில் காஞ்சனா கில்லாடி. அந்த அன்புக்கு அடிபணிந்த அக்குடும்பத்தினர் மறுசொல் பேசாமல் சந்தோஷமாய் வாங்கி உடுத்திக் கொள்வர்.

முதலில் தன் கணவரிடம் ஒரு கவரை நீட்டினாள். பிரித்துப் பார்த்தவரின் முகத்தில் மகிழ்ச்சி.

பட்டு வேட்டி, சட்டை!

அழுத்தமான தங்க சரிகையுடன் சந்தன கலர் வேட்டி, அதே கலரில் பட்டு சட்டை.

"நல்லாயிருக்கு தேவி, குட் செலக்ஷன்!"

"இது உனக்கு விஷ்ணு!"

உயர்ரக பேண்ட் சட்டை!

"என்னிடம் இல்லாத கலர்... ரொம்ப நல்லாயிருக்கும்மா!"

"சந்தோஷம் விஷ்ணு... நான் எதை எடுத்து வந்தாலும் உனக்குப் பிடிச்சிருக்கே..."

"நல்ல ரசனைம்மா உனக்கு... அதனால நீ எதை செலக்ட் பண்ணி எடுத்து வந்தாலும் டாப்பாதான் இருக்கும்."

"ரொம்ப ஐஸ் வைக்காதேண்ணா... அம்மா இதானே எனக்கு...? அட... பட்டுப் புடவையா... ஏம்மா சுரிதார், காக்ரா சோளி இப்படி எடுத்திருக்கலாமே!"

"ம்ஹூம்... கல்யாண வயசு வந்தாச்சு. இனி புடவை தான் உனக்கு."

"ம்... ம்..." சிணுங்கினாள் வித்யா.

"உனக்கு என்ன எடுத்தே... காட்டு?"

பாலகிருஷ்ணனே ஒரு கவரை எடுத்துப் பிரித்துப் பார்க்க... மயில் நிறத்தில் குங்குமக் கரையிட்ட பட்டுப் புடவை.

"நல்லாயிருக்கு தேவி... உன் கலருக்கு ஏத்த கலர். ஆமா... இந்த கவர் யாருக்கு?"

பாலகிருஷ்ணன் வியப்பாய் பார்க்க, வித்யா சட்டென எடுத்துப் பிரித்துப் பார்த்தாள்.

"ஏய்... அதை எடுக்காதே..." என்று காஞ்சனா தடுப்பதற்குள் பிரித்துப் பார்த்து விட்டாள் வித்யா.

"அண்ணா... உனக்குத்தான். இன்னொரு செட் வாங்கியிருக்காங்க..."

"இ... இல்லே... இது விஷ்ணுவுக்கில்லே..." என்றாள் தயங்கி.

"பின்னே? அப்பா இந்த மாதிரி ரேமண்ட் குட் எல்லாம் போடமாட்டாரே... அதுவும் ஃபார்ட்டி ஃபோர் அண்ணாவோட சைஸ் ஆச்சே..."

"இது... இது... ஷியாமுக்கு!"

"ஒரு முக்கியமான போன் பண்ண வேண்டியிருக்கு" நாசூக்காய் நழுவினான் விஷ்ணு.

வித்யா அம்மாவை ஏளனமாய் பார்த்தாள்.

"நீயெல்லாம் திருந்தவேப் போறதில்லேம்மா!" தலையில் அடித்துக் கொண்டே எழுந்து சென்றாள்.

பாலகிருஷ்ணன் மனைவியை ஆழமாய்ப் பார்க்க... காஞ்சனா எதுவும் நடவாதது போல் டிரஸ்ஸுடன் தன் னறைக்குச் சென்றாள்.

பாலகிருஷ்ணனும் பின் தொடர்ந்தார்.

4

சுவற்றோடு பதிக்கப்பட்டிருந்த பெரிய வார்ட் ரோபைத் திறந்தாள் காஞ்சனா.

ஏகப்பட்ட உடைகள் மடிப்புக் கலையாமல் அடுக் கப்பட்டிருந்தன.

"வழக்கம்போல... முகவரி எழுதப்படாத கடிதம் போல... இந்த உடையும், கேட்பாரற்றுக் கிடக்கும் இந்த உடை களோடு சங்கமம் ஆகப் போகிறது. அப்படித் தானே?"

".....?!"

"என் தேவி, எதுக்காக இப்படியெல்லாம் நடந்துக் கறே? ஷியாம் பத்தி நல்லாத் தெரிஞ்சிருந்தும், என் இந்த கன் மூடித்தனமான அன்பு?"

"என்னு உங்களுக்குக் கூடவாப் புரியலே?" குரல் நெகிழ்ந்திருந்தது.

இதயத்திலிருந்து பெருமூச்சு எழுந்தது.

அவளின் தோளை மெல்ல அழுத்திக் கொடுத்து விட்டு வெளியில் சென்றார்.

* * *

ஷியாம் தந்தையை கவலையுடன் பார்த்தான்.

"என்னப்பா செய்யுது?"

"காய்ச்சல் அதிகமாயிருக்கு. கை காலை அசைக்க முடியலை... வலி அதிகமாயிருக்கு." வலியில் முகம் சுருங்கச் சொன்னார் மேகநாதன்.

"ஷியாம் இப்படி வாப்பா!"

மகனைத் தனியே அழைத்துச் சென்றாள் அம்சவேணி.

"என்னம்மா?"

"எனக்கு ரொம்ப பயமாயிருக்குப்பா. கை, காலை அசைக்க முடியலேங்கறாரே... ஒருவேளை பராலிசிஸ்..."

"சேச்சே... சான்ஸே இல்லேம்மா! அப்பா தவறாம உடற்பயிற்சி, யோகான்னு செய்யறவர். ஒரு நாள் கூட காய்ச்சல், தலைவலின்னு படுத்ததில்லை. நான் நினைக் கிறேன்... சிக்குன் குனியாவா இருக்கும்னு."

"அப்படின்னா?"

"இப்ப நம்ம ஊர்ல வேகமாப் பரவிட்டு வர்ற நோய். கொசுக்கடிக்கறதால வருது. இதைப் பத்தி அப்புறமா டீட்டெய்லா சொல்றேன். மொதல்ல பீவரை கண்ட் ரோல் பண்ணனும். உடனே டாக்டருக்கு போன் பண் றேன்."

"அவசியம் இல்லேண்ணா... நான் பண்ணிட்டேன். வந்துட்டே இருக்கிறார்" என்றாள் தீப்தி.

"வெரிகுட்... வெரிகுட்... ஒரு நிமிஷம்..." என்றவன் பாக்கெட்டிலிருந்து ஒரு செல்போனை எடுத்தான்.

"இந்தா தீப்தி... கேமரா செல்போன் வேணும்னு கேட்டிருந்தியே..."

"வாவ்... சூப்பரா இருக்குண்ணா... தாங்க்யூ... தாங்க்யூ ஸோ மச்!" அவனின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு ஓடினாள்.

"எதுக்கு ஷியாம்... இதுவரைக்கும் அஞ்சாறு செல் போன் வாங்கிக் குடுத்திட்டே! அவ கேக்கறதை எல்லாம் வாங்கிக் குடுக்கறே... தப்பில்லையா?"

"என்ன தப்பு? எக்கச்சக்கமா சம்பாதிக்கிறேன். அவ ஆசைப்பட்டதை வாங்கித் தராம, எதுக்குப் பணம்? தீப்தி நம்ம வீட்டு இளவரசிம்மா. ஷியாமோட தங்கச்சி. அவ ளோட ஆசையெல்லாம் காஸ்ட்லியாதான் இருக்கணும்."

"என்னமோப்பா..."

* * *

சரவணா மருத்துவமனை!

காரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு ரிசப்ஷன் நோக்கி நடந்தார் பாலகிருஷ்ணன்.

"இங்கே மேகநாதன்னு ஒரு பேஷண்ட் நேத்து நைட்டு அட்மிட் ஆனார். அவர் எந்த ரூம்னு சொல்ல முடியுமா?"

"ஓ... அந்த சிக்குன் குனியா கேஸா? தேர்ட் ப்ளோர் ஒன் நாட் நைன்!"

"தேங்க்யூம்மா..."

லிப்ட் நோக்கி நடந்தார்.

அப்போது வளைவிலிருந்து வேகமாய் வெளிப்பட்ட ஸ்ட்ரச்சர்... பாலகிருஷ்ணனின் மீது மோத...

நிலைகுலைந்து விழுந்தார்.

சுற்றியிருந்தவர்கள் பதற... சிலர் அவரைத் தூக்கி விட முயற்சித்தனர்.

"ஏன்யா பார்த்து வரக்கூடாது? என்னமோ மவுண்ட் ரோடுல கார் ஓட்டிக்கிட்டு வர்ற மாதிரி நினைப்பா? பெரிய மனுஷன்... அடிகிடிப்பட்டிடுச்சோ..."

"ஸாரி சார்... தப்பு என் மேலதான்... வேகமா வந்திருக்கக் கூடாது... ஸாரி சார்..." என்றான் தயவாய் பணியாள்.

எழுப்பி நிற்க வைக்கப்பட்ட பாலகிருஷ்ணனுக்கு இடுப்பில் நல்ல அடி. வலியில் கண்கள் துளிர்த்தது.

"ஸாரி... சார்... என்னைப் போட்டுக் குடுத்துடாதீங்க... புள்ளக்குட்டிக்காரன்..."

"இவனையெல்லாம் சும்மா விட்ராதீங்க சார். நிர் வாகத்துல கம்ப்ளைண்ட் பண்ணுங்க..."

பாலகிருஷ்ணன் அந்த பணியாளைப் பார்த்தார்.

கன்னம் ஒடுங்கி, வறுமையின் கோரப் பிடியில் வலுவாக சிக்கி பரிதாபமாய்த் தெரிந்தான்.

அவன் தோளில் தட்டி, "போப்பா... இனி பார்த்து நடந்துக்க" என்றார்.

"தாங்க்ஸ் சார்!"

"ஏன் சார் சும்மா விட்டீங்க... மிதப்புல இருக்கானுங்க..."

"என் மேலேயும் தப்பு இருக்கு சார்... நானும் வேகமா வந்ததாலதான்... விடுங்க சார்..." என்றவர் அவனைப் பார்த்து விட்டார்.

கூட்டத்தில் ஒருவனாக கைகட்டியபடி, கண்களில் ஏளனம் மின்ன... ஷியாம்!

இவ்வளவு நேரமும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தானா?

மனசு வலித்தது.

"ஷியாம்..."

"ம்..."

"நான் விழுந்தப்ப... பதறி, அலறி, கைத்தூக்கி விட்டவங்கள்லாம்... என் உறவுக்காரங்க இல்லே. ஆனா... நீ? வேடிக்கைப் பார்த்துக்கிட்டிருந்தியே... ஏன் ஷியாம்?"

"ஏன்னு உங்களுக்குத் தெரியாது?!" அர்த்தமுடன் ஒரு கேள்வியை வீசிவிட்டுக் கீழிறங்கிச் சென்றான்.

கூனிக்குறுகிப் போனார் பாலகிருஷ்ணன்.

* * *

தன் அலுவலகத்தில் தீப்தியை எதிர்பார்க்காத விஷ்ணு ஆச்சர்யத்தில் உறைந்துப் போனான்.

"ஹேய்... தீ..ப்..தி... வா... வா...!"

கைப்பற்றி அமர்த்தினான்.

"நல்லாருக்கியாண்ணா?"

"ம்... நல்லாருக்கேன். பெரியப்பாவுக்கு இப்ப எப்படியிருக்கு?"

"பாடி பெய்ன்தான் இருக்கு. மத்தபடி நல்லாயிருக்கார். அம்மாவும் ஓக்கே!"

"அப்புறம்... ஷியாம்..?"

"அவர் படா பிஸி! என்கிட்டே கூடப் பேச நேரமில்லைன்னா பார்த்துக்கோயேன்."

"என்ன இவ்ளோ தூரம் சர்ப்ரைஸ் விசிட்?"

"காரணமாதான். போன்ல சொன்னா எந்தளவுக்கு ரெஸ்பான்ஸ் தருவீங்களோ தெரியாது. அதனாலதான் வீட்டுக்குப் போய் சித்தி, சித்தப்பாவை இன்வைட் பண்ணிட்டு நேரே இங்கே வர்றேன். வித்யாக்கிட்டேயும் சொல்லியாச்சு."

"என்ன விஷயம்மா?"

"கமிங் ப்ரைடே என் பர்த்டே! ஈவ்னிங் பார்ட்டி! முக்கியமான ரிலேடிவ்ஸ், ப்ரண்ட்ஸ் மட்டும் இன்வைட் பண்ணியிருக்கேன். அதிலே என் விஷ்ணு அண்ணாவும் அடக்கம்!"

"என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள். பட், அன்னைக்கு..."

"ப்ரைம் மினிஸ்டரோட மீட்டிங்கே இருந்தாலும் கேன்சல் பண்றீங்க. நோ மோர் டாக்ஸ்!"

உள்ளுக்குள் சங்கடப்பட்டாலும் அவளை மனம் நோகவைக்க விரும்பவில்லை.

"சரி..." என்றான்.

"தாங்க்ஸ்ண்ணா... இது லன்ச் அவர்... சாப்பிடப் போகலே?"

"போகணும்மா!"

"அப்பக் கிளம்புங்க..."

"ரெண்டு பேரும் நல்ல ரெஸ்டாரண்ட் போகலாமா?"

"ம்ஹூம்... என்னை தேனாம்பேட்டையிலே ட்ராப் பண்ணிடுங்க. என் டூ வீலர் நடுவழியிலே காலை வாரி விட்ருச்சு. மெக்கானிக் ஷாப்ல விட்டிருக்கேன்."

"அதுக்குதான் இவ்ளோ கரிசனமா விசாரிச்சியா? எனிஹவ்... சாப்பிட்டுட்டே தேனாம் பேட்டைப் போக லாமே!"

"வேண்டாண்ணா... பாவனா கிளம்பிடுவாங்க. அவங்க ரொம்ப பிஸி... சீக்கிரம் போய் பிடிச்சிடணும்."

"பாவனா? யாரது?"

"வாங்க... இன்ட்ரடியூஸ் பண்றேன்!"

அடுத்த இருபதாவது நிமிடத்தில் லிப்டில் இருந்து பயணப்பட்டு மூன்றாவது மாடியில் இறங்கினர்.

'கோல்ட் எபெக்ட்ஸ்.'

என்று தங்க நிறத்தில் மின்னிய போர்டின் வாயிலில் வந்து நின்றனர்.

கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

சிலீரென்ற ஏசிக் காற்று உடலை தழுவி வரவேற்றது.

பதினைந்து, இருபது கம்ப்யூட்டர் முன்பு நாகரீகமான ஆண்களும், பெண்களும் அமர்ந்து மவுஸைப் பற்றி யிருந்தனர்.

ஒரு கண்ணாடிக் கதவை டொக்கினாள் தீப்தி.

"கம்மின் தீப்தி!" என்று குரல் வர... உள்ளே நுழைந் தனர்.

பளிச்சென்று தேவலோகப் பெண்ணொருத்தி எளிய அலங்காரத்தில் அமர்ந்திருப்பது போலிருந்தாள் பாவனா.

விஷ்ணு பிரம்மித்துப் போனாள்.

"ஹேய்... தீப்தி... வா... வா... சிட் டவுன். உட்காருங்க" என்றாள் அவனையும் பார்த்து.

அமர்ந்தனர்.

"ஷி இஸ் பாவனா. மாமாப் பொண்ணு. அனிமேஷன் தொடர்பான அத்தனை சப்ஜெக்ட்டையும் லண்டனில் படிச்சிட்டு இங்கே ஆபீஸ் வச்சிருக்காங்க" என்றாள் விஷ்ணுவிடம்.

"வணக்கம்!" என்றான். அவளும் கை கூப்பினாள்.

"பாவனா... இவர்..."

"ஸ்டாப்... ஸ்டாப்... நீ இன்ட்ரடியூஸ் பண்ண வேண்டாம்... நானே சொல்றேன். இவர் உன் அண்ணன் தானே?"

இன்ப அதிர்ச்சியுடன் பார்த்தான் விஷ்ணு.

5

"இவர்... உங்க அண்ணன் ஷியாம் தானே?"

விஷ்ணுவின் மனசு கும்பியது.

"அண்ணன் தான். ஆனா, ஷியாம் அண்ணனில்லே, விஷ்ணு அண்ணன். எங்க சித்தப்பா பையன்."

"ஓ... ஸாரி... எனிவே க்ளாட் டூ மீட் யூ!" அவன் கைப்பற்றி குலுக்கினாள்.

விஷ்ணுவின் உடம்பெங்கும் புது ரத்தம் பாய்ந்தது.

மூவரும் ஏதேதோ பேசினார்கள். எதுவுமே அவன் மனதில் பதியவில்லை. அவன் பாவனாவுடன் வேறு உலகில் சஞ்சரித்திருந்தான்.

அம்சவேணியின் ஒன்று விட்ட அண்ணன் மகள் தான் பாவனா. பேரழகி, மெத்தப்படித்தவள், திறமைசாலி, தைரியசாலி.

விஷ்ணுவிற்கு அவளைப் பார்த்ததுமே பிடித்துப் போயிற்று.

பாவனா கண்டிப்பாய் பிறந்த நாள் விழாவிற்கு வருவதாக வாக்குத் தந்தாள்.

அப்போதே, விஷ்ணுவும் முடிவு செய்து கொண்டான். ஷியாம் அலட்சியப் படுத்தினாலும் சரி, அவசியம் தானும் விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று.

* * *

அன்று... விடிந்தபோதே பரபரப்பாய் இருந்தான் விஷ்ணு.

மாலை பிறந்த நாள் விழாவிற்குச் செல்ல உடையை தேர்வு செய்ய அரை மணி நேரமாயிற்று.

காலையிலேயே... வாழ்த்திவிட்டு வரக் கிளம்பிய பெற்றோரை அலுப்புடன் பார்த்தாள் வித்யா.

"தீப்திக்குக் கல்யாணம் இல்லையே... பார்த்டே தானே? அவசியம் அங்கே போய்த்தான் ஆகணுமா? அந்த ஷியாம் சும்மா இருக்காம எதையாவது சொல்லி வைப்பான். நீ அழுவே... தேவையா?"

"எப்படி மரியாதையில்லாம அவன் இவன்னு பேசறாப் பாருங்க."

"ஏம்மா வித்யா..."

"எப்படியோ போங்கப்பா!"

அவர்கள் சென்ற இரண்டாவது நிமிடம், "ஏன் வித்யா அம்மாவை சீண்டிக்கிட்டே இருக்கே!"

"எல்லாம் தெரிஞ்ச நீயுமாண்ணா இப்படிப் பேசறே? அந்த வீட்டுக்கு அவங்க போய்தான் ஆகணுமா?"

"தீப்தி வீடு தேடி வந்து இன்வைட் பண்ணியிருக்கா. அந்த அன்பை மதிக்க வேண்டாமா? ஷியாமுக்காக அவள் மனசை நோகடிக்கலாமா?"

"நீ எப்பண்ணா மாறினே?"

"சேச்சே... உன்னை மாதிரி தீப்தியும் எனக்குத் தங்கை தானே? ஈவ்னிங் பார்ட்டிக்கு நாம ரெண்டு பேரும் போறோம். காலேஜ்லேர்ந்து சீக்கிரம் வந்துடு..."

"அண்ணா, என்னாச்சு உனக்கு? நீயா இப்படிப் பேசறே?" கண்கள் அகல அவனையே பார்த்தாள்.

"தீப்திக்காக... அவளோட அன்புக்காக! நாம விஷ் பண்ண வரலேன்னா, பெரியப்பாவும், பெரியம்மாவும் வருத்தப்பட மாட்டாங்களா?"

"எப்படியோ போங்க... ஆனா, என்னை விட்ருங்க... நான் வரலே!"

"வித்யா... ப்ளீஸ்!"

"ஸாரிண்ணா... அன்னைக்கு உன்னை ஷியாம் அலட்சியப்படுத்தினது, இன்னும் கண்ணுக்குள்ளேயே இருக்கு. நான் வரலே... தீப்திக்கு என் வாழ்த்தைச் சொல் லிடுங்கண்ணா" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

"சரி" என்றான் மேற்கொண்டு வற்புறுத்த விரும்பாமல்!

* * *

விஷ்ணுவை ஒடிவந்து வரவேற்றாள் தீப்தி. பெரியப்பாவும், பெரியம்மாவும் அவனை அழைத்துச் செல்ல, ஷியாம் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

கணிசமான கூட்டம் இருந்தது.

விஷ்ணுவின் விழிகள் கூட்டத்தில் அவளை அலசித் தேடின.

எங்கே அவள்?

''வித்யா வரலையா விஷ்ணுண்ணா?'' மறுபடி அருகில் வந்த தீப்தி கேட்டாள்.

''ரொம்ப தலைவலியாம்...''

''பொய்... பொய்!''

''ஆரம்பிச்சிடலாமா தீப்தி?'' அம்சவேணி மகளிடம் வந்து கேட்டாள்.

''ஒரு பத்து நிமிஷம் வெய்ட் பண்ணலாமேம்மா?''

''எல்லோரும்தான் வந்தாச்சே... டைமாகுது...''

''ஒரு முக்கியமான கெஸ்ட் வரணும்...!''

''யாரு?''

''பாவனா!''

''அட, ஆமாம்... அவளை இன்னும் காணோமே...!''

அவள் பின்னேயே தீப்தி நகர... ஷியாம் அவளைத் தனியே இழுத்துச் சென்றான்.

''என்னண்ணா?''

''எல்லோரையும் இன்வைட் பண்ணியா?'' என்றான் நொடிக்கொருதரம் வாசலையேப் பார்த்தபடி.

''பண்ணேனே...!''

''அப்ப எல்லோரும் வந்தாச்சா? நல்லா செக் பண்ணிட்டு பங்ஷனை ஆரம்பிச்சிடலாமே!''

''நீ யாரைண்ணா தேடறே? டென்ஷனா இருக்கே!''

''நா... நான் யாரைத் தேடப் போறேன்?''

''பாவனாவைதானே?''

''சீச்சீ... நான் ஏன் அவளை...!''

''ரொம்ப வழியுதுண்ணா! பாவனா பேரைச் சொன்னாலே... உன் கண்ணு ரெண்டும் ஸ்லோமோஷன்ல மூடித் திறந்ததை எத்தனையோ நாள் பார்த்திருக்கேன். சொல்லப் போனா உனக்காகத்தான் அவங்களை இன்வைட் பண்ணினதே! கண்டிப்பா வர்றேன்னாங்க. உன் மனசை ஓப்பன் பண்ணிக் காட்டிடு!''

''ஏய்... என்ன இது அபத்தமாப் பேசிக்கிட்டு? அவ இன்னும் என்னைப் பார்த்ததுகூடக் கிடையாது. லூஸு மாதிரிப் பேசிக்கிட்டு... ஓடு!'' செல்லமாய் அடிக்க கையை ஓங்கிய சமயம் தங்க நிற காண்டசா உள்ளே நுழைந்தது.

''பாவனா வந்தாச்சுண்ணா. வழியறதை துடைச்சிட்டு, ஜம்முன்னு ரிசீவ் பண்ணு!''

''உதை விழும்!'' என்றவன் சற்றுத் தள்ளி நின்று தன் அழகரசியை ரசித்தான்.

ஆகாய நீலத்தில் சல்வார். கழுத்தில் மெல்லிய செயின், காதில் சிறு வளையம். மூக்கில் பொடிசாய் வைரம். அவ்வளவுதான்!

ஆனால், அந்த எளிமையான அலங்காரத்திலேயே நூறு பேரில் தனித்துத் தெரிந்தாள்.

விஷ்ணு அவளை அவசர அவசரமாய் கண்களால் உள் வாங்கி இதயத்தில் நிரப்பிக் கொண்டிருந்தான்.

அம்சவேணி அவளிடம் ஏதேதோ பேசியபடி கைப்பற்றி அழைத்துச் சென்றாள்.

''உங்களுக்காகத்தான் வெய்ட்டிங்'' என்ற தீப்தியின் கன்னத்தைச் செல்லமாய் தட்டினாள்.

''ஸாரி தீப்தி... ட்ராபிக்ல மாட்டிக்கிட்டேன்!''

''ஆரம்பிச்சிடலாமா? அட, பாவனா... வாம்மா.. நல்லாருக்கியா? வீட்ல யாரும் வரலையா?'' என்றார் வியப்புடன் மேகநாதன்.

''நான் மட்டும்தான் வந்தேன் மாமா!''

சம்பிரதாய பேச்சுக்கள் முடிய... மூன்றடுக்கு கேக்கை வெட்டினாள்.

பஃபே டின்னர், விதவிதமான சைவ, அசைவ உணவு வகைகள்.

தீப்தி, பாவனா கூடவே இருந்தாள். ஷியாம் ஏதாவது காரணம் சொல்லி, அடிக்கடி அவர்களைத் தாண்டிச் சென்றான்.

''அண்ணா ஒரு நிமிஷம்... இப்படி வா!'' கைப்பற்றி நிற்க வைத்தாள்.

பாவனா நாசூக்காய் ஸ்பூனில் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''பாவனா... இவர்தான் எங்கண்ணன் ஷியாம்!''

''ஓ... தி கிரேட் யங் இன்டஸ்ட்ரியலிஸ்ட் ஷியாம்! நீங்கதானா அது? உங்களைப் பத்தி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பதான் பார்க்கிறேன். உங்களைப் பார்த்த

திலே நிஜமாகவே ரொம்ப சந்தோஷம்'' என்றாள் மனம் திறந்து மலர்ச்சியுடன்.

அவள் தன்னிடம் இந்தளவுக்குப் பேசுவாள் என்று எதிர்பார்க்காத ஷியாம் திக்குமுக்காடிப் போனான்.

''நீங்களும் கிரேட்தான். இந்த சின்ன வயசுல சவாலா ஒரு தொழிலைத் தைரியமா நடத்திட்டு வர்றதுன்னா சாதாரண விஷயமா?''

''எல்லாம் ஒரு ஆர்வம்தான் ஷியாம். பட், இதிலேயும் போட்டி, பொறாமை எல்லாமே இருக்கு. உங்களிடமிருந்து கைடன்ஸ், ஐடியாஸ் எதிர்பார்க்கிறேன்.''

''வித் ப்ளஷர்!''

''நடுவிலே நிக்கிற என்னை மறந்துட்டுப் பேசிக்கிட்டே இருந்தா என்ன அர்த்தம்?'' குறும்புடன் கேட்டாள் தீப்தி.

''ஓ... ஸாரி... ஸாரி!'' என்று சிரித்த பாவனா தன்னையறியாமல் அடிக்கடி அவனை ஏறிட்டாள்.

சற்று தூரத்தில் தட்டுடன் நின்றிருந்த விஷ்ணுவிற்கு உணவே இறங்கவில்லை.

ஷியாம் அவளை விழியகலாமல் பார்த்தபடி, பேசிக் கொண்டிருந்த விதம் நெஞ்சில் திரவம் சுரந்தது.

''ஹாய் ஷியாம்!'' உறவினர் ஒருவர் தோளில் கைப் போட, நாகரீகமாய் நகர்ந்து வந்தாள் பாவனா.

விஷ்ணுவைப் பார்த்து விட்டவள்... அவனை நோக்கி நடந்தாள்.

''ஹலோ...''

''ஹலோ...''

"எப்படியிருக்கீங்க விஷ்ணு?"

"பைன்! நீங்க?"

"பைன். ஏன் ஒதுங்கி நிக்கறீங்க. வாங்க அப்படி உக்காந்து பேசுவோம். ஆக்சுவலா என்ன பிஸினஸ் உங்களது?"

வெகு கிட்டத்தில் அவள். சன்னமான சென்டின் நறுமணம். தடுமாறினான்.

இருவரும் சிரித்து, சிரித்துப் பேசியதை கவனித்து விட்ட ஷியாமிற்கு பற்றிக் கொண்டு வந்தது.

அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியேத் தள்ள வேண்டும் போல் இருந்த கோபத்தை அடக்கிக் கொண்டான்.

அப்போதும்தான் அதை கவனித்தான்.

கார்டனில் ஒளிவீசிக் கொண்டிருந்த சீரியல் பல்புகளின் மீச்சம் மீதி ஒயர்களை சுருட்டி ஒரு மூலையில் வைத்திருந்தனர். அந்த ஒயர் விஷ்ணு நின்றிருந்த கால் வழியே நீண்டிருந்தது.

ஷியாம் சுருட்டி வைத்திருந்த ஒயரை பிடித்து சரக்கென இழுக்க...

திடீரென... பாலன்ஸ் இழந்து தடுமாறி விழப்போன விஷ்ணுவை பதறி, பாய்ந்து தாங்கிப் பிடித்துக் கொண்டாள் பாவனா.

கல்லில் விழுந்து அடிபட விருந்தவனை பூக்குவியல் உள்வாங்கிக் கொண்ட உணர்வில் தத்தளித்தான் விஷ்ணு.

அக்காட்சி... ஷியாமின் ரத்தத்தை கொதிக்க வைத்தது.

6

தூக்கம் வராமலே கனா கண்டுக் கொண்டிருந்தான் விஷ்ணு. ஆயிரம் முறையாவது தடுக்கி விழுந்தான். பத்தாயிரம் முறையாவது பாவனா தாங்கிப் பிடித்திருப்பாள்.

இன்பமான இம்சை, புதுவிதமான உணர்வு. எல்லையில்லா ஆனந்தம். மறக்க முடியாத அனுபவம். கொடைக்கானல் மலையின் பனிமேகம் தழுவிய சிலிர்ப்பு.

'இந்த ஜென்மம் முடிய அந்த பூக்கரம் என்னைப் பிடித்திருக்குமா?' ஆசையும், நேசமும் ஆலமரமாய் கிளை பரப்பி தழைத்தது.

ஷியாமோ, தூக்கம் பறிபோய் வெறி கொண்ட மிருகம் போல் அறைக்குள் நடை பயின்றான். டென்ஷனான நேரங்களில் மட்டும் உதடு சிகரெட்டு கேட்கும். வரிசையாய் பத்து சிகரெட்டுகளை சுட்டு சாம்பலாக்கினான்.

'பாவனா... மை டியர் பாவனா... நீ ஏன் அவனைத் தாங்கிப் பிடித்தாய்? நீ யார்? என் இதயதேவதை. எங்கள் வீட்டு மகாராணி. போயும், போயும் உன் பட்டுக் கரங்கள் அவனைத் தொடலாமா? நீ என்னவள். என் உயிரானவள். எனக்காகவேப் பிறந்தவள். எனக்கு மட்டுமே சொந்தம். ஏழேழு ஜென்மத்திற்கும் எனக்கு நீ வேண்டும் பாவனா!'

விடிய விடிய உறக்கம் வராமல் தவித்தான்.

* * *

அம்சவேணி மகனைக் கவலையுடன் நோக்கினாள்.

"ஏம்பா... டிபன் வேண்டாங்கிறே?"

"பசிக்கலேம்மா...!"

"நானும் கவனிச்சிட்டுதான் வர்றேன். ஒரு வாரமா நீ சரியாவே சாப்பிடறதில்லே. எப்பக் கேட்டாலும் பசிக்க லேங்கறே. எப்பதான் பசிக்கும் உனக்கு? பசியே உறைக் காத அளவுக்கு என்ன பிரச்சினை?"

"ஏம்மா... நீயாகவே கற்பனைப் பண்ணிக்கறே? பசிச்சா சாப்பிடப் போறேன். விட்ரும்மா!"

"ஷியாம்..."

"என்னப்பா?"

"பிஸினஸ்ல ஏதாவது பிரச்சினையா?"

"இல்லையே... ஸ்மூத்தா போய்ட்டிருக்கே...!"

"அப்புறம் என்னப்பா? இந்த வருஷம் லாபமும் அதிகம். புதுசா எக்ஸ்போர்ட் கம்பெனியையும் விலைக்கு வாங்கி இருக்கிறே... வேறென்ன டென்ஷன்!"

"உங்களுக்குத் தெரியாதாப்பா? டென்ஷன் இல்லாத வன் பிஸியான, வெற்றிகரமான பிஸினஸ்மேனா இருக்க முடியாது. நேரமாச்சுப்பா... நான் வர்றேன். அம்மா போய்ட்டு வர்றேன்." அதற்கு மேல் அவர்களைப் பேச விடாமல் கிளம்பி விட்டான்.

"ம்ஹூம்... இவனை இப்படியே விட்டா சரிப்படாது. இந்த டென்ஷனுக்கு எந்த மருந்து கொடுத்தா சரியாகும்னு எனக்குத் தெரியும். வரட்டும் பேசிக்கறேன்" என்றாள் அம்சவேணி.

"என்ன மருந்து அம்சா?"

"இருபத்தி மூணு வயசுலேயே நீங்க கல்யாணம் பண்ணிக்கலாம். என் பிள்ளைக்கு இருபத்தெட்டு வய சாகுது. பொறுப்பு இருக்கா உங்களுக்கு?"

"ஓஹோ.. நீ அப்படி வர்றியா... ஓக்கே. ஓக்கே!"

அன்றிரவு... பாலுடன் மகனின் அறைக்குச் சென்றாள்.

"ஏம்மா... உங்களுக்குதான் கால்வலியாச்சே... நீங்க ஏன் மாடியேறி வர்றீங்க? எத்தனை செர்வண்ட் இருக் காங்க?"

"செர்வண்ட் எதுக்கு? வேற ஆளை ஏற்பாடு செய் துடலாம்."

"வேற ஆளா?"

"ஆமா ஷியாம். அதைப்பத்தி பேசத்தான் வந்தேன். இந்தா... இதைப்பாரு!"

"என்ன கவர் இது?"

"உன் டென்ஷனை கண்ட்ரோல் பண்ற மருந்து இதிலே இருக்கு!"

"மருந்தா?" புரியாமல் கவரைப் பிரிக்க... பளப்பள வென கலர் புகைப்படங்கள் வழுக்கிக் கொண்டு வந்தன.

அத்தனையும் அழகான இளம்பெண்கள்.

ஷியாமிற்கு புரிய பெருமூச்சுடன் திருப்பிக் கொடுத் தான்.

"என்னப்பா... வழக்கமா எல்லாப் பிள்ளைகளும் சொல்வாங்களே... இப்ப என்னம்மா அவசரம்? இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமேன்னு... அந்த டயலாக்கை சொல்லப் போறியா? நீ என்ன சொன்னாலும் சரி... சீக்கிரமே உன் கல்யாணம் நடக்கணும்."

"சேச்சே... நான் அதைச் சொல்ல வரலே..."

"பின்னே?"

"இந்த போட்டோக்கள்ல பாவனாவோட போட்டோவும் இருந்தா செலக்ட் பண்ண வசதியாயிருக்கும்னு நினைச்சேன்."

"பாவனாவா?". வியப்பில் கண்கள் சுருங்கின.

"ம்!"

"என் அண்ணன் பொண்ணு பாவனாவையாச் சொல்றே?"

"ம்!"

"பாரேன்... இத்தனை நாளா இது எனக்குத் தோணாமப் போச்சே. கையிலேயே சர்க்கரையை வச்சுக்கிட்டு இலுப்பைப் பூவை ஊரெல்லாம் தேடிக்கிட்டிருந்தேனே. ரொம்ப சந்தோஷம் ஷியாம். நாளைக்கே எங்கண்ணன் வீட்டுக்குப் போகிறேன்."

ஷியாமிற்குப் பெரிய பாரத்தை இறக்கி வைத்தது போல் உணர்ந்தான்.

* * *

பாவனாவிற்கு ஆச்சர்யமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

பெற்றோர், "ஷியாமை மணக்க விருப்பமா?" என்று கேட்ட போது, "நீங்களாகப் பார்த்து யாரை முடிவு செய்தாலும் எனக்குச் சம்மதமே!" என்று ஒழுங்குப் பிள்ளை மாதிரி சொல்லி விட்டு வந்தாலும், அவளுக்கும் அதில் விருப்பமிருந்ததே!

ஷியாமைப் பார்த்த நாளிலிருந்து மனசு பரபரவென்று அரித்துக் கொண்டேயிருந்தது. அவனிடம் பேச வேண்

டும் போல் தோன்றியது. ஆனால், பேசுவதற்கு ஒரு காரணமும் இல்லாமல் வலிய போன் பண்ணினால் தப்பாக நினைத்து விடுவானோ என்று தயங்கியே... தூவண்டு போயிருந்தாள்.

'ஆனால், ஐயாவும் இதே நோயில்தான் பீடிக்கப்பட்டிருந்தார் என்று இப்போதல்லவாப் புரிகிறது. ஆனாலும், செம பாஸ்ட்! கல்யாணம் வரை வந்து விட்டாரே! இதழ் பிரியாமல் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள்.

இருவர் மனதிலும் காதல் இருக்கிறது. ஆனால், இது வரை போனில் கூட பரிமாறிக் கொண்டதில்லை. பீட்ஸா கார்னர், ஹோட்டல், கோவில் என்று பேசி வளர்த்ததில்லை. ஆனாலும் இது காதல் கல்யாணம்!

வியப்பாய் இருந்தது பாவனாவுக்கு. பரவசமாகவும் இருந்தது.

* * *

சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தாள் காஞ்சனா தேவி!

அம்சவேணி மூலம் விஷயம் காதுக்கு வந்ததும் உடனே கோவிலுக்குக் கிளம்பி விட்டாள்.

ஷியாம் பெயரில் அர்ச்சனை செய்தவள், திரும்பும் வழியில், உயர்தரமான இனிப்புகளை வாங்கிக் கொண்டாள்.

வேலைக்காரர்கள் உட்பட எல்லோருக்கும் இனிப்பு வழங்கினாள்.

எதையோப் பேச வாயெடுத்த வித்யா, 'நல்ல காரியமாயிற்றே... ஒன்றும் பேச வேண்டாம்' என்று கொடுத்த ஸ்வீட்டை வாயில் போட்டுக் கொண்டு போய் விட்டாள்.

சற்று நேரத்தில் காரிலிருந்து இறங்கி களைப்புடன் வீட்டிற்கு நுழைந்தான் விஷ்ணு.

அம்மா முகம் முழுக்க சந்தோஷத்தை அப்பிக் கொண்டு இனிப்புகளை விநியோகம் செய்து கொண்டிருந்த காட்சி... வியப்பைத் தந்ததுடன் அந்த மகிழ்ச்சி இயல்பாய் அவனிடமும் ஒட்டிக் கொண்டது.

அம்மா தோளில் கைப்போட்டபடி ஒரு பாதாம் ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டவன், ''என்னம்மா விசேஷம்? ரொம்ப சந்தோஷமாயிருக்கே. ஸ்வீட் வேற தர்றே...?'' என்றான்.

''ஆமாம் விஷ்ணு... ரொம்ப சந்தோஷமாயிருக்கேன். நம்ம குடும்பத்திலே ஒரு நல்ல காரியம் நடக்கப் போகுது.''

''புரிஞ்சு போச்சு. நம்ம வித்யாவுக்கு அலையன்ஸ் செட்டாகியிருக்கு.. கரெக்ட்?''

''வித்யாவுக்கு என்ன அவசரம்... படிச்சிட்டிருக்கா. ஆனா, கல்யாண விஷயம்தான்!''

''அப்ப... எனக்கா? ஏம்மா... எனக்குத் தெரியாம பொண்ணு, கிண்ணு பார்த்து முடிவு பண்ணிட்டியா?'' பதட்டத்துடன் கேட்டான்.

''உன்னைக் கேக்காம எப்படிப்பா முடிவு பண்ணுவேன்? உனக்கு அண்ணி வரப்போகிறா விஷ்ணு!''

''அண்ணி?''

''ஆமாம்ப்பா... நம்ம ஷியாமுக்குக் கல்யாணம். பாவனா இல்லே... உங்க பெரியம்மாவோட அண்ணன் பொண்ணு. அவளைதான் பேசி முடிச்சிருக்காங்க.''

''பா...வ...னா...வா?'' வாயிலிருந்த இனிப்புக் கசந்தது. சடுதியில் கண்களில் நீர் திரையிட்டது. மனசைக் கொத்தாகப் பற்றிக் கசக்கியது போல் வலித்தது.

''நான் கூட அவளைப் பார்த்திருக்கேன். தங்கச்சிலை மாதிரி என்ன அழகுன்றே? ஷியாமுக்கு ஏத்த ஜோடி. நல்லாயிருக்கணும். எல்லா சுகங்களையும் பெற்று நல்லா வாழணும்'' மனப்பூர்வமாய் வாழ்த்தினாள்.

''ஆமாம்மா... நல்லாயிருக்கணும்!'' இதயம் கனக்க அங்கிருந்து அகன்றான்.

* * *

''ஆர்...யூ... ஹாப்பி நவ்?'' கண்ணடித்துக் கேட்டாள் தீப்தி.

''எதுக்கு?'' ஒன்றும் தெரியாதது போல் கேட்டான் ஷியாம்.

''பாவனா எனக்கு அண்ணியா வர்றதுக்கு?''

''அம்மாவுக்குப் பிடிச்சிருந்தது முடிச்சிட்டாங்க. இதென்ன பெரிய விஷயமா?''

''யோவ் அண்ணா... நீ பெரிய ஆளு. எப்படியோ சாமர்த்தியமா அம்மாவை டீல் பண்ணி காரியத்தை முடிச்சிட்டே! ஆனா, சாருக்குள்ளே போட்டோவுல பார்த்தது முதல் பாவனா காய்ச்சல் வந்ததை இந்த தீப்தி தானே முதமுதல்ல தெரிஞ்சுக்கிட்டு என் பர்த்டேக்கு வரவச்சு, அண்ணலையும் நோக்க வச்சு, அவளையும் நோக்க வச்சு... மனசு ரெண்டையும் பத்த வச்சு... எவ்ளோப் பெரிய காரியம் பண்ணியிருக்கேன்? ஒரு தாங்க்ஸ் கிடையாதா?''

"ஏய் வாலு சத்தம் போடாதே... அம்மா காதிலே விழுந்துடப் போகுது. சரி... தாங்க்ஸ்!"

"அவ்ளோதானா?"

"வேற?"

"பாவனாண்ணா... பாவனா! சும்மாயில்லே... ஒரு தேவதைய உனக்குக் கிடைக்கப் பண்ணியிருக்கேன். நான் கேட்டதெல்லாம் வாங்கித்தரணும்!"

"சரி சொல்லு... நீ என்னெல்லாம் கேக்கறியோ... அதையெல்லாம் வாங்கித்தர்றேன்."

"நிஜமா?"

"ப்ராமிஸ்! நீ செய்தது சாதாரண உதவியில்லே. தீப்தி... வாழ்நாள் முழுக்க தந்த நிம்மதி. கிளம்பு... இப்பவே போகலாம்!"

அந்த மாளிகை அப்போதிருந்தே கல்யாணக் களை யில் மெருகேறத் தொடங்கியது.



7

கரடு முரடான சாலை! விசிலடிக்கும் சூறைக்காற்று. ஆங்காரத்துடன் கொட்டிய மழை.

நடுவழியில் காலை வாரி விட்ட டூ வீலரை ஓரமாய் நிறுத்திவிட்டு ஆட்டோவாவது வருமா என்று பதைப் புடன் நின்றிருந்தாள் வித்யா.

சாலையில் கவனம் பதித்திருந்தாலும் ஓரக் கண்ணால் நடுக்கத்துடன் அவ்வப்போது பின்புறம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜெர்கின் அணிந்த நான்கு இளைஞர்கள் மூன்று பைக்குடன், கண்களில் வழியும் காமத்துடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

பல்லாவரத்திலிருந்த தோழியைப் பார்த்து விட்டுத் திரும்பும்போது இருட்டிவிட, எதிர்பாராமல் மழையும் பொழியத் தொடங்கியது. பழுதான சாலை என்பதால் அவளின் 'சன்னி' இரண்டு கிலோ மீட்டர் கூடத் தாண்ட முடியாமல் நின்று விட்டது. மறந்துப் போய் செல்போனை யும் தோழியின் வீட்டிலேயே விட்டு விட்டு வந்த மடத்தனத்தை எண்ணி நொந்துக் கொண்டாள். அது குறுக்கு வழி, விரைவில் போய் விடலாம் என்று நினைத் தாளேயொழிய சாலையின் பவிசை நினைக்கவில்லை.

அந்த வழியாய் மிக அரிதாகத்தான் வாகனங்கள் செல் லும். அதுவும் கனரக வாகனங்கள் தான். அத்திப் பூத்தாற் போல், கார், ஆட்டோ வருவதுண்டு. அவள் அங்கு நிற்பதைப் பார்த்து விட்டு பைக்கை நிறுத்திய இளை ஞர்கள் அரைமணி நேரமாய் அவளுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர்.

"எக்ஸ்க்யூஸ் மீ! குளிர்ல உடம்பெல்லாம் நடுங்குது உனக்கு. எங்கே போகணும் சொல்லு... குடா ஒரு காபி சாப்பிட்டுட்டுப் போய் விடுறோம்." கண்ணடித்து அர்த்த முடன் சிரித்தபடி வழிந்தான் ஒருவன்.

வித்யா வாயேத் திறக்கவில்லை. கடந்து சென்ற லாரியை விரல் காட்டி உதவி கேட்டாள்.

லாரியோ வேகமாய் கடந்து போய்விட்டது.

"ஏன் செல்லம்... உனக்காக உதவி பண்ண ஒருத்தர் இல்லே... நாலு பேர் காத்துட்டிருக்கோம். நீ என்னடான்னா... லாரிக்காரன் கிட்டே லிப்ட் கேக்கற! வா... போகலாம்."

"இதோப் பாருங்க... நான் உங்ககிட்டே ஹெல்ப் கேட்டேனா? உங்க வேலையப் பார்த்துக்கிட்டுப் போங்க," துப்பட்டாவை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

"அழகாயிருக்கியேடி கண்ணு. விட்டுட்டுப் போக மனசு வரலே. பத்திரமா கொண்டு போய் விட்டுடறோம் வா. உடம்பெல்லாம் சும்மா கும்முனு இருக்கு. மழையிலே நனைஞ்சு வளைஞ்சு, நெளிஞ்சு நிக்கற அழக கண்ணுல அடிக்குது. எவனாவது லாரிக்காரன் கைய வச்சிடப் போறான். எய்ட்ஸ் கிய்ட்ஸ் வந்துடப் போகுது. அடம் பிடிக்காம வா... தாயீ!" என்றான் மற்றவன் நக்கலாக.

நிமிடங்கள் கடக்க... கடக்க வித்யாவின் பயம் வேகமாய் ஏறியது.

'கடவுளே... கை கொடு... காப்பாத்து.'

தூரத்தில் இரு வெளிச்சப் புள்ளி தெரிய, யூகிக்க முடிந்தது... அது கார்தான் என்று.

இளைஞர்கள் உஷாராகி சற்று ஒதுங்கி நிற்க... வித்யா நடுச்சாலையில் நின்று இரு கைகளையும் ஆட்டி உதவிக் கேட்டாள்.

வேகமாய் காரை ஓட்டிக் கொண்டிருந்த ஷியாம் வேகத்தைக் குறைத்தான்.

ஒரு இளம்பெண் லிப்ட் கேட்பதும், சற்றுத் தள்ளி நான்கு இளைஞர்கள் நின்றிருப்பதும் ஆபத்து என்று புரிய... அவளருகே நிறுத்தினான்.

"சார்... ப்ளீஸ் ஹெல்ப் மீ!" என்று குனிய, கார்க் கண்ணாடியை இறக்கியவன் அதிர்ந்தான்.

'வித்யா...'

"ஷியாம் அண்ணா... தாங்க் காட்!"

என்ன நினைத்தானோ, அடுத்த கணமே காரை சீற விட்டு புறப்பட... வித்யா விதிர் விதிர்த்துப் போனாள்.

* * *

பத்து நிமிடம் ஆயிற்று... ஷியாமின் உள்ளக் கொதிப்பு அடங்க.

'யாரோ ஒரு அபலைப் பெண் என்று காரை நிறுத்தினால், கடைசியில் அது காஞ்சனாவின் மகள். நான் எதற்கு உதவ வேண்டும்? என் குடும்பம் வேறு. அந்தக் குடும்பம் வேறு. போன் பண்ணினால், அண்ணன்காரன் பறந்து வந்து உதவ மாட்டானா? நான் எதற்கு?' ஏதேதோ தனக்குத்தானே சமாதானம் படுத்திக் கொண்டாலும் மனசு குறுகுறுக்காமல் இல்லை.

'என்னதான் பிடிக்கவில்லை என்றாலும் அவள் உன் தங்கை என்பதை மறுக்க முடியாது. இளம்பெண், உன்னைப் பார்த்ததும் கடவுளுக்கு நன்றி சொன்னாளே? பின்னால் கோழியைச் சாப்பிட காத்திருக்கும் மும்பை நான்கு தடியர்கள். அவளுக்கு ஏதாவதொன்றானால்... காலம் முழுக்க அந்த குற்ற உணர்வு உன் உறக்கத்தைப் பறிக்காதா?'

".....?!"

'போ... போய் முதலில் அவளைக் காப்பாற்று!'

ஷியாமின் கரங்கள் தன்னிச்சையாக காரைத் திருப்பி வந்த வழியே செலுத்தின.

மழை வலுத்திருந்தது.

அதே இடத்தில் போய் நிறுத்தினான்.

யாரும் இல்லை. ஒரு ஓரமாய் அவளின் 'சன்னி' மட்டும் அனாதையாக இருக்க... திக்கென்றானது.

காய்ச்சலடிப்பதுபோல் பயத்தில் உடம்பெங்கும் அனல் பரவியது.

'எங்கே போனாள் வித்யா? என்னாச்சு அவளுக்கு? ஏதாவது ஆகியிருக்குமோ? நோ... அப்படி எதுவும் ஆகி இருக்கக் கூடாது. சே... நானொரு மடையன். பெரியவர்கள் மேலிருந்த கோபத்தை அந்த சின்னப் பெண் மேல் காட்டியிருக்கக் கூடாது. இப்போது என்ன பண்ணுவது? போலீஸில் கம்ப்ளைண்ட் பண்ணலாமா? வேண்டாம். என்ன விவரம் சொல்லி பண்ணுவது? ஒரு வேளை ஆட்டோப் பிடித்துப் போயிருக்கலாம். குழப்பிக் கொள்ள வேண்டாம்.' தடதடக்கும் நெஞ்சத்துடனே வீடு வந்து சேர்ந்தான்.

'வித்யா வீடு வந்து சேர்ந்திருப்பாளா? எப்படித் தெரிந்துக் கொள்வது? போன் பண்ணலாமா? நானா? அந்த வீட்டுக்கா? சேச்சே..!'

'தன்மானம் பார்க்கும் நேரமாயிது? உன் அலட்சியமான கோபத்தால் வித்யாவின் கற்பிக்கும், உயிருக்கும் கேடு நேர்ந்திருந்தால்?''

'ஐய்யோ...' உடம்பு ஆடியது.

வித்யாவின் வீட்டிற்கு போன் பண்ணினான். காஞ்சனா தான் எடுத்தாள்.

''ஹலோ...!''

''ஹலோ... ஆன்ட்டி வித்யா இருக்காளா? நான் அவ ப்ரண்ட் பேசறேன்... கூப்பிட முடியுமா?'' பெண் குரலில் பேசினான்.

''இல்லியேம்மா... நாங்களும் அவளுக்காகதான் காத்துக்கிட்டிருக்கோம். இன்னும் வீட்டுக்கு வரலேம்மா!''

''சரி ஆன்ட்டி நான் அப்புறமா பேசறேன்!'' என்று உடனே போனை வைத்து விட்டான்.

கூடுதலாய் நிம்மதி பறிபோக... தவித்தான்.

மேலும் அரை மணி நேரம் செல்ல...

அறைக்குள் புயலென நுழைந்தாள் வித்யா.

அவள் பின்னேயே பதைப்புடன் அம்சவேணியும், தீப்தியும்.

முகம், கைகளில் ரத்தக்காயம். கழுத்தருகே கிழிப்பட்டிருந்த துணி. நனைந்த தேகம், கண்ணீரில் மிதந்த கண்கள் என அவன் முன்னே வந்து நின்றாள்.

சகலமும் நடுங்கியது ஷியாமிற்கு.

''வி...த்...யா!''

''வித்யா என்னம்மா ஆச்சு உனக்கு? ஏன் இப்படி இருக்கிறே?'' குரல் நடுங்கக் கேட்டாள் அம்சவேணி.

வித்யா அவனையே வெறித்துப் பார்த்தாள்.

''மனுஷனா நீ?''

ஷியாம் பதில் கூறாமல் அவளையேப் பார்த்தான்.

''கூடப் பிறந்தால் தான் தங்கையா? எங்கம்மா, எங்களை விட உன்னைத்தானே தலையிலே வச்சிக் கொண்டாடறாங்க?''

அம்சவேணி எதுவும் புரியாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஷியாம் என்ன சொல்றா இவ?''

''எப்பேர்ப்பட்ட ஆபத்திலே இருந்தேன்? மிருக குணம் கொண்டவங்கக் கூட அந்த சூழ்நிலையிலே மனுஷத்தன்மையோட காப்பாத்தி இருப்பாங்க. ஆனா, நீ? நான்தான்னு தெரிஞ்சும் என்னை அம்போன்னு விட்டுட்டு வந்தேயில்லே?''

''.....?!''

''இதுவே என் இடத்திலே தீப்தி இருந்து, உன் இடத்துல எங்கண்ணன் விஷ்ணுவா இருந்திருந்தா... அவளை உயிரைக் கொடுத்தாவது காப்பாத்தி இருப்பான்.''

''.....?!''

''சீ... இனி, நீ என் அண்ணனேக் கிடையாது. நல்லவேளை அந்தப் பாவிகளிடமிருந்து எப்படியோ தப்பிச்சு வந்தேன். இனிமே உன் பேரை மிருகம்னு மாத்திக்க... அதுதான் பொருத்தமாயிருக்கும்.'' காட்டமாய் கூறிவிட்டு கண்ணீரைத் துடைத்தபடி வெளியேறினாள்.

ஷியாம் காரை சீற விட்டதும், தைரியம் பெற்ற இளைஞர்கள் அவளை நெருங்கி தொட்டு இழுக்க, மழையில் இவள் வேகமாய் ஓட ஆரம்பிக்க... அவர்களும் விரட்ட ஆரம்பிக்க... எப்படியோ மெயின் ரோட்டிற்கு வந்து விட்டாள். அங்கே ஒரு ஆட்டோவைப் பிடித்து நேரே ஷியாமை பார்க்கத்தான் வந்தாள் வித்யா.

அம்மாவிற்கு மட்டுமல்ல தீப்திக்கும் அதிர்ச்சி.

''ஷியாம்... அவ சொன்னதெல்லாம் உண்மையா?''

''.....?!''

''ஏண்ணா, இப்படிப் பண்ணினே? வித்யாவும் உன் தங்கச்சி தானே? அவளுக்கு ஏதாவது ஆகியிருந்தா? மை காட்! நீயா... நீயாண்ணா இப்படி?''

''தீப்தி... நீ போ!''

அவளை அனுப்பி விட்டு தமையனைத் தொட்டாள் அன்னை.

''சொல்லுப்பா... ஏன் இப்படி நடந்துக்கிட்டே? வித்யா யார்? உன் தங்கச்சிப்பா!''

''அம்மா ப்ளீஸ்... என்னைக் கொஞ்சம் தனியா விடுங்க!'' என்றவன் தன்னறைக்குச் சென்று கதவை சார்த்திக் கொண்டான்.

அம்சவேணி கவலையுடன் திரும்பினாள்.

8

மனசு தாளவில்லை விஷ்ணுவிற்கு!

எவ்வளவு பெரிய ஆர்டர்? பன்னாட்டு நிறுவனத்தினிடமிருந்து ஐந்து நிமிடம் முன்பு வரை அவன் கம்பெனிக்கு தான் கிடைக்குமென்று நம்பிக் கொண்டிருந்தான். அது மட்டும் கிடைத்திருந்தால் நான்கு கோடி வரை லாபம் கிடைத்திருக்கும். இடையில் புகுந்து அத்தனையையும் பறித்துக் கொண்டான் ஷியாம். இவன் அனுப்பியக் கொட்டேஷனை எப்படியோ மோப்பம் பிடித்து, இவனை விட பத்து பைசா லாபம் குறைத்து அவன் அனுப்பியக் கொட்டேஷனுக்கு ஆர்டர் கிடைத்து விட்டது.

இது மாதிரி இவன் பிடிக்கும் ஆர்டர்களை தட்டிப் பறிப்பதற்கென்றே இவன் அலுவலகத்தில் அவனுக்கு

விசுவாசமான ஆட்கள் வேலை செய்கிறார்கள். அந்த கறுப்பு ஆடு யார் என்று தெரியவில்லை. கண்டு பிடிக்க வேண்டும்.

போன மாதம் கூட அவனிடம் பணியாற்றிய திறமை யான ஆட்களை அதிக சம்பளம் காட்டி தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

விஷ்ணுவை, அவன் தொழிலை தரைமட்டாக்குவதே தன் லட்சியம் என்று செயல்பட்ட ஷியாம் மீது ஆத்திரம் அதிகரித்தது.

'அவனின் அக்கிரமத்துக்கு அளவே இல்லையா? சும்மா விடக்கூடாது அவனை?'

கண்கள் சிவக்க காரை எடுத்துக் கொண்டு விரைந்தான் விஷ்ணு!

உயர்தர ஹோட்டலுக்குள் நுழைவது போலிருந்தது ஷியாமின் அலுவலகம். முழுக்கவே குளிரூட்டப்பட்டு, கண்ணாடியாலான தடுப்பறைகள் அமைக்கப்பட்டு, ரொம்பவே அழகாக இருந்ததை பொறாமையுடன் பார்த்தான். முன்பு இவன் அலுவலகத்தில் பணிபுரிந்த மூன்று பேர் இவனைப் பார்த்ததும் தலை கவிழ்ந்து கொண்டனர். நேரே ஷியாமின் அறைக்குச் சென்றான்.

சுழல் நாற்காலியில் அமர்ந்து இப்படியும், அப்படியும் சுழன்றபடி போனில் பேசிக் கொண்டிருந்தான் ஷியாம்.

"ரொம்ப பெரிய ஆர்டர் டியர். எல்லாம் நீ என் வாழ்க் கையில் வந்த அதிர்ஷ்டம்தான். ஈவ்னிங் சூப்பரா ட்ரீட் தர்றேன். எங்கே போகலாம்ங்கறதை நீயே டிஸைட் பண்ணு. பாவனா... கால் யூ லேட்டர்... பை!" இவனைப் பார்த்ததும் சட்டென போனை கட் பண்ணினான்.

"ஹலோ... எங்கே இந்தப் பக்கம்? இங்கே எந்த வேலை யும் காலி இல்லையே!"

அலட்சியமாய், எகத்தாளமாய் அவன் பேசவும் பொறுமை யிழந்து, தன்னையிழந்தான். ஷியாமின் சட்டையைக் கொத்தாய் பற்றினான்.

"ராஸ்கல்... உனக்கு வேற வேலையே இல்லையா? எதுக்குடா என் வழியிலே வர்றே? வெட்கமாயில்லை? நேர்மையான வழியிலே எதையும் அடையத் தெரியாதா? எனக்கு கிடைக்கிற எல்லாத்தையும் தட்டிப் பறிக்கறதே தொழிலா உனக்கு? ஆம்பளைக்கு அழகா இது?"

"கைய எடுடா நாயே! நேர்மையப் பத்தி எனக்கு சொல்லித் தர்றியா? அதைப்பத்தி உன் குடும்பத்துக்கு பாடம் எடு! ஆம்பளை சிங்கம்டா நான்! அதனால தான் எல்லாத்திலேயும் ஜெயிக்கிறேன். ஆனா, நீ... எதுக்கும் லாயக்கில்லாத சைபர். தோத்துக்கிட்டேதான் இருப்பே!" பிடித்துத் தள்ளினான்.

சுவற்றில் மோதி விழுந்த விஷ்ணு. அதே வேகத்தில் எழுந்து சரமாரியாக குத்து விட்டான். சடுதியில் ஷியா மிற்கு ரத்தக் காயங்கள் ஏற்பட்டது. தன்னை தற்காத்துக் கொள்ளவோ, தடுக்கவோ விஷ்ணு அவனுக்கு அவகாசம் தரவில்லை. நிலைகுலைந்து விழுந்தான் ஷியாம்.

கண்களால் எரித்துவிட்டு வெளியேறியவன் நேரே வீட்டிற்குச் சென்றான்.

மாலை வெயிலின் மஞ்சள் வெளிச்சம் உறுத்தாத வெப்பத்துடன், இதமான காற்றும் கலந்திருந்த அந்திப் பொழுது.

களைத்துப் போன பணியாளர்கள், வீடு திரும்பிக் கொண்டிருக்க, உற்சாகமாய் பறவைகள் கூடு திரும்பிக் கொண்டிருந்தன.

காரிலிருந்து இறங்கி, தன்னறைக்குப் போக படியேறிக் கொண்டிருந்தவளை தடுத்தது அம்மாவின் குரல்!

"விஷ்ணு!" கோபமும், அதட்டலுமாய் அழைத்தாள்.

"என்னம்மா?"

"இங்கே வா!"

"சொல்லும்மா!" எதிரில் வந்து நின்றான்.

"ஷியாமோட ஆபீஸுக்குப் போயிருந்தியா?"

".....?!"

"சொல்லு... போயிருந்தியா?"

"ம்...!"

"அங்கே சண்டைப் போட்டுட்டு வந்தியா?"

".....!"

"ஷியாமை அடிச்சியா?"

"ஆமாம்மா அடிச்சேன். கொல்லாம வந்துட்டேன். அதான் என் தப்பு!"

அடுத்த கணம் அவனின் இரு கன்னங்களிலும் சரமாரியாக விழுந்தன அறைகள்.

"எவ்ளோ தைரியமிருந்தா, ஆபீஸுக்குப் போய் அவனை அடிச்சிட்டு வந்திருப்பே? கொன்னுடுவியா? ஷியாமைக் கொன்னுடுவியா? அவ்ளோத் திமிரா உனக்கு? ராஸ்கல் நான் உன்னைக் கொன்னுடுவேன்டா!"

அம்மாவின் அடிகள் மட்டுமல்லாது, வார்த்தைகளும் வலியைத் தர... வெடித்து வந்த அழுகையை உதடுக் கடித்து அடக்கியபடி வாசலை விட்டு வெளியேறினான்.

இன்னமும் ஆத்திரம் அடங்காமல் உடம்பு ஆடியது காஞ்சனாவுக்கு.

வேலையாட்கள் வியப்புடன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க, சப்தம் கேட்டு அறையிலிருந்து வெளிப் பட்டார் பாலகிருஷ்ணன்.

"என்ன தேவி... என்ன சத்தமிங்கே? உங்களுக்கெல் லாம் இங்கே என்ன வேடிக்கை?"

அடுத்த கணம் வேலையாட்கள் காணாமல் போயினர்.

"நம்ம ஷியாமை போய் அடிச்சிட்டு வந்திருக்கான் விஷ்ணு. நல்ல காயமாம். நிறைய ரத்தம் போயிடிச்சாம். அக்கா போன் பண்ணி ஒரே அழுகை. உயிரே போயிடுச் சுங்க எனக்கு. ஷியாம் மேலே இவன் கைய வைக்கிறதா? அதான் அவனை நானும் அடிச்சேன்."

"யாரை விஷ்ணுவையா?"

"ஆமாம்!"

"என்ன காரியம் பண்ணினே தேவி? என்ன பிரச் சினைன்னு விசாரிக்காம, வளர்ந்தப் பிள்ளை மேலே கைய வைக்கலாமா? போம்மா...! எங்கே அவன்?"

"வெளியேப் போய்ட்டான்!"

மனைவியை முறைத்தபடி அவன் செல்லுக்கு தொடர்பு கொள்ள முயன்றார். விஷ்ணுவோ எடுக்கவேயில்லை.

காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார் பாலகிருஷ்ணன்.

விஷ்ணு எங்கேப் போயிருப்பான் என்று யூகிக்க முடிந்தது.

அவனுக்கு மிகப் பிடித்தமான இடம் கடற்கரைதான். அவன் சந்தோஷமாயிருக்கும் போதும் சரி, டென்ஷனா யிருக்கும்போதும் சரி. அடைக்கலமாவது இங்கேதான்.

பாலகிருஷ்ணன் இறங்கி கடற்கரையில் தேடினார். இருட்டத் தொடங்கியிருந்ததால் கண்டு பிடிக்க கஷ்ட

மாக இருந்தது. கூட்டம் வேறு இருந்ததால் ஒவ்வொரு வரையும் உற்றுப் பார்த்து நகர்வது அநாகரீகமாகப் பட்டாலும் வேறு வழித் தோன்றவில்லை. கடல் மணலில் கால் புதைய நடப்பது வலித்தது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து கண்டு பிடித்து விட்டார்.

ஒரு ஓட்டைப் படகோரம் சாய்ந்திருந்தவனின் முகத்தில் அப்பட்டமான வேதனை.

தோளில் கைவைத்து 'விஷ்ணு' என்றார்.

அவரை எதிர்பார்க்காதவன் தடக்கென எழுந்து நின்றான்.

"அப்பா... நீங்களா?"

தோளில் கைபோட்டு தன்னோடு இறுக்கிக் கொண்டார்.

காயப்போட்டிருந்த கருவாட்டின் வீச்சம் காற்றோடு கலந்து வந்தது.

கொத்து பலூன்களோடு ஒரு சிறுவன் இவர்களை இடித்துக் கொண்டு ஓட, பின்னேயே இன்னொரு சிறுவனும் விரட்டிக் கொண்டு ஓடினான்.

"என்னப்பா விஷ்ணு... என்ன பிரச்சினை?" உள்ளத்தை இதமாய் வருடியது குரல்.

"ஷியாம்.. ஷியாம் என்கிட்டேர்ந்து எல்லாத்தையும் பறிக்கிறான்ப்பா! அவன் பிஸினஸை கவனிக்கிறானோ, இல்லையோ... என் பிஸினஸைதான் எப்பவும் கவனிச்சிட்டு இருக்கிறான். எனக்கு கிடைக்க வேண்டிய அத்தனை ஆர்டர்ஸையும் பிடுங்கிக்கறான். இன்னைக்குக் கூட நமக்குக் கிடைக்க வேண்டிய ஆர்டரை பறிச்சுக்கிட்டான். அதனால கிடைக்க வேண்டிய நாலு கோடி லாபமும் போச்சு. எல்லா விஷயத்திலேயும் தலையிட

றான்ப்பா. நம்ம குடும்பத்தைப் பத்தி மோசமாப் பேசறான். அதான் அடிச்சேன். அது தப்பாப்பா?"

"இல்லேப்பா... உன் கோபம் நியாயமானதுதான்! ஆனா, பிஸினஸ்மேன் பொறுமையிழக்கக் கூடாது விஷ்ணு."

"அப்ப அவன் என்ன செய்தாலும் நான் பொறுத்துக்கிட்டு போகணும்கறிங்களா? எல்லாத்துக்கும் ஒரு அளவில்லையா? அப்புறம் நீங்க என்ன நினைப்பீங்க? இவனுக்குத் திறமையே இல்லை... எதுக்கும் லாயக்கில்லைன்னுதானே?"

"இல்லடா ராஜா! ஷியாமைப் பத்தி எங்களுக்குத் தெரியும். நீ சொல்லாமலே எல்லா விஷயமும் என் காதுக்கு வரும் விஷ்ணு. உனக்கு வயசிருக்கு. வெளியில் ஏகப்பட்ட வாய்ப்புகள் இருக்கு. ஜெயிக்கலாம்... கவலைப் படாதே!"

".....!"

"வா... வீட்டுக்குப் போகலாம்."

"இல்லேப்பா. நான் வரலே."

"சின்னப் பிள்ளையாட்டம் என்னப்பா இது?"

"ஷியாம் எனக்குப் பண்ண அநியாயத்தைக் கூட தாங்கிக்க முடிஞ்சது. ஆனா, அவனுக்காக அம்மா என்னை அடிச்சது என்னப்பா நியாயம்?"

".....!?"

"சொல்லுங்கப்பா... என்ன நியாயம்?"

".....!?"

"என்ன இருந்தாலும் நான் அனாதைப் பயல் தானே... அதனால்தானே?" என்றவன் மறுபக்கம் திரும்பி தாங்க மாட்டாமல் விசும்பினான் குழந்தையாய்.

துடித்துப் போனார் பாலகிருஷ்ணன்.

"எவ்ளோப் பெரிய வார்த்தையை கொட்டிட்டே விஷ்ணு?"

"அதானேப்பா உண்மை!"

"அழாதே ராஜா... எல்லோரும் பார்க்கறாங்க பார்! கூல் டவுன். நாங்க என்னைக்காவது உன்னை அப்படி நினைச்சிருப்பமா? எங்கப் பிள்ளைடா நீ... எப்பவும் நீதான் எங்கப்பிள்ளை. ஏதோ கோபம்! அதுக்காக அம்மாவுக்கு உன்னை அடிக்கக் கூட உரிமையில்லையா?"

"அ...ப்...பா!"

"பிள்ளைங்கற உரிமையிலே அடிச்சா? அது தப்பா விஷ்ணு?"

"ஸாரிப்பா!" என்றான் மனம் லேசாகி.

9

காரை விட்டிறங்கியதும் ஓடிவந்து விஷ்ணுவை அணைத்துக் கொண்டு அழுதாள் காஞ்சனா தேவி.

"வந்துட்டியா விஷ்ணு.. வந்துட்டியா? ஆத்திரத்துல அவசரப்பட்டு அடிச்சிட்டேன்... மன்னிச்சிடுப்பா..."

"அம்மா... ப்ளீஸ்... இப்படியெல்லாம் பேசி என்னை அந்நியனாக்காதீங்க... தாங்கிக்க முடியலே. என்னை அடிக்க உங்களுக்குதாம்மா உரிமையிருக்கு."

பாலகிருஷ்ணன் நிம்மதியுடன், சிரித்தபடி நகர்ந்தார்.

"சரி.. எல்லாத்தையும் மறந்துடுவோம்... வா... வந்து சாப்பிடு. மதியம் கூட சாப்பிட்டிருக்க மாட்டே... வாப்பா!" கையைப் பற்றி அழைத்துச் செல்ல...

அந்த பாசத்துக்கு முன், கிடைக்காமல் போன ஆர்டரும், நான்கு கோடியும் தூசு என்றுணர்ந்தான்.

டைனிங் டேபிள் முன் வர அமர வைத்து பரிமாறினாள்.

"வலிக்குதா விஷ்ணு?" என்று கன்னத்தைத் தடவிக் கொடுத்து கண்ணீர் விட்டாள்.

"இல்லேம்மா!"

"நீ பொய் சொல்றே... வலிக்கும்! நான் ஒண்ணு சொன்னாக் கேப்பியா?"

"சொல்லும்மா!"

"ஷியாம் என்ன வேணாப் பண்ணிட்டுப் போகட்டும். விட்டுடு. அவன் வழிக்கேப் போக வேணாம். ரத்தம் வர்ற அளவுக்கு அடிச்சிருக்கே... அவனுக்கும் வலிக்கும் தானே? உன்னை மாதிரிதான் அவனும் எனக்கு! பாசம் வச்சிட்டேன். தாங்கிக்க முடியலே.. இனி, ஷியாம் மேலே கைய வைக்காதே விஷ்ணு... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்" என்றவளை ஆச்சர்யமும், வேதனையுமாய் பார்த்தான்.

பசி உணர்வு மரத்துப் போக... உணவு இறங்க மறுத்தது.

* * *

கிளம்பிய மனைவியை தடுத்தார் பாலகிருஷ்ணன்.

''வேண்டாம். நீ பண்ணப் போகிற காரியம் புத்தி சாலித்தனமாத் தெரியலே. போகாதே!''

''இல்லீங்க... நம்மகிட்டே செல்வத்துக்கு என்ன குறைச்சல்? ஷியாமுக்கு யார் மனைவியா வந்தாலும் அவளுக்கு தாணும்னு பாதுகாப்பா வச்சிருந்த நகைகள் இது! என்னைத் தடுக்காதீங்க'' பிடிவாதமாய் சிறு பெட்டி யுடன் காரில் சென்று அமர்ந்தாள்.

டிரைவர் உசுப்பி புறப்பட்டான்.

அரை மணி நேரத்தில் பாவனா வீட்டிற்கு வந்து விட் டாள். அவளைப் பார்த்ததும் குடும்பமே மரியாதையுடன் வரவேற்றது.

பாவனாவின் பெற்றோர் செங்குட்டுவனும், வேதாவும் விழுந்து, விழுந்து கவனித்தனர். மகளின் சின்ன மாமியார் ஆயிற்றே!

''அண்ணன் வரலீங்களா?'' என்று கேட்டாள் வேதா.

''இல்லே... முக்கியமான வேலை இருக்குன்னு தாம் பரம் வரை போயிருக்கார். பாவனா இல்லையா?''

''இருக்காளே... ஒரு நிமிஷம், பாவனா பாவனா!''

''இதோ வந்துட்டேன்ம்மா'' என்று தொள தொளப்பான இரவு உடையான பேண்ட், ஷர்ட்டில் வந்து நின்றவள் காஞ்சனாவை வியப்புடன் பார்த்தாள்.

''பாவனா... இவங்க உன் சின்ன மாமியார். நிச்சயதார்த்த விழாவிலே பார்த்திருப்பே!'' என்றார் அப்பா.

''தெரியும்ப்பா... விஷ்ணுவோட அம்மா.. நல்லாருக் கீங்களா ஆன்ட்டி?''

''நல்லாயிருக்கேன்டா கண்ணு! ஆன்ட்டி எதுக்கு? வாய் நிறைய அத்தைன்னு கூப்பிடேன்'' என்றவள் அவளைப் பார்த்துப் பூரித்துப் போனாள்.

''சரிங்க அத்தை!''

''இந்தாம்மா!'' கையிலிருந்த சிறு பெட்டியை நீட்டி னாள்.

''என்ன இது?''

''திறந்து பாரேன்!''

பார்த்தாள். வியப்பும், அதிர்ச்சியுமாய் விழிகள் ஏறிட்டன.

வைர நெக்லஸ், காசுமாலை, ஜிமிக்கி, வளையல்கள் என பழங்காலத்து நகைகள்.

''ஜுவல்ஸ்?''

''எல்லாம் உனக்குத்தான் பாவனா. என்னோட கல் யாணப் பரிசு.''

''எனக்கா? இவ்வளவு நகைகளுமா? ரொம்ப காஸ்ட் லியா இருக்கும் போலிருக்கே?'' என்றபடி பெற்றோரை யும் தயக்கத்துடன் ஏறிட்டாள்.

அவர்களும் அவள் நிலையில்தான் இருந்தனர்.

''இது எங்க பரம்பரை நகைம்மா!''

''அப்ப ஏன் என்கிட்டே தர்றீங்க? நியாயமா விஷ்ணு வோட வொய்ப்புக்கில்லே தாணும்?''

''என் மருமகளுக்கும் வச்சிருக்கிறேன். நீயும் என் மருமகள்தானே? ஷியாம் எங்கள் குடும்பத்தின் முதல் ஆண் வாரிசு. அவன் மேல் உயிரையே வைத்திருக் கிறேன். இது உனக்கான நகை. மறுக்காம வாங்கிக்க.''

பெற்றவர்களும் தலையாட்ட... வாங்கிக் கொண்டவள் பிரம்மிப்புடன் காஞ்சனாவையே பார்த்தாள்.

* * *

''நானே எதிர்பார்க்கலே ஷியாம்! பரம்பரை நகைகளை, அதுவும் ரொம்ப காஸ்ட்லியான நகைகளை தர்றதுக்கும் ஒரு மனசு வேணும். அது உங்க சித்திக்கிட்டே இருக்கு. அவங்க முகத்துல என்ன ஒரு தேஜஸ் தெரியுமா? டிவைன் ஃபேஸ்! ஐ லைக் ஹர்.''

அவள் காஞ்சனாவை சிலாகித்துப் பேச... பேச... ஷியாமிற்குப் பற்றிக் கொண்டு வந்து, ''பாவனா... ஸ்டாப்பிட்!'' என்றான்.

''.....?!''

''அந்த நகைகளை அவங்ககிட்டேயே திருப்பிக் கொடுத்துடு!''

''வாட்?''

''அந்த நகைகள் உனக்கு வேண்டாம்.''

''பரம்பரை நகைகளாம் ஷியாம். எனக்கு நகை மோகம் எல்லாம் கிடையாது. ஆனா, ரொம்ப பாசமா வீடு தேடி வந்துக் கொடுத்துட்டுப் போனாங்க. அதைப் போய் திருப்பித் தந்தா அவங்க மனசு வருத்தப்படாதா?''

''உனக்காக எங்க குடும்பத்துப் பரம்பரை நகைகள் லாக்கர்ல பத்திரமாயிருக்கு. தாயுள்ளமே இல்லாத ஒரு பெண்மணி தந்த நகைகள் உனக்கு வேண்டாம். கொடுத்துடு!''

''அவங்க உன் சித்தி ஷியாம். ஏன் அவங்களை வெறுக்கறீங்க?''

''.....?!''

''நானும் கேள்விப்பட்டேன். அவங்களை மட்டுமல்ல அவங்க குடும்பத்திலே கூட யாரையும் உங்களுக்குப் பிடிக்காதுன்னு. விஷ்ணுவுக்கு, அவரோட பிஸினஸுக்கு பெரிய தடையா இருக்கீங்க. ஏன் ஷியாம்? எனக்குத் தெரிஞ்சவரையில் ஷியாம் ஒரு ஜென்டில்மேன். அவருக்குள்ளே இப்படியொரு மனிதன் இருப்பது அதிர்ச்சியா இருக்கு. உங்க பேரண்ட்ஸ் அந்தக் குடும்பத்தோட சுமூகமாப் பழகும்போது, நீங்க மட்டும் ஏன் விரோதமாப் பார்க்கறீங்க?''

''.....?!''

''சொல்லுங்க ஷியாம். உங்க சித்தி குடும்பத்துல எல்லோரும் அன்பானவங்களா, நல்லவங்களாத் தெரியறாங்க. நீங்க வெறுக்கறதுக்கு என்ன காரணம்?''

''.....?!''

''நான் உங்களோட வருங்கால மனைவி! நீங்க சொல்றதைக் கேட்டு நடக்கறது என் கடமைதான். ஆனா, அதுக்காக, காரணமே இல்லாம நீங்க சுட்டிக் காட்டறவங்களை எதிரியா நினைக்க முடியாது. உங்களுக்கு முன்பே விஷ்ணு எனக்கு அறிமுகம். ஒரு நல்ல நட்பு இன்னமும் எங்களுக்குள் இருக்கு. உங்க சித்தி என்னிடம் காட்டிய அன்பில் எந்த துவேஷமோ, நடிப்போ இல்லை. உங்களுக்குள் என்ன பிரச்சினைன்னு தெரிஞ்சுக்க எனக்கு உரிமையிருக்கில்லே ஷியாம்?''

''மைகாட்... என்ன பாவனா இப்படியெல்லாம் பேசறே? எனக்கு கிடைக்காத அன்பை எல்லாம் உன்கிட்டேதான் எதிர்பார்க்கிறேன். என் உயிர், வாழ்க்கை எல்லாமே நீதான்... பிரிச்சுப் பேசாதே!''

"அப்ப சொல்லுங்க ஷியாம்!" கைகளைப் பற்றி மிருதுவாக அழுத்திக் கொடுத்தாள்.

"என்னைப் பார்த்தா எப்படித் தோணுது பாவனா? வெறுக்கணும் போல் தோணுதா?"

"சேச்சே... ஏன் இப்படிக் கேக்கறீங்க?"

"என்னையும் வெறுத்து ஒதுக்கித் தள்ளினாங்க பாவனா! இன்னைக்கு நான் வெற்றி பெற்ற பெரிய தொழிலதிபர். ஆனா, என் மனசுக்குள்ளே மாறாத, மறையாத ரணம் இருக்கு. அதுக்குக் காரணம், நீ தலைமேல தூக்கி வச்சிட்டு ஆடறியே... அந்தப் பெண்மணிதான்!"

"யாரு... உங்க சித்தியையா சொல்றீங்க?"

"மறுபடி, மறுபடி அந்தப் பொம்பளைய என் சித்தின்னு சொல்லாதே!"

"என்ன ஷியாம் மரியாதையில்லாமப் பேசறே?"

"உனக்கு என் வேதனை தெரியாது பாவனா! உன் இளம்பருவத்தை உன்னைப் பெத்தவங்களோட எவ்ளோ சந்தோஷமா அனுபவிச்சிருப்பே? சுமந்துப் பெத்தவளோட அடிவயித்து சூட்டுல தூங்கற சுகத்தை ஏகாந்தமா அனுபவிச்சிருப்பியே. பால் சோறும், நெய் சோறும் தாயோட கையால சாப்பிடாத குழந்தைகள் சிலுவை சுமந்தவர்கள் பாவனா."

".....?!"

"அம்மா முத்தமிட்டு வழியனுப்பி, அப்பா கையைப் பிடிச்சுக்கிட்டு ஸ்கூலுக்குப் போகிற பாக்கியம் செய்யாத குழந்தைகள் பாவ ஜென்மங்கள்."

"என்ன சொல்ல வர்றீங்க? எதுக்கிந்த உதாரணங்கள்?"

"சொல்றேன்... சொல்றேன்" துளிர்க்க முயன்ற கண்ணீரை நாசூக்காய் தடுத்தான்.

"உன்னை மூணு வயசா இருக்கப்ப... தத்துக் கொடுத்துட்டு, உனக்குப் பதிலா அனாதை ஆஸ்ரமத்திலேர்ந்து ஒரு பெண் பிள்ளையை தத்தெடுத்து வளர்த்தா உன் மனசு என்ன பாடுபடும்?"

"சேச்சே... நினைச்சேப் பார்க்க முடியாத அநியாயமல்லவா? என் பேரண்ட்ஸை மன்னிக்கவே மாட்டேன்!"

"நான் மட்டும் எப்படி மன்னிப்பேன் சொல்லு?"

"வாட்?"

"யெஸ்... நானும் தத்துக் கொடுக்கப் பட்டேன்."

"எ... என்ன சொல்றீங்க ஷியாம்?" தூக்கி வாரிப் போட்டது பாவனாவுக்கு.

"சித்தி... சித்தின்னு சொல்றியே... தெய்வீகமான முகம்னு வர்ணிக்கறியே... அந்த அருமையான தாய்தான் என்னைப் பெத்தவ. அவதான் என்னை தத்துக் கொடுத்துட்டு, ஆர்பனேஜ்லேர்ந்து விஷ்ணுவை தத்து எடுத்து வளர்க்கிறா."

"எ... எ...ன்...ன..து?"

10

"ஷி...யா...ம்! எ... என்ன சொல்றீங்க? என்னால நம்பவே முடியலியே! பெத்தப் பிள்ளையை தத்து குடுத்

துட்டு. வேறொருப் பிள்ளையை ஏன் தத்தெடுத்து வளர்க்கணும்?''

''என்னாலேயும் நம்ப முடியல பாவனா. கேட்கற உனக்கே எவ்வளவு கஷ்டமாயிருக்கு? எனக்கு... அனுபவிச்ச எனக்கு எவ்வளவு வேதனையாயிருக்கும்னு உன்னால புரிஞ்சுக்க முடியும்னு நம்பறேன்.''

''எனக்கு ரொம்ப குழப்பமாயிருக்கு ஷியாம்.''

''எனக்கே ரொம்ப நாளா விஷயம் தெரியாது. எதேச்சையா... அக்கா ரேவதியோட பர்த் சர்ட்டிபிகேட் எடுத்துப் பார்த்தப்பதான்... அவளுக்கும், எனக்கும் இடையில் மூணு மாசம்தான் வித்தியாசம்னு தெரிஞ்சது. நான் வற்புறுத்திக் கேட்டப்பதான் அம்மா உண்மைய சொன்னாங்க. அப்ப எனக்கு ரெண்டுங்கெட்டானான பதினஞ்சு வயசு. கோபத்தையும், வேதனையையும் வெளிக்காட்ட முடியாம எனக்குள்ளே போட்டு புதைச்சேன். பக்குவம் வந்த பிறகு வெளிக்காட்டறேன்.''

''இந்த விஷயம் எல்லோருக்கும் தெரியுமா ஷியாம்?''

''அம்மா, அப்பா, ரேவதிக்கா தவிர யாருக்கும் தெரியாது.''

''ஓ...!'' என்று யோசித்தவள் ஷியாமை நெருங்கி அமர்ந்தாள்.

''உங்க மனசு எனக்குப் புரியுது ஷியாம். உங்க கோபம், ஆத்திரம் எல்லாமே நியாயம்தான். ஆனா இப்பவும் கூட உங்க சித்தி... ஸாரி அம்மா...''

''நோ... அவங்க எனக்கு அம்மாயில்லே.''

''சரி... சரி... அவங்களை தப்பா நினைக்கத் தோணலே. அவங்க உங்க மேலே வச்சிருக்கிற அன்பு நிஜம். ஏதோ

ஒரு காரணத்துக்காகத்தான் இப்படி பண்ணியிருக்கணும். வலுவான காரணமில்லாம, சுமந்துப் பெத்தக் குழந்தையை தத்து கொடுக்க முடியாது.''

''வேறென்ன காரணம் இருக்க முடியும்? தப்பான வழியிலே பெத்திருப்பாங்க.''

''ஷட் அப் ஷியாம்!'' அதட்டலாய் வந்தது குரல்.

* * *

பாவனா முன்பு விதவிதமான பட்டுப் புடவைகளும், நகைகளும் கடை பரப்பியிருந்தன.

அம்சவேணி மருமகளை பெருமிதமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன அத்தை... கடையையே கிளப்பிக்கிட்டு வந்துட்டீங்க போல... இதிலே எதைன்னு செலக்ட் பண்றது? தலையே சுத்துதே...!''

''உன்னை யாரும்மா செலக்ட் பண்ண சொன்னது? இதெல்லாமே உனக்குத்தான்!''

''எல்லாமேவா... மைகாட்!''

''மேகநாதன் மருமகள்னா சும்மாவா?''

பேச்சு, திருமணம், வரவேற்பு, அழைப்பிதழ் என்று திசை திரும்பி, பின் சாப்பிட வற்புறுத்தப்பட்டு உண்டாள் அம்சவேணி.

மகளின் குணநலன்கள் பற்றி பெருமையாக எடுத்துரைக்கப்பட்டது.

''எங்க பாவனா தஞ்சாவூர் பெயிண்டிங் நல்லா வரைவா. அவளோட ரூம்ல அவ வரைஞ்ச பெயிண்டிங்தான் அலங்கரிச்சிட்டிருக்கு.''

"அப்படியா... நான் பார்க்கணுமே!"

தனிமையான சூழ்நிலைக்காக காத்திருந்த பாவனா உடனே மாமியாரை மாடியிலுள்ள தன்னறைக்கு அழைத்துச் சென்றாள்.

பிரம்மித்துப் போனாள் அம்சவேணி.

"லஷ்மி கடாட்சம் மட்டுமில்லே... சரஸ்வதி கடாட்சமும் உனக்கு நிறைய இருக்கு பாவனா. இந்த அஷ்டலஷ்மி ஓவியம் தத்ரூபமா, அழகாயிருக்கு."

"தாங்க்ஸ் அத்தை! அப்புறம், அத்தை உங்கக்கிட்டே ஒரு விஷயம் பேசணுமே!"

"சொல்லும்மா!"

"சுத்தி வளைச்சுப் பேச விரும்பலே. அதே சமயம் இந்த விஷயம் எங்களுக்குத் தெரியாம மறைக்கப்பட்டது பத்தியும் வருத்தப்படலே. ஆனா எனக்கு சில விஷயங்கள் தெரியறது நல்லதுன்னு நினைக்கிறேன்."

"சொ... சொல்லு பாவனா!" முகம் மாறியது.

"சொந்தப் பிள்ளையை தத்துக் கொடுத்துட்டு வேறப் பிள்ளைய தத்தெடுத்து வளர்க்கறதை நினைச்சுக் கூடப் பார்க்க முடியலே. ஷியாம் விஷயத்திலே இது எப்படி நடந்தது?"

"பா...வ...னா!" திடுக்கிட்டுப் போனாள்.

"ரிலாக்ஸ் அத்தை. இது என் குடும்ப விஷயம். நான் தெரிஞ்சுக்கணும் இல்லையா? ஷியாம் தான் சொன்னார். தப்பானக் கோணத்துல அனுமானித்து இருக்கிறார். அதை மாத்தணுமில்லையா? சொல்லுங்க!"

"முதல்ல... உங்கிட்டே, உங்க அம்மா, அப்பாக்கிட்டே சொல்லாம மறைச்சதுக்காக மன்னிச்சிடும்மா!"

"இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை அத்தை. எனக்கு மட்டும் தெரிஞ்சாப் போதும்."

அம்சவேணி மருமகளின் கையைப் பற்றி கண்ணீர் விட்டு "நன்றி பாவனா..." என்றவள், தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு "ஷியாம் வளர, வளர பெத்தவங்களுக்கு கண்டம்னு ஜோஸியர் சொன்னார். அதனால அவனை எங்களுக்கு தத்துக் கொடுத்தாங்க. எங்களுக்கும் ஆண் வாரிசு இல்லேன்னு மனப்பூர்வமா எங்க பிள்ளையா நினைச்சுதான் வளர்த்துட்டு வர்றோம்."

ஆனால், அதைக் கேட்ட பாவனாவுக்கு நெருடலாகவே இருந்தது. காஞ்சனா தேவியின் அன்பும், கண்ணீரும் தவிப்பும் ஜோஸியத்திற்கான காரணத்தை தவிடு பொடியாக்கவே செய்தது.

ஏதோ ஒரு உண்மை எங்கோ ஒளிந்து கொண்டிருப்பதாகவே பட்டது பாவனாவுக்கு.

என்ன அது?

* * *

திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

நான்குப் பேரைப் போல காஞ்சனாவும், பாலகிருஷ்ணனும் வந்து சந்தோஷத்தில் வழிய அட்சதைப் போட்டு வாழ்த்தியதை பாவனா கவனிக்கத் தவறவில்லை.

அதற்கடுத்த இரண்டாவது நாள் ஷியாமும், பாவனாவும் கோவிலுக்குச் சென்றனர்.

அர்ச்சனை முடிந்து, பிரகாரம் சுற்றி மண்டபப் படிக்கட்டில் அமர எத்தனித்தபோது காஞ்சனாவும், வித்யாவும் எதிர்ப்பட்டனர்.

காஞ்சனா பாவனாவைப் பார்த்து புன்னகைத்துவிட்டு தலை கவிழ, சிரிப்பதா, வேண்டாமா என்கிற சங்கடத் தோடு வித்யா நிற்க, பாவனாதான் சிநேக பாவனையுடன் புன்னகைத்தாள். ஷியாம் வித்யாவைப் பார்த்து முறைக்க... சடுதியில் முகம் மாறியது.

''மனசு நிம்மதிக்காகத்தான் கோவிலுக்கு வர்றோம். ஆனாலும் சனி பின் தொடர்ந்து வந்துக்கிட்டேதான் இருக்கு... சே!'' என்று அலுத்துக் கொண்டான்.

காஞ்சனாவின் கண்கள் சட்டெனக் கலங்க... மகளின் கைப்பிடித்து வந்த வழியே திரும்பி நடந்தாள்.

''ஏம்மா... எதுக்காக திரும்பிப் போகறே? மலையப் பார்த்து எதுவோ குலைச்சிட்டிருக்கு. அதுக்காக நாம ஏம்மா போகணும்.. வா!''

''நீ... வா... முதல்ல'' தரதரவென இழுத்துச் செல்ல... ஷியாமின் முகத்தில் சிரிப்பு.

பாவனா... அனையேப் பார்த்தாள்.

''உட்கார் பாவனா!'' கைப்பிடித்து அமர்த்தினான்.

''.....!''

''ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

''எனக்குப் பிடிக்கலைங்க...''

''எது?''

''நீங்க இப்படி இன்டீசன்டா நடந்துக்கறது!''

''அப்படிப்பட்டவங்ககிட்டே அப்படித்தானே நடந் துக்கணும்?''

''இப்படிப் பேசறதை முதல்ல நிறுத்துங்க ஷியாம். மத்தவங்களை... அது அம்மாவாகவே இருந்தாலும் தப்பா

பேசறதுக்கு உங்களுக்கு உரிமையில்லே. பாவம் வித்யா. ஏதுமறியாப் பொண்ணு. உங்க கோபத்தை அவகிட்டேக் காட்டறீங்க.''

''வேணாம் பாவனா... மத்தவங்களைப் பத்திப் பேசி என் மூடை ஸ்பாயில் பண்ணாதே! என்னைப் பத்திப் பேசு. உன்னைப் பத்திப் பேசு! இன்னும் ரெண்டு நாள்ல ஹனிமூனுக்கு சுவிஸ் போகப் போறோமே... அதைப் பத்தி பேசு.. ஓக்கே!'' என்றவனின் வார்த்தையில் நிறையவே அழுத்தம் இருந்தது.

* * *

வெண்மேகம் உருக்கி பூமியில் ஸ்லோ மோஷனில் இறங்கிக் கொண்டிருந்தது பனிமழையாய். கூடையை கவிழ்த்து வைத்தாற்போல் ஆங்காங்கே பனிச் சிகரங்கள். சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களை கண நேரத்தில் பனிக்கட்டி போர்த்தி அணைத்து மறைத்துக் கொண்டது. குடை விரித்தாற்போல் மரங்களிலும் பனி மழை எழில் கூட்டியிருந்தது.

அந்த அழகை வர்ணிக்க வார்த்தைகளுக்கு வலு வில்லை. காணக்காண இயற்கையின் ஒப்பனைத் திறனை எண்ணி பிரம்மிப்புதான் ஏற்பட்டது.

கனமான ஸ்வெட்டர்களை அணிந்து கொண்டு தங்கி யிருந்த ஹோட்டலின் ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர் ஷியாமும், பாவனாவும்.

பாவனா அமர்ந்திருக்க... அவள் தலையில் தன் தலையை வைத்து கையோடு கை சேர்த்து அணைத்தபடி ஜன்னல் வழியே விழிப் பார்த்திருந்தான்.

''வெளியே நடக்கலாமா பாவனா?''

''ஐயோ... நான் மாட்டேன்ப்பா. பயங்கர குளிர்... ரூமுக்குள்ளே... நெருப்புக்கு முன்னாடி உட்கார்ந்திருக்கும் போதே... எலும்பெல்லாம் ஊசியாய் குத்துது.''

''என்னை இறுக்கி அணைச்சுக்க பாவனா. ஹனி மூனுக்குன்னு வந்துட்டு ரூமுக்குள்ளேயே அடைஞ்சுக் கிடந்தா எப்படி? வா!''

''ரோட்ல உங்களை இறுக்கி அணைச்சுக்கணுமா? ரொம்பதான் ஆசை! இது பாரினா இருக்கலாம். ஆனா நாம தமிழ்நாட்டுலப் பிறந்தவங்க... ஞாபகமிருக்கட்டும்.''

''ஐயோ பாட்டிம்மா... பாரின்ல படிச்சவ மாதிரியாப் பேசறே... பட்டிக்காடு, பட்டிக்காடு... சரி அதை விடு, இப்ப எப்படி பீல் பண்றே?''

''எப்படின்னா?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது பத்தி!''

''காதல் ஒரு அழகான இம்சை. இந்த இம்சை அரசன் வாழ்நாள் முழுக்கக் கூடவே வரணும்னு ஆசைப்பட்டேன். வேண்டினேன். காதலனே கணவனா அமையறது எவ்வளவு பெரிய வரம் தெரியுமா? எனக்கது கிடைச்சது... என் அதிர்ஷ்டம்!''

பாவனாவை கைப்பிடித்து மெல்ல எழுப்பினான்.

''தாங்க்ஸ்டா!''

''.....?!''

''என் லிப்ஸெல்லாம் குளிருது டியர்... அணைச்சுக் கோயேன்!'' என்றான் தாபத்துடன்.

''லிப்ஸையா? அணைச்சுக்கறதா... எப்படி?''

''மண்டு... இதுகூடத் தெரியாதா? இதோ இப்படி!'' அவளை இறுக்கி அணைத்து இதழ் போர்வையால் இதழ் மூடிக் கொண்டான்.

11

தேனிலவு, விருந்து என ஒரு மாதம் முழுக்க பிஸினஸை மறந்திருந்தனர். என்னதான் ஆட்கள் இருந்தாலும், உரியவர் இல்லாமல் இருந்தால் சிலந்திக் கட்டிய வலைபோல் பிரச்சினைகள் சிக்கலோடு காத்திருக்க தானேச் செய்யும்.

ஷியாமிற்கு ஆபீசில் ஏகப்பட்ட தலைவலிகள் காத்திருந்தன. பிஸினஸ் சம்பந்தமாய் உடனடியாய் மலேசியா போக வேண்டிய வேலை! ஒரு வாரமாவது அங்கே தங்கியிருக்க வேண்டும்.

'கூடவே பாவனாவையும் அழைத்துச் சென்றால் என்ன? இரண்டாவது ஹனிமூனாய் ஆக்கிக் கொள்ள வேண்டியதுதான்!'

நினைத்ததை இரவில், காதல் மனைவியை நெஞ்சில் சாய்த்துக் கொண்டு சொல்லி விட்டான்.

''ஸாரி டியர்... நீங்க மட்டும் போய் வாங்களேன்!''

''ஏன் பாவனா?''

''என் ஆபீஸிலும் பல வேலைகள் காத்திருக்கின்றன. இரண்டாவது, ஒரு பிஸினஸ் பிரச்சினைக்காகத்தான் மலேஷியா போகிறீர்கள். அதற்கு நடுவில் ஹனிமூன் என்பது சரிவராது. நமக்காக மட்டுமே நாம் செல்வதாக இருந்தால்தானே இனிக்கும்!''

''அதுவும் சரிதான். ஆனால், ஒரு வாரம் என் செல்லத்தைப் பார்க்காமல் பிரிந்திருக்கணுமே... என்னைப்

போல்தானே நீயும் கஷ்டப்படுவாய்!'' இரு கைகளையும் கூந்தலுக்குள் கோர்த்து செல்லமாய் முகத்தை உயர்த்தி காதலுடன் சிணுங்கினான்.

''ரொம்ப... ரொம்ப கஷ்டப்படுவேன் ஷியாம். பட், உங்கள் காதல் இம்சைகளை நினைத்து தேற்றிக் கொள்ள வேண்டியதுதான்.''

''ஓஹோ... என் நேசமும், மோகமும் உனக்கு இம்சையாகத் தோன்றுகிறதா?''

''அதிலென்ன சந்தேகம் செல்லம்? சுகமான இம்சை தானே?''

''அப்ப... இதையும் அந்த லிஸ்ட்ல சேர்த்துக்க...!'' அவளை தன்னோடு சேர்த்து மூச்சு முட்ட அணைத்துக் கொண்டான்.

* * *

ஷியாம் மலேசியா புறப்பட்டுப் போய் விட்டான்.

ஒரு வாரம் அவனை பிரிந்திருக்கப் போகிறோமே என்ற வேதனை நெஞ்சை அழுத்திப் பிசைந்தாலும் இப்படியொரு தனிமைக்காகத்தான் காத்திருந்தாள்.

அவன் விரோதியாய் நினைத்தாலும் அவர்கள் அவனைப் பெற்றவர்கள். அவர்களின் ஆசீர்வாதம் கண்டிப்பாய் தனக்குத் தேவை என்று நினைத்தாள். ஏனோ அவளுக்கு காஞ்சனா தேவியை தவறாகவே எண்ணத் தோன்றவில்லை. ஷியாம் இங்கிருக்கையில் சென்று பார்த்து வருவதென்பது இயலாத காரியமாய் பட்டது. நினைத்த போதெல்லாம் அவளைப் பார்க்க அலுவலகம் கிளம்பி வந்து விடுவான். இங்குச் சென்றேன், அங்குச் சென்றேன் என்று தொழிலைக் காரணம் காட்டி பொய் சொல்லலாம்

தான். ஆனால் கணவனிடம் பொய் சொல்ல மனசாட்சி உறுத்தியது.

இப்போது அவன் இல்லாத நேரம் செல்வதும் ஏமாற்று வேலைதான். இருந்தாலும் அவனுக்குத் தெரியப்போவதில்லை. கேள்வி கேட்கப் போவதுமில்லை. இப்போதைக்கு அம்சவேணி அத்தைக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தாலும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருந்தது.

கூடை நிறையப் பழங்கள், மல்லிகைப் பந்து, இனிப்பு என வாங்கிக் கொண்டு காரில் அவர்கள் வீட்டு வாசல் முன்பு சென்று இறங்கினாள்.

உள்ளிருந்து சாம்பிராணி, ஊதுபத்தி, கதம்பப்பூ என கலவையான மணம் நாசியைத் தொட்டது.

கல்லூரிக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்த வித்யா எதேச்சையாக வாசலைப் பார்க்க, வியப்பு மேலிட ''அம்மா'' என்று குரல் கொடுத்தவள், ''வாங்க.. உள்ளே வாங்க!'' என்றழைத்தாள்.

''என்ன வித்யா... பூஜை பண்ணிட்டிருக்கேனே...''

''யாரு வந்திருக்கான்னு பாரு...''

''யாரு?''

''வந்துப் பாரும்மா...!''

''இதிலே என்னடி சஸ்பென்ஸ்... இதோ வந்துட்டேன்'' தீபாராதனை தட்டுடன் ஹாலுக்கு வந்தவள் சமைந்து விட்டாள்.

''பாவனா... பாவனா... நீயாம்மா... எ.. என்னங்க இங்கே வாங்க... கையும் ஓடலே, காலும் ஓடலே... இந்தாம்மா!'' தட்டை நீட்டினாள் உணர்ச்சிப் பொங்க.

"பூஜை வேளையில் கரடியா வந்துட்டேனா?" மெல்லிய சிரிப்புடன் கேட்டவள், தொட்டு கண்களில் ஒட்டிக் கொண்டாள்.

காஞ்சனா குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டவள், "கரடியா, பூஜை நேரத்தில் மகாலக்ஷ்மியாயில்லே வந்திருக்கே? நல்லாயிருக்கியாம்மா? ஷியாமும் வந்திருக்கானா?" ஆவலுடன் வாசலைப் பார்த்தாள்.

"இல்லே அத்தை! நான் மட்டும்தான் வந்திருக்கேன். அவர் மலேஷியாப் போயிருக்கார். எனக்கு உங்களை எல்லாம் பார்க்கணும்னு தோணுச்சு. வந்தேன். நீங்க நல்லாருக்கீங்களா அத்தை?"

"ரொம்ப சந்தோஷமா இருக்கேன்ம்மா... எ... எனக்கு என்னப் பேசறதுன்னே தெரியலே... நீ வந்த சந்தோஷத்துல மனசு நிறைஞ்சு..." பேச முடியாமல் கண்கள் கலங்கின.

அவள் கையிலிருந்த தட்டை வாங்கி வித்யாவிடம் கொடுத்தவள்... சோபாவில் அமர வைத்து தானும் அமர்ந்தாள்.

"ஏன் அத்தை இவ்வளவு எமோஷனல் ஆகறீங்க? நான் என்ன வேற்றுக்கிரக வாசியா? முறைப்படி நானும் உங்க மருமகள்தானே? நான் இங்கே வர்றது பெரிய விஷயமில்லையே? விஷ்ணு எங்கே?" பேச்சை மாற்றினாள்.

"ஆபீஸுக்குப் போய்ட்டான்."

"அடடே.. பாவனா.. நீயாம்மா.. என்ன அதிசயம் இது? கண்களில் வியப்பு மேலிட வந்தவர் அவர்கள் எதிரில் அமர்ந்தார்.

"உங்க ஆசீர்வாதத்துக்காக வந்தேன். ரெண்டு பேரும் சேர்ந்து நில்லுங்க ப்ளீஸ்" என்று நிற்க வைத்து விழுந்து வணங்கினாள்.

"தீர்க்காயுசா... தீர்க்க சுமங்கலியா, எல்லா இன்பங்களையும் பெற்று சந்தோஷமா வாழணும்."

மன நிறைவுடன் எழுந்தாள்.

"பாவனா... வேலையிருக்குன்னு உடனே ஓடிப் போய்டாதே! சாப்பிட்டே வந்திருந்தாலும், இப்ப எங்கூட சேர்ந்து சாப்பிட்டே ஆகணும்!"

"இங்கே சாப்பிடணும்னே சாப்பிடாம வந்தேன் அத்தை!"

"கொஞ்சம் பொறும்மா... இதோ வந்துட்டேன்!" காஞ்சனா எழுந்துச் செல்ல, வித்யாவை இழுத்து தன்னருகில் அமர்த்திக் கொண்டாள்.

"படிப்பெல்லாம் எப்படிப் போகுது வித்யா?"

பாலகிருஷ்ணன் நாகுக்காய் எழுந்துச் சென்றார்.

"நல்லாவேப் படிக்கிறேன்."

"அண்ணின்னு கூப்பிட மாட்டியா?"

".....?!"

"என் வீட்டுக்காரர் மேலே கோபம். நியாயம். சரிதான். ஆனா, என் மேலே என்ன கோபம் வித்யா? நான் உனக்கு அண்ணிதானே?"

"மன்னிச்சிடுங்க... உங்க ஹஸ்பண்ட் என்னிடம் எப்பவுமே அண்ணனா நடந்துக்கிட்டதில்லே!"

"அப்பப்பா... ரொம்ப கோபமா இருக்கே. ஒக்கே, அந்த சப்ஜெக்ட் வேண்டாம். அடுத்து என்னப் படிக்கறதா ப்ளான்?"

"அம்மா இப்பவே அலையன்ஸ் தேடிட்டு இருக்காங்க."

"மேற்கொண்டு படிக்க ஆசையிருந்தா, சொல்ல வேண்டியதுதானே?"

"அம்மா தீவிரமாயிருக்காங்க. இப்ப கல்யாணம் பண்ணிக்கறதில் எனக்கு விருப்பமில்லே!"

"நான் ஒண்ணுக் கேட்டா தப்பா நினைக்க மாட்டியே!"

"நான் யாரையாவது லவ் பண்றேனான்னு தானே கேக்கப் போறீங்க?"

"ஏய்... எப்படி?" என்றாள் வியப்பாய்.

"படிப்பிலும் பெரிதாய் ஆர்வமில்லை. கல்யாணத்திலும் விருப்பமில்லைன்னு சொன்ன உடனே, உங்களுக்கு பல்பு எரிஞ்சிருக்குமே! எதுக்குப் படிக்கணும்? பிள்ளைங்களை வளர்க்க இந்தப் படிப்புப் போதும். விஷ்ணு அண்ணா எப்பவுமே பிஸினஸ் டென்ஷனோட தான் வீட்டுக்கு வருவார். பாவமா இருக்கும். நீங்க மட்டும் என்ன? தனியே தொழில் பண்றதால... அருமையான குடும்ப வாழ்க்கையை மிஸ் பண்றீங்க. மூணு வயசிலேர்ந்தே ஸ்கூல், காலேஜ்னு என் டைமெல்லாம் படிப்புக்கே அர்ப்பணிச்சாச்சு. நினைவுத் தெரிஞ்சு, அம்மா அப்பாக்கூட முழுசா டைம் ஸ்பெண்ட் பண்ணினதில்லே. என் பேரண்ட்ஸோட அட்லீஸ்ட் ரெண்டு மூணு வருஷமாவது கூடவேயிருந்து... ஹாப்பியா இருக்கணும்னு ஆசைப்படறேன். மத்தபடி நோ... லவ்! அப்படியே அதிலே மாட்டிக்கிட்டாலும் என் பேரண்ட்ஸ் எதிர்ப்பு சொல்ல மாட்டாங்க. நான் யாரை காதலிச்சாலும் எதைப் பத்தியும் கவலைப்படாமல் திருமணத்துக்கு சம்மதிப்பாங்க. ஏன்னா, அவங்களுக்கு ஜாதி, மதம், ஜோதிடம் எதிலும் நம்பிக்கையில்லை. இரண்டு மனங்கள் இணைவதுதான் வாழ்க்கை. அதுதான் பொருத்தம். கட்டம்

போட்டு பத்துப் பொருத்தம் பார்க்கறது எல்லாம் வெத்து வேட்டுன்னு சொல்வாங்க."

"நிஜமாவா சொல்றே வித்யா?"

"நிஜமாவே நான் யாரையும் லவ் பண்ணலே!"

பாவனாவுக்கு அதிர்ச்சி. வித்யா சொன்னதில் ஒரு புதிய உண்மை தெரிய வந்தது. ஜோதிடத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் எப்படி ஷியாமை ஜோதிடத்தை காரணம் காட்டி தத்துக் கொடுத்தார்கள்?

* * *

அருமையான உபசரிப்பு, சுவையான விருந்து, ஆழமான அன்பு என அந்த குடும்பத்தினரின் வரவேற்பில் திணறிதான் போனாள் பாவனா.

வித்யா கல்லூரிக்குப் புறப்பட்டு விட, பாலகிருஷ்ணனும் ஆடிட்டரை பார்க்க வெளியில் புறப்பட்டு விட்டார்.

"ஷியாம் சின்ன வயசிலேர்ந்தே அதிபுத்திசாலி. நீ அவனுக்கேத்த மனைவியாய் வாய்ச்சது கடவுளோட அனுக்ரஹம்!"

பேச்சுக்கு பேச்சு ஷியாம்தான். வியப்பாய் பார்த்தாள்.

"என்ன பாவனா அப்படிப் பார்க்கிறே?"

"என் வீட்டுக்காரர் உங்க குடும்பத்தையே தீயாய் வெறுக்கிறார். ஆனா, நீங்க எப்படி அவர் மேலே இவ்ளோப் பாசமா இருக்கீங்கன்னு... கேக்க மாட்டேன்.... ஆனா..."

".....?!"

"இவ்ளோப் பாசமா இருக்கிற நீங்க எப்படி அவரை ஜோதிடத்தில் நம்பிக்கையே இல்லாத போதும், அதைக் காரணம் காட்டி தத்துக் கொடுத்தீங்க? எப்படி மனசு வந்தது அத்தை?"

மென்மையாகத்தான் கேட்டாள். ஆனால் சம்மட்டியால் விளாசியது போல் துடித்துப் போனாள் காஞ்சனாதேவி.

12

கண்கள் நிலைகுத்த பாவனாவையே பார்த்தவளுக்கு வார்த்தையில் அடங்காத அதிர்ச்சி.

"பா...வ...னா!"

"எனக்கு எல்லாமே தெரியும் அத்தை! நீங்க அவர் மேலே வச்சிருக்கிற அன்பும் தெரியும். எந்தத் தாயாலும் இயலாத ஒரு காரியத்தை அன்பைத் தவிர வேறெதுவும் தெரியாத இந்தத் தாயால் மட்டும் எப்படி சாத்திய மாயிற்று? இது என் புருஷனோட வாழ்க்கை ரகசியம். நான் தெரிஞ்சுக்கறதுல தப்பில்லையே?"

"எ... என்ன தப்பா நினைச்சிட்டியா பாவனா?" தழுத்தவளின் கண்களும் தளும்பியது.

"என்னால எப்பவும் உங்களை தப்பா நினைக்க முடியாது அத்தை. ஆனா தப்பா எடை போட்டிருக்கிற என் புருஷனோட மனசை நான் மாத்தியாகணும்!"

"அது நடக்கக் கூடாது பாவனா!"

"என்ன சொல்றீங்க?" நெற்றி சுருங்கியது.

"எல்லாத்தையும் சொல்றேன். எனக்கும் என் புருஷனுக்கும் மட்டுமே தெரிஞ்ச ரகசியத்தை உன்னிடம் சொல்கிறேன். ஆனா, எனக்கு நீ சத்தியம் பண்ணிக் கொடு. எக்காரணத்தை முன்னிட்டும் இதை நீ ஷியாமுக்கோ, மத்தவங்களுக்கோ சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடு!"

"அ...த்...தை!"

"பண்ணும்மா.. சில உண்மைகள் எங்களோடு புதைஞ்சுப் போயிடறது நல்லது. ம்..." கையை நீட்டினாள்.

வேறு வழியின்றி சத்தியம் பண்ணினாள் பாவனா.

காஞ்சனாதேவி சொல்லத் தொடங்கினாள்.

* * *

வேந்தன்பட்டி!

நகரமும் அல்லாத, கிராமத்திலும் சேர்த்தியில்லாத அழகிய சிற்றூர். ஜமீன்தார் முறை ஒழிக்கப்பட்டிருந்தாலும் இன்னமும் அந்த பகட்டும், பணபலமும் குறையாமல் ஊரை ஆண்டுக் கொண்டிருந்தார் பரந்தாமன். ஊரில் முக்கால் பகுதி அவருக்குச் சொந்தமானதுதான். வெளியூரிலும் ஏகப்பட்ட சொத்துக்களும், எஸ்டேட்களும் வாங்கிப் போட்டிருந்தார். அள்ள அள்ளக் குறையாத செல்வம். ஊரில் பாதி பேர் அவரின் நிலத்திலும், தொழிற் சாலைகளிலும் பணிபுரிந்து வந்தனர். வீட்டிலும் இருபது வேலையாட்கள். அவர்களுக்கெல்லாம் தன் மாளிகையையொட்டி சிறுசிறு குடியிருப்பைக் கட்டிக் கொடுத்திருந்தார்.

அவ்வளவு சொத்துக்களுக்கும் ஒரே வாரிசு காஞ்சனாதேவிதான். அந்த மாளிகையின் இளவரசி. பரந்தாமன் ருக்மணி தம்பதிகளுக்கு வேறு வாரிசு இல்லை. அதனால் மகள் மீது உயிரையே வைத்திருந்தனர்.

"காஞ்சனா ரெடியாய்ட்டாளா?" ஹாலில் பர்மா தேக்கில் வேலைப்பாடுடன் இழைக்கப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்திருந்த பரந்தாமன் கேட்டார்.

"இன்னும் இல்லீங்க... பார்த்துட்டு வர்றேன்" என்று நகர்ந்த ருக்மணி மேல் இரண்டு கிலோ நகை தேறும்.

"என்ன பயலுகளா மசமசன்னு நிக்கறீக? அம்புட்டையும் எடுத்துப் போய் காரில் வைங்க!"

அதட்டல் போட, கைகட்டி நின்றிருந்த வேலையாட்கள் பரபரவென செயல்பட்டு, பூ, பழம், பட்டு அடங்கிய வெளித்தட்டுகளை காரில் கொண்டு வைத்தனர்.

"பூபாலன்..."

"ஐயா!" வாயில் கைப்பொத்தி பணிவாய் கூன் வளைத்து நின்றார் அறுபது வயது டிரைவர்.

"தட்டுக்களை எந்தக் காரில் வச்சாங்க?"

"அம்பாசடர் ஐயா!"

"அதை நீலமேகம் ஒட்டி வரட்டும். நீ பென்ஸ் எடு..."

"உத்தரவு ஐயா!"

ருக்மணி மகளின் அறைக்குள் நுழைந்தாள்.

கழுத்தில் வைர நெக்லஸை அணியச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். உள்ளே நுழைந்த அம்மாவை டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடியில் பார்த்து விட்டு சிணுங்கினாள்.

"எதுக்கும்மா என்னை இத்தனை நகைகளையும் போட்டுக்கச் சொல்றே? தொந்தரவா இருக்கும்மா!"

"அப்படியெல்லாம் பேசக் கூடாது. குபேரன் வீட்டு குலவிளக்கு நீ... இப்படிக் காட்டு" என்று நீலக்கல் பதித்த வைர நெக்லஸை ஒழுங்காய் அணிவித்தாள்.

சிவப்பில் நீலக்கலர் பார்டர் இடப்பட்ட பட்டுப் பாவாடை தாவணியில், தலைநிறைய சூடப்பட்ட முல்லைச் சரத்தில், அணிந்திருந்த நகையில், அழகிய பொற்சிலை போல் இருந்தாள் காஞ்சனா தேவி.

"என் கண்ணே பட்டுவிடும்போல் எத்தனை அழகாய் இருக்கிறாய் தெரியுமா?"

"நாள் தவறாம இதையே சொல்லிட்டிரு. இப்ப எதுக்கும்மா கோவிலுக்குப் போகிறோம்?"

"ஆடி வெள்ளிக்கிழமை. அம்மனுக்கு பட்டு சார்த்தணும். என் தங்கத்துக்கு ஏத்த இளவரசன் கிடைக்கணும்னு வேண்டிக்கணும்."

"போம்மா... எனக்கு கல்யாணமே வேணாம். உன்னைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியாதும்மா."

"எல்லாப் பொண்ணுகளும், ஏன் நான் கூடத்தான் எங்கம்மாக்கிட்டே இதே வசனத்தைப் பேசியிருக்கேன். ஆனா, புருஷன்னு ஒருத்தர் வந்துட்டப் பிறகு, தாய் வீட்டையே மறந்துடுவாங்க."

"நான் அப்படியில்லை. எனக்கு நீதான் முக்கியம்! உன்னைப் பிரிஞ்சு ஒரு நிமிஷம் கூட என்னால இருக்க முடியாது."

"கோவிலுக்குப் போறப்ப இதென்ன அபசகுனமா பேசிக்கிட்டு? கிளம்பு!" சின்ன அதட்டலுடன் உள்ளே வந்தார் பரந்தாமன்.

"இ... இதோப்பா... கிளம்பிட்டேன்!" கண்களில் மிரட்சியுடன் தாயிடம் ஒட்டிக் கொண்டாள்.

"ஏன்டா தங்கம்... ஏன் இப்படி என்னைப் பார்த்து பயப்படறே? வா... இப்படி!" மகளை தன் பக்கம் அழைத்து ஆதுரமாய் தலையை வருடி அழைத்துச் சென்றார்.

* * *

அர்ச்சனை முடிந்து திரும்பியிருந்தனர்.

பென்ஸ் காரிலிருந்து இறங்கிய பூபாலன், அவசர, அவசரமாக கார்க் கதவுகளை திறந்து விட்டார்.

மூவரும் இறங்கினர்.

அவர்களைப் பின் தொடர்ந்த பூபாலன், ''ஐயா'' என்று தயக்கமாய் இழுத்தார்.

''என்ன?''

''ஐயா... அரை நாள் விடுப்பு வேணும்!''

''எதற்கு?''

''என் பையன் கபிலன் இன்னைக்கு மெட்ராஸ்லேர்ந்து திரும்பி வர்றான்.''

காஞ்சனா தடக்கெனத் திரும்பினாள்.

''கபிலன்?''

''ஆமாங்கய்யா... பட்டப் படிப்பை முடிச்சிட்டு இன்னைக்கு நம்ம ஊருக்குத் திரும்பி வர்றான்யா... அவனைப் போய் ஸ்டேஷன்லேர்ந்து அழைச்சிட் வரணும்.''

''ஏன்... அவனுக்கு வீட்டுக்கு வந்து சேரத் தெரியாதா?''

''எங்கப் பரம்பரையிலே பட்டப்படிப்பு படிச்ச முதல் பிள்ளை. குடும்பத்தோடப் போய் வரவேற்கணும்னு ஆசைப்படறோம் ஐயா!''

''பாவம் ஆசைப்படறார்... அனுப்பித்தான் வையுங் களேன்!''

ருக்மணி சிபாரிசுக்கு வர, ''சரி... சரி... போ! உன் பையன் வந்ததும் என்னை வந்துப் பார்க்கச் சொல்லு. நல்ல வேலையாப் போட்டுத் தர்றேன்.''

''ரொம்ப நன்றிங்கய்யா...!''

என்றவனை அலட்சியமாய் பார்த்தார் பரந்தாமன்.

இரண்டு தலைமுறையாய் பூபாலனின் அப்பா, தாத்தா எல்லோரும் இவர்களிடம் டிரைவராக வேலைப் பார்த்தவர்கள் தான்.

காஞ்சனாதேவிக்கு ஆச்சர்யமாய் இருந்தது.

'எப்படி கபிலனை மறந்துப் போனோம்? இந்த ஐந்தாறு வருடத்தில் அவனை ஒரு நாள் கூட நினைத்ததில்லையே!'

கபிலன்!

அவள் வீட்டு கார் டிரைவரின் மகனாய் இருந்தாலும், சிறு வயது நண்பன்! இருவருக்கும் இரண்டு மூன்று வயது வித்தியாசம். மாளிகையையொட்டிய குடியிருப்பு என்பதால் வேலைக்காரர்களின் பிள்ளைகளோடு அப்பா, அம்மா இல்லாத நேரத்தில் விளையாடுவதுண்டு!

கபிலன் படிப்பில் கெட்டி! அதனால் மெட்ராஸிலுள்ள தம்பி வீட்டில் தங்க வைத்துப் படிக்க வைத்தார் பூபாலன்.

அவள் நினைவில் கலங்களாய் வந்தான் கபிலன். எவ்வளவு முயன்றும் தெளிவான முகம் நினைவிற்கு வர மறுத்தது.

'வரட்டும்... பார்த்துக் கொள்ளலாம்!'

* * *

''ஐயா!''

மாலை பேப்பரை வாசித்துக் கொண்டிருந்த பரந்தாமன் நிமிர்ந்துப் பார்த்தார்.

பூபாலனும், ஒரு இளைஞனும் நின்றிருந்தனர்.

"ஐயா... இவன்தான் என் பையன் கபிலன். ஐயா கால்ல விழுந்து வணங்கு!"

கபிலன் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கினான்.

"நல்லாயிரு... என்ன படிச்சிருக்கே?"

"பி.காம். சார்!"

"ஐயான்னு சொல்லு!" முணுமுணுத்தார் பூபாலன்.

"இருக்கட்டும், இருக்கட்டும். படிச்சப் புள்ளையாச்சே... அப்படித்தான் சொல்லும்... டிரைவிங் லைசன்ஸ் வச் சிருக்கியா?"

"வச்சிருக்கேன் சார்!"

"நல்லது... நீலமேகம் சரியில்லே... நாளைலேர்ந்து நீ கார் ஓட்டு! அப்புறமா நம்ம தொழிற்சாலையிலே நல்ல வேலையிலே தூக்கிப் போட்டுக்கறேன்!"

"சரின்னு சொல்லு!" கிசுகிசுத்தார்.

"சரி சார்!"

படியில் இறங்கி வந்து கொண்டிருந்த காஞ்சனா அசந்து போனாள்.

'இவ்வளவு அழகாய், கம்பீரமாய், சினிமா கதாநாயகன் போல் நிற்பது கபிலனா?'

கபிலன் அவளைப் பார்த்தும் பார்க்காததுப் போல் நின்றான்.

"கபிலன்... என்னைத் தெரியலே.. நான்தான் காஞ்சனா!" என்று அவன் முன் வந்து நிற்க... மற்ற மூவரும் திடுக்கிட்டு நிமிர்ந்தனர்.

13

காஞ்சனா அம்மாவின் மடியில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள்.

"அப்பாதானே திட்டினார்... உன்னைத் திட்ட அவருக்கு உரிமையில்லையா காஞ்சனா?" மகளின் தலையை பரிவாய் கோதி விட்டாள் ருக்மணி.

"அப்படி என்ன தப்புப் பண்ணிட்டேன்? கபிலனிடம் பேசியது தப்பா?"

"தப்பில்லை. ஆனால் நமக்கென்று ஒரு மரியாதை இருக்கிறது. நாம் கொடுப்பவர்கள். அவர்கள் வாங்கிக் கொள்கிறவர்கள். அவர்களை நமக்கு சரிசமமாய் வைத்து நடத்துவது தவறும்மா. இனி, ஒரு முதலாளியைப் போல் நடந்துக் கொள்!"

"காஞ்சனாவுக்கு வெறுப்பாய் இருந்தது. அழுகையை நிறுத்தி, மடியிலிருந்து எழுந்தாள்.

'என்ன மனிதர்கள் இவர்கள்? கொடுப்பவர்களாம், அவர்கள் வாங்கிக் கொள்கிறார்களாம்? சும்மாவா கொடுக் கிறார்கள். பிழியப் பிழிய வேலை வாங்கவில்லை. அந்த உழைப்புக்கேற்ற ஊதியம் தானே தருகிறார்கள்? உழைப்ப தால் அடிமைகளா அவர்கள்?'

அந்த வெறுப்பு, தன் பால்யகால நண்பனிடம் நெருங்கிப் பழக வேண்டுமென்ற உந்துதலைதான் ஏற்படுத்தியது. ஆனால், மனதில் எந்தவித தவறான எண்ணமும் இல்லை.

கபிலனுக்கு அப்பாவைப் போலவே கார் ஓட்டுவதில் விருப்பமே இல்லை. தன் படிப்புக்கேற்ற வேலையை சென்னையில் பார்த்து அங்கேயே குடும்பத்தாருடன் செட்டிலாக வேண்டுமென்ற எண்ணத்தில்தான் ஊர் வந்தான். ஆனால், முதலாளி கார் ஓட்டச் சொல்லவும். உள்ளுக்குள் சிறு கோபம் எட்டிப் பார்த்தது நிஜம். அப்பாவின் வற்புறுத்தலுக்காகவே கார் ஓட்டி வந்தான். இரண்டாவது, பணக்காரத்தனம் துளியும் இல்லாத எளிமையான பால்யகால சிநேகிதியான காஞ்சனாவுக்காக வும்தான் பொறுத்துப் போனாள். காலமாற்றம் அவளையும் திமிர் பிடித்த பணக்காரியாய் உருவாக்கியிருக்கும் என்று எண்ணி எதிர்பார்த்து வந்தவன், இன்னமும் மனதளவில் குழந்தையாய் வளர்ந்திருந்த அவள் மீது மரியாதையும் பாசமும்தான் அதிகரித்திருந்தது.

பெற்றோர் எதிரில் கபிலனிடம் ஒரு வார்த்தைக் கூட பேசாமல் அவர்களுக்கு அடங்கியப் பெண் போல காட் டிக் கொண்டாள். யாருமற்ற நேரத்தில் தங்களின் கள்ள மற்ற நட்பை வளர்த்து வந்தனர்.

ஒரு நாள்... எட்டு வயது சிறுமி ஒருத்தி கிணற்றில் தவறி விழுந்து விட, பயங்கர ஆழமான அக்கிணற்றில் இறங்க அனைவருமே தயங்க, கபிலன் தான் சிறிதும் தாமதியாது, தன் உயிரையும் பொருட்படுத்தாது இறங்கிக் காப்பாற்றினான்.

செய்தி காதுக்கு வர பதறிப்போன காஞ்சனாவுக்கு அதுமுதல் அவன் மீது புதுவிதமான பாசம் ஊற்றெடுத்தது.

அது... காதல் என்று புரிந்துக்கொள்ள வெகு நாள் அவகாசம் தேவைப்படவில்லை.

அந்தக் காதலை அவள் ஒருத்தியே சுமந்துக் கொண் டிருந்ததால் மனச்சுமையால் களைத்துப் போனாள். கபிலனிடம் சொல்ல, சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந் தாள்.

அந்த நாளும் அமைந்தது. அதையும் அவளே ஏற்படுத்திக் கொண்டாள்.

எல்லாக் காரும் வெளியில் சென்றிருக்க... பியட் மட்டுமே இருந்தது.

உடைமாற்றி தயாரானவள் அம்மாவின் முன் போய் நின்றாள்.

"அம்மா... நான் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்."

"என்னடி இது புதுசா இருக்கு? நாங்க கூப்பிட்டா சிணுங்குவே... இப்ப நீயே போறேன்றே...?" வியப்பாய் கேட்டாள்.

"செவ்வாய் கிழமைகள்ல துர்கைக்கு விளக்கேத்தினா நல்லது நடக்கும்னு படிச்சேன். போக வேண்டாம்னாப் போகலை. அதுக்கு இத்தனைக் கேள்விகளா?"

"ஏன்டி தங்கம் அதுக்குள்ளே கோவிச்சுக்கறே? முன் னாடியே சொல்லியிருந்தா நானும் தயாராயிருந்திருப் பேனே... இப்ப நீ மட்டும் எப்படித் தனியாப் போவே?"

"ஏம்மா... நான் என்ன சின்னக் குழந்தையா? வீட்லேக் கார் இருக்கு... டிரைவர் இருக்காரு... போகத் தெரியாது?"

"அநியாயத்துக்கு கோபம் வருதுடி உனக்கு... சரி, போய்ட்டு வா!"

அடுத்த கணமே சிட்டாய் பறந்து விட்டாள்.

"என்ன காஞ்சனா, இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கிற மாதிரித் தெரியுது!" காரை ஓட்டிக் கொண்டே

ரியர்வியூ மிர்ரரில் பின்புறம் அமர்ந்திருந்த காஞ்சனாவை கவனித்தான் கபிலன்.

"ஆமாம்... ரொம்பவே!" காது ஜிமிக்கி நளினமாய் ஆட, மென்னகைத்தாள்.

"என் தோழி எப்பவும் இதே மாதிரி இருக்கணும்."

"எல்லாம் உன் ஆசீர்வாதம் கபிலன்!"

"கிண்டலா? என்ன காரணம்னு தெரிஞ்சுக்கலாமா?"

"முதல்ல கோவிலுக்குப் போய்ட்டு, அப்புறம் சொல் றேன்."

"அதுவும் சரிதான். நானும் உனக்காக சில விஷயங்கள் கொண்டு வந்திருக்கிறேன்."

"என்ன அது?"

"அர்ச்சனை முடிந்தப் பிறகு... ஓக்கே?"

"இப்பவே சொல்லக் கூடாதா?"

"நான் யாரு? தி கிரேட் காஞ்சனாவின் ப்ரண்டாக்கும். அர்ச்சனை முடியாம சொல்லக் கூடாது!"

"ரொம்பத்தான்!" பொய்க்கோபம் காட்டினாள்.

அதெல்லாம் சில கணங்கள்தான். கோவில் வந்ததும் கலகலவெனச் சிரித்தபடி இறங்கினாள்.

"உள்ளே வா கபிலன்!"

"ப்ச்... நீ மட்டும் போ! நான் வரக்கூடாது!"

"நான் தானே கூப்பிடறேன்... வா!"

"இல்லே காஞ்சனா... யாராவது பார்த்துட்டா உங்கப் பாக்கிட்டே தப்பா சொல்லுவாங்க. நீ மட்டும் போய் வா!"

"இப்ப வரப்போறியா, இல்லையா?" அவன் கைப்பற்றி இழுக்க, பதறிப் போனாள் கபிலன்.

"என்னம்மாயிது சிறு பிள்ளைத்தனம்? சரி கையை விடு... நானே வர்றேன்!"

"அப்படி வா... வழிக்கு!" வெற்றிக் களிப்போடு அவனோடு சேர்ந்து நடந்தாள்.

அர்ச்சகர் அவர்களை வித்தியாசமாய் பார்த்தார்.

"ஏன் பாப்பா... உங்காத்துலேர்ந்து யாரும் வரலியா?"

"இல்லே...!"

அர்ச்சனை முடிந்து திரும்பி வரும்போது ஒதுக்குப் புறமாய் நிறுத்தச் சொன்னாள் காஞ்சனா.

"நாம ரொம்ப நேரம் இங்கே நிற்கக் கூடாது காஞ்சனா. இந்தா.. உனக்கு புளியோதரையும், பணியாரமும் பிடிக் கும் என்று எடுத்து வந்தேன்... சாப்பிடு!"

"பாரேன்... நானும் உனக்குப் பிடிக்குமேனு பால் கோவாவும், லட்டும் கொண்டு வந்தேன்! சாப்பிடு!"

இருவரும் நெகிழ்ச்சியுடன் சாப்பிட்டு முடித்தனர்.

"இது காலேஜ்ல படிக்கறப்ப எடுத்த போட்டோ ஆல்பம்... பார்க்கறியா?"

"குடு... குடு!" ஆவலாய் வாங்கிப் பார்த்தவள் அவ னின் சிறு வயது புகைப்படங்களும் இருக்கவே பழைய நினைவுகள் கிளற பார்த்தாள்.

"கபிலன்... இதிலே சில புகைப்படங்களை நான் எடுத்துக்கட்டுமா?"

"உனக்கெதற்கு காஞ்சனா?" என்றான் தயக்கத்துடன்.

"வேணும்... தரமாட்டியா என்ன?"

"ம்... எடுத்துக்க...!"

சின்ன வயது போட்டோக்கள் உட்பட ஆறேழு படங்களை உருவிக் கொண்டாள்.

"சரி... கோவிலுக்குப் போய்ட்டு வந்த பிறகு சொல்றேன்னு சொன்னியே... சொல்லு என்ன விஷயம்?"

வெட்கத்துடன் தலை கவிழ்ந்தாள்.

"அட... என்ன இது புதுப் பொண்ணாட்டம்? சொல்லும்மா... என் தோழிக்கு கல்யாணம் முடிவாய்டுச்சா?"

"ம்ஹூம்..."

"பின்னே?"

"திரும்பி நின்னுக்க... அப்பத்தான் சொல்லுவேன்!"

"சரி... நின்னாச்சு... சொல்லு!"

"ரொ... ரொம்ப நாளா உன்கிட்டே இதைப் பத்திப் பேசணும்னு நினைச்சிட்டிருந்தேன்."

"எதைப்பத்தி?"

"திரும்பாதே!"

"சரி!"

"எனக்கு வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்கலே கபிலன்...! நா... நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கத்தான் ஆசைப் படறேன்."

"கா... ஞ... ச...னா!" அதிர்வுடன் திரும்பினான்.

"என்ன... என்ன இப்படிப் பேசறே? கனவுலேக் கூட இப்படி நினைக்காதே!"

"ஏன் கபிலா என்னை உனக்குப் பிடிக்கலையா?"

"அற்புதமான குழந்தை நீ! உன்னைப் பிடிக்காமக் கூட போகுமா? சாத்தியமில்லாத, ஆசைப்படக்கூடாத எந்த விஷயத்தையும் அடையணும்னு நினைக்கக் கூடாது. இந்த ஊர்ல உங்கப்பாவோட ஆட்சி நடக்குது. உன் கிட்டே பேசறேன்னுத் தெரிஞ்சாலே போதும்... என் உயிர் போறதுக்கு. நீ பாரிஜாத மலர் காஞ்சனா. உன் நட்பு கிடைக்கவே பெரிய அதிர்ஷ்டம் பண்ணியிருக்கேன். அது போதும் எனக்கு. கண்டதையும் போட்டுக் குழப்பிக்காதே! சீக்கிரமே மெட்ராஸ்ல எனக்கு வேலை கிடைச்சிடும். குடும்பத்தோடு அங்கே செட்டிலாய்டுவேன். நமக்குள்ளே எப்பவும் இந்த நட்புப் போதும். நான் உன்னை எப்பவும் மறக்க மாட்டேன். உனக்கு கல்யாணம் நிச்சயமானதும் என் போட்டோக்களை அழிச்சிடு!"

"கபிலன்... என்ன கபிலன் இப்படிப் பேசறே? நான் உன் மேலே ஆசை வச்சிட்டேன்! என்னால உன்னை மறக்க முடியாது. நான் உன் கூடவே மெட்ராஸ்க்கு வந்துடறேன். என்னை விட்டுட்டுப் போய்டாதே!" அவன் கைகளைப் பற்றிக் கொண்டு அழுதாள்.

"ஐயோ... கையை விடு காஞ்சனா! யாராச்சும் பார்த்துடப் போறாங்க. இதோப் பாரும்மா... மொதல்ல அழறதை நிறுத்து! ஒரு பக்கம் பெருமையா இருக்குதான்... மறுக்கலே. இந்த தேவதையோட நேசம் எனக்குக் கிடைச்சிருக்கேன்னு. சில நியதிகள் மாறக் கூடாது காஞ்சனா. கர்ப்ப கிரஹத்துல இருக்கிற சிலை... வெட்ட வெளிக்கு வரக்கூடாது. கோவில் கோபுரத்தின் நிழல் மணல்ல விழறதுக்காக... அது மணலுக்கு சொந்தமாய்டாது. புரிஞ்சுக்க காஞ்சனா. அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா... அப்பக்கூட நீ என் மனைவியா வரணும்னு

ஆசைப் படமாட்டேன். உன் வயித்துல மகனா பிறக் கணும்னுதான் ஆசைப்படுவேன். ஏன்னா, அந்தளவுக்கு உன் மீது மரியாதை வச்சிருக்கேன். குழம்பாம, கலங்காம வண்டியிலே ஏறு! இங்கே நடந்ததெல்லாம் மறந்துடு. என்ன? ஏறும்மா!'' என்றான் இதமாக.

இதயத்தை கசக்கிப் பிழிவதுபோல் ஓர் வலி! காஞ்சனா ஏறி அமர்ந்தாள்.

தூரத்திலிருந்து ஓர் உருவம் இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது.

14

இரவெல்லாம் அழுதழுது தலை கனத்தது.

அன்றைய விடியல் கோரமாய் விடிந்தது!

கபிலன் லாரி விபத்தில் நசுங்கி இறந்த செய்திதான் முதலில் காதில் விழுந்தது.

செய்தியின் கனம் தாங்காமல் மயங்கி விழுந்தாள் காஞ்சனா.

பிறகுதான் உண்மை அத்தனையும் தெரிய வந்தது. நேற்று பேசிக் கொண்டிருந்ததை யாரோ பார்த்து விட்டு பரந்தாமனிடம் கொளுத்திப் போட, அன்றே அவனை ஆட்கள் மூலம் லாரி ஏற்றி கொன்று விட்டார்.

காஞ்சனாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மயிலிறகை விடவும் மென்மையான அவளின் உள்ளம்

கபிலன் இப்போது, இந்த கணம் இப்பூவுலகில் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்தது. ஆனால் அதுதான் உண்மை என்று உணர்ந்தபோது இதயத்தை சம்மட்டி யால் யாரோ பிளப்பதுப் போல் துடித்தாள்.

'தன்னால்தானே அந்த நல்லவனுக்கு இப்படியோர் கோர முடிவு?' பழி உணர்ச்சியில் பித்துப் பிடித்தவள் போலானாள்.

மறக்க முயன்றும் 'அற்புதமான குழந்தை நீ!' என்று கண்முன் வந்து சிரித்தான் கபிலன்.

அதன் விளைவு... பல மாதங்களாக படுக்கையில் விழுந்தாள் காஞ்சனா.

எப்படியோ தேறி எழுந்தவள்... தந்தையின் முகம் பார்த்துப் பேசுவதை நிறுத்தினாள்.

அதுவே அவருக்குப் பெரிய தண்டனையாய் அமைந்து விட்டது.

ருக்மணியின் அண்ணன் மகன் பாலகிருஷ்ணனுக்கு திருமணம் பேசி முடிக்கிறார்கள்.

காஞ்சனா மறுப்பும் சொல்லவில்லை. சம்மதமும் சொல்ல வில்லை. பரந்தாமன் இருக்கும் இடத்தை விட்டுப் போனால் போதும் என்ற எண்ணம் மட்டும்தான் மேலோங்கி இருந்தது.

திருமணம் முடிந்தது.

மகளின் பாராமுகம் பரந்தாமனை வெகுநாள் உயி ரோடு விட்டு வைக்கவில்லை. கணவர் இறந்த துக்கம் தாளாமல் ருக்மணியும் நான்கே மாதத்தில் போய் சேர்ந்து விட்டாள்.

பாலகிருஷ்ணன் மிக நல்லவராய் இருந்தார். அவரிடம் எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொன்னாள். அவருக்கும் ஓரளவு விவரம் தெரிந்திருந்ததால்... மனை வியை ஆறுதல் படுத்தினார். அந்த மனித நேயம் கணவரின் மேல் மரியாதையை அதிகப்படுத்த... எல்லாம் மறந்து இனிதாய் குடும்பம் நடத்தினாள்.

ஒரு வருடம் கழித்து ஆண் குழந்தைப் பிறக்கிறது. அந்த சாயல் யாரையோ நினைவுப் படுத்தியது. வளர... வளர... அச்சு அசலாய் கபிலனைப் போலவே! கபிலனின் சிறு வயதுப் புகைப்படமும், ஷியாமின் குழந்தைப் பருவமும் இம்மி பிசகாது ஒரே மாதிரி இருந்தது.

கபிலனையே நேரில் பார்ப்பது போல் துடித்தாள் காஞ்சனா. கள்ளமற்ற சிரிப்பு அவள் நெஞ்சில் ஈட்டியை பாய்ச்சியது.

'நான் சொன்னதைக் கேட்டிருந்தால்... எனக்கு இந்த கதி ஏற்பட்டிருக்குமா? வயதான காலத்தில் என் பெற் றோரையும் தவிக்கவிட்டு, அகாலமாய் மரணமடைய யார் காரணம்? நீயும்... உன் காதலும் தானே?'

நேரே நின்று கபிலனே தன்னை கேள்விக் கேட்பது போல் கற்பனை செய்து கொண்டாள். மனநோயால் பீடிக்கப்பட்டாள். குழந்தையைப் பார்க்கவே பயந்தாள். தூக்க மறுத்தாள். எங்கே இதனால் குழந்தையை வெறுத்து விடுவோமோ என்று பயந்தாள்.

பாலகிருஷ்ணன் செய்வதறியாது திகைத்தார். ஆசை யாய் சுமந்துப் பெற்ற மகனை தூக்கி கொஞ்ச முடியாமல் தவித்த தன் மனைவியை பரிதாபமாய் பார்த்தார். காஞ் சனா யோசித்து அந்த முடிவுக்கு வந்தாள். ஆரம்பத்தில் பாலகிருஷ்ணன் அதற்கு சம்மதிக்கவில்லை. மனைவி

யின் வற்புறுத்தலும், வேறு வழியும் இன்றியே ஒப்புக் கொண்டார். ஜோதிடத்தை காரணமாய் சொல்லி ஷியாம் மேகநாதனுக்கு தத்துக் கொடுக்கப்பட்டான். இரண்டு வருடம் கழித்து அனாதை ஆஸ்ரமத்திலிருந்த விஷ் ணுவை தத்தெடுத்துக் கொண்டனர்.

கண்ணீர் வழிய எல்லாம் சொல்லி முடித்த காஞ்சனா, கபிலனின் போட்டோக்களை காட்டினாள். அதைப் பார்த்த பாவனா துணுக்குற்றாள்.

கறுப்பு, வெள்ளை புகைப்படத்தில் சற்றே கரையான் அரித்திருக்க... ஷியாமின் உருவமாய் கபிலன்!

பீரோவைத் திறந்து காட்டினாள்.

ஷியாமைப் பிரிந்திருந்தாலும், அவனுக்காக சின்ன வயது முதல் இக்காலம் வரையில் பண்டிகை, பிறந்த நாட்களில் எடுத்த துணிமணிகள் வரிசையாய் மாட்டப் பட்டு...

பாவனா அவளைப் பரிதாபமாய் பார்த்தாள்.

''சொல்லு பாவனா... நான் என்ன பண்ணுவேன் சொல்லு! அறியா வயதில் நான் காதலித்தது தப்பா? என் பிள்ளையை வாரி அணைச்சுக் கொஞ்சக் கூட வேண் டாம். நிமிர்ந்து ஆசைத் தீரப் பார்க்கக் கூட முடியலி யேம்மா! அப்படியென்ன பாவம் பண்ணிட்டேன்? எனக்கேன் இந்த தண்டனை? அவன் ஆசைப்பட்டபடி கபிலன் என் வயித்திலே வந்துப் பொறந்துட்டான். ஆனா, நெஞ்சு அரிக்குதே பாவனா! எந்தத் தாய்க்கும் இப்படியொரு நிலைமை வரவேக் கூடாது. பாவனா... பாவனா... ஷியாமைப் போல் நீயும் என்னை வெறுத் துடுவியாம்மா?''

''நீங்க எந்தத் தப்பும் பண்ணலே அத்தை! நான் உங்களை எந்த சந்தர்ப்பத்திலேயும் வெறுக்க மாட்டேன்!'' மாமியாரை அணைத்துக் கொண்டாள்.

''இதை ஷியாம்கிட்டே சொல்லிடாதேம்மா!''

''சொன்னாப் புரிஞ்சுப்பார் அத்தை!''

''வேண்டாம்மா. தன்னைப் பெத்த அம்மா வேற ஒருநபரை காதலிச்சான்னு தெரிஞ்சா... என்னை இன்னும் அசிங்கமா நினைப்பான்... வேண்டாம் விட்ரு! நான் சொன்னதையெல்லாம் இங்கேயே மறந்துடு!''

பாவனாவின் மனம்தான் கனத்துப் போனது.

* * *

மலேசியாவிலிருந்து திரும்பிய ஷியாம் தன் குடும்பத்தினருக்காக எக்கச்சக்கமான பொருட்களுடன் வந்திருந்தான். தந்தைக்கும் தாய்க்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தவன், தீப்திக்கு லேப்-டாப் கம்ப்யூட்டர், ஹான்டி கேமரா, கையடக்க டி.வி. டிரஸ்ஸஸ் என்று அள்ளிக் கொடுத்தான்.

காதல் மனைவிக்காக ஒரு லேப் - டாப் கம்ப்யூட்டர், சாக்லேட், சென்ட் வகைகள், புடவைகள் என தந்து பிரம்மிக்க வைத்தான்.

''எதுக்குங்க இவ்வளவும்? தீப்தி... இதிலிருந்து நாலைந்து சாரீஸ் எடுத்துக்கோயேன்!''

''வேண்டாம் அண்ணி! எனக்கும் அண்ணன் நிறைய டிரஸ்ஸஸ் தந்திருக்காரே! தாங்க்யூ ஸோ மச் அண்ணா!'' அவன் கன்னத்தில் முத்தமிட்டு தன் நன்றியை தெரிவித்து விட்டு சென்றாள்.

''எல்லாம் பிடிச்சிருக்கா பாவனா?''

''ரொம்பவே!''

''இந்த ஒரு வாரம் ரொம்ப அவஸ்தைப்பட்டுட்டேன் டியர். பொண்டாட்டின்னு ஒருத்தி வந்துட்டப் பிறகு, அவளில்லாம தூங்கறதுங்கறது பெரிய கொடுமை தெரியுமா? நீ எப்படிடா தவிச்சே?'' தாபத்துடன் அவள் தோளில் முகம் புதைத்துக் கொண்டான்.

''லேடீஸ் வாய்விட்டு சொல்ல மாட்டாங்க. சொல்லவும் கூடாது. புருஷன்தான் அதை அவங்களாகவே உணரணும்.''

''ஓஹோ... அப்ப நீ தவிச்சத் தவிப்பை நானே கண்டுபிடிக்கணும்ங்கறே! குட், இதுவும் நல்ல விளையாட்டாயிருக்கே? இன்னைக்கு விடிய விடிய சி.ஐ.டி. வேலைதான் எனக்கு!'' கன்னத்தை வலிக்காமல் கடித்தான்.

ஆனாலும் அலறினாள்.

''ஆவ்... வலிக்குது... விடுங்க!''

''இதுக்கே இப்படி அலறினா எப்படி? நைட்டுக்கு பயங்கரமா கடிக்கப் போறேனே... அப்ப என்ன பண்ணுவே?''

''கத்தி ஊரைக் கூட்டுவேன்.''

''செய்... செய்... எனக்கொன்னும் அசிங்கமில்லே. என் பொண்டாட்டியை நான் கடிப்பேன், அப்படியே சாப்பிடுவேன்.. யார் என்னைக் கேட்பது?''

''சரிங்க... போதும் விளையாட்டு. நான் ஒண்ணுக் கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே?''

''என்னடா?''

''தீப்திக்கு வாங்கிட்டு வந்தீங்க... சரி! அவள் உங்க தங்கச்சி, உங்க மேலே ரொம்ப பாசமா இருக்கிறா... ரைட்... அவளை சந்தோஷப்படுத்தினது ரொம்ப ரொம்ப சரி! ஆனா, வித்யாவுக்கும் ஏதாவது வாங்கி வந்திருக்க லாமே...!''

''.....?!'' முகம் கடுகடுப்பானது.

''அவளும் உங்களுக்கு தங்கச்சிதானே? அதுவும் சொந்த தங்கச்சி. உங்கம்மா மேல் கோபம் சரி! பாவம் சின்னப் பொண்ணு அவ என்னங்க பண்ணினா?''

''அவளும் அந்த கேடு கெட்டவள் வயிற்றில் பிறந்தவள் தானே?''

''ஸ்டாப்பிட் ஷியாம்!''

பாவனாவின் அதட்டலில் ஆடிப் போனான்.

''உண்மை என்னன்னு தெரிஞ்சுக்காம, தெரிஞ்சுக்க முயற்சிக் கூடப் பண்ணாம, ஒரு லேடியை... அது பெத்தத் தாயாய் இருந்தாலும் அவங்களைப் பத்தி தரக்குறைவா பேச உங்களுக்கு எந்த ரைட்ஸும் இல்லை!'' அவனை முறைத்துவிட்டு எழுந்துப் போய் விட்டாள்.

ஷாக்கிலிருந்து மீளவில்லை ஷியாம். பாவனா அவனிடம் இந்தளவு கடுமையாய் பேசியது... இதுவே முதல் முறை!

* * *

மாதங்கள் பலவாயின!

பாவனாவுக்கு இது ஐந்தாவது மாதம்!

ஷியாம் அவளை கண்ணிமைக்குள் வைத்துப் பாதுகாத்தான். அவள் ஆசைப்பட்டதை எல்லாம் கேட்டுக்

கேட்டு வாங்கித் தந்தான். சாப்பிடக் கூட நேரமின்றி பிஸினஸ் செய்தவன்... மனைவியுடன் கடை கடையாய் ஏறி இங்கினான். தினசரி மாலை கடற்கரைக்கு வாக்கிங் அழைத்துச் சென்றான்.

''உண்மையைச் சொல்லுங்கள். என்ன குழந்தைப் பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்?'' என்று கேட்டாள் பாவனா.

''ஆணோ, பெண்ணோ... எது பிறந்தாலும் அது என் குழந்தை... என் ரத்தம். சீக்கிரம் பெத்துக்கொடு... கொஞ்ச வேண்டும்போல் ஆசையாய் இருக்கிறது'' என்றான் குழந்தையாய்.

'குழந்தைப் பிறக்குமுன்பே இவ்வளவு ஆசை வைத்திருக்கிறாரே... உரிமைக் கொண்டாடுகிறாரே... அப்படித் தானே இருக்கும் அத்தைக்கும்? தன்னைப் பெற்றவளுக்கும் இதே உணர்வுகள் இருக்கும் என்று ஏன் புரிந்துக் கொள்ள மறுக்கிறார்? வயிற்றில் சுமக்கும்போதே... நெக்குறுகி போகிறேனே... அத்தையும் அப்படி சுமந்தவர் தானே? தன் தொப்புள் கொடி உறவை இன்னொருவனுக்கு தத்துக் கொடுப்பதென்றால் எத்தனை மனச் சித்ரவதைக்கு ஆளாகியிருக்க வேண்டும்?' மாமியாருக்காக உள்ளம் கசிந்தது.

15

நகரின் மிகப் பிரபல தொழிலதிபரும், கோடீஸ்வரருமான ரங்கராஜனின் ஒரே மகள் சொர்ணலதாவை விஷ்ணு

விற்குப் பேசி முடிக்கின்றனர் பாலகிருஷ்ணனும், காஞ்சனாவும்.

பாவனாவிற்கு எந்த வகையிலும் குறைவில்லாத அழகியாய் இருந்தாள் சொர்ணலதா. திருமண விஷயத்தில் பெண் பார்த்து முடிவு செய்வதில் முதல் எல்லாப் பொறுப்பையும் தாய் தந்தையிடமே விஷ்ணு விட்டு விட்டான்.

திருமணம் மிக விமரிசையாய் நடைபெற்றது. ஹனிமூனுக்காக தம்பதியரை சீஷெல்ஸ் தீவிற்கு அனுப்பி வைத்தனர் இரு வீட்டாரும்.

மனைவிக்கு ஆப்பிள் நறுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்த ஷியாம் அடிக்கடி தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

''என்னங்க சிரிக்கறீங்க... சொன்னா நானும் சிரிப்பேன்ல?'' என்றாள் பாவனா.

''ஒண்ணுமில்லே... அந்த அநாதைப் பயலுக்கு வந்த வாழ்வைப் பார்த்தாயா? தீவுத்திடல்ல பிச்சை எடுக்க வேண்டிய நாயி... சீஷெல்ஸ் தீவுக்கு ஹனிமூனுக்காகப் போயிருக்கானாம். காமெடியா இல்லே?''

''.....?!''

''என்ன டியர் பதிலேக் காணோம்?''

''நோ... கமெண்ட்ஸ்!''

''ஏன் அந்தக் குடும்பத்தைப் பத்திப் பேசினா கஷ்டமா இருக்கா?''

''உங்ககிட்டே எல்லா நல்ல குணங்களும் இருக்கு. ஆனா, அந்தக் குடும்பத்தார் மேலே நீங்க காட்டற

துவேஷத்தால... எல்லா நல்ல குணங்களும் அடிபட்டுப் போயிடுது! எத்தனையோ ஆர்பனேஜ்க்கு லட்சம், லட்சமா தானம் பண்றீங்க. ஆனா, அங்கிருந்து வந்த விஷ்ணுவை கேவலமாப் பேசறீங்க. ஹி இஸ் மை குட் ப்ரண்ட். அவரைப் பத்தி தரக் குறைவாய் பேசறதை நான் விரும்பலே ஷியாம்!''

''ஆப்ட்ரால் ஒரு அநாதைப் பயலுக்காக என்கிட்டே எடுத்தெறிஞ்சுப் பேசறியா?''

''நான் எடுத்தெறிஞ்சுப் பேசலே... எடுத்துச் சொல்றேன். உங்களை எப்படித் தத்தெடுத்தாங்களோ, அதே மாதிரிதான் அவரையும் தத்தெடுத்திருக்காங்க. நீங்க அவரைப் பத்திப் பேச என்ன தகுதியிருக்கு?''

''அவனும், நானும் ஒண்ணாகிட முடியுமா? என் இடத்திலே தான் அவனிருக்கிறான்.''

''அது உங்க இடம்தாங்க! அந்த தாயோட இதயத்துல இன்னமும் நீங்கதான் இருக்கீங்க! அவங்ககிட்டே பேச வேணாம். பார்க்க வேணாம். ஆனா இப்படி பேசிப் பேசி கொல்றதை மட்டும் நிறுத்துங்க ப்ளீஸ்!''

''உனக்கு என்ன தெரியும். அவங்களைப் பத்தி? இப்படி சப்போர்ட் பண்ணிப் பேசாதே... ஆத்திரமா வருது. சனியன்களைப் பத்திப் பேசினாலே... மூடே ஸ்பாயில் ஆயிடுது... சே!'' ஆப்பிளையும், கத்தியையும் தூக்கி எறிந்து விட்டு அறையிலிருந்து வெளியேறினான். சற்று நேரத்தில்... காரின் உறுமல் சப்தம் கேட்டது.

பாவனா ஆயாசமாய் சாய்ந்துக் கொண்டாள்.

* * *

இன்னும் சில ஐரோப்பா நாடுகளுக்கும் சென்று தேனிலவை முடித்துக் கொண்டு ஊர் திரும்பினர் புதுமணமக்கள்.

அவர்களை விமான நிலையத்திற்கே சென்று வரவேற்க காரில் புறப்பட்டனர் பாலகிருஷ்ணனும், காஞ்சனாவும்.

''ரெடியாம்மா? டைமாய்டுச்சு... ப்ளைட் வந்துடும். அதுக்குள்ளே நாமப் போயாகணும்!'' பாலகிருஷ்ணன் அவசரப்படுத்தினார்.

''வந்துட்டே இருக்கேன். சம்பந்தி வீட்லே கிளம்பிட்டாங்களாமா?''

''அவங்க எப்பவோக் கிளம்பி ஏர்போர்ட்டுக்கே போயாச்சு. சம்பந்தி இப்பதான் போன் பண்ணினார்!''

''அம்மா நானும் வர்றேனே ரிசீவ் பண்ண!''

''வேண்டாம்மா... வீட்லே இருந்து மத்த வேலைகளை நீதான் கவனிச்சுக்கணும். ஆரத்தி கரைச்சு வை!''

''அதை சொல்வண்ட் செய்யட்டும்... நானும் வர்றேம்மா ப்ளீஸ்!''

''சொன்னாக் கேளு வித்யா! நீ வீட்லே தான் இருக்கணும்... கிளம்புங்க... அ... ஐய்யோ!'' பேசிக் கொண்டே வேகமாய் நடக்க முற்பட சேலை தடுக்கி குப்புற விழப் போனாள்.

நல்லவேளை... கண்ணிமைக்கும் நேரத்தில் வித்யா தாங்கிப் பிடித்தாள்.

''மைகாட்... பார்த்துப் போம்மா!''

''என்னாச்சு தேவி?'' பதறினார்.

''ஒண்ணுமில்லே... ஒண்ணுமில்லே... சேலை தடுக்கிடுச்சு... அவ்வளவுதான்... போலாமா?''

''ஒரு அஞ்சு நிமிஷம் உட்காரு...''

''வேணாங்க... டைமாய்டுச்சே... போய்டலாம். வர்றோம் வித்யா!''

காஞ்சனா அஞ்சு நிமிஷம் உட்கார்ந்து விட்டே சென்றிருக்கலாம்!

* * *

''ஏன் தேவி... எதுவும் பேசாமலே வர்றே? ஏதாவது பிரச்சினையா என்ன?'' பக்கத்தில் அமர்ந்திருந்த மனைவியை வினாவுடன் வினவினார்.

பாரின் கார் சறுக்கிக் கொண்டு சென்றது. ஏ.சி. சில்லிட்டது. மூடிய கண்ணாடிக் கதவின் வழியே கண்கள் சாலையை வேடிக்கைப் பார்த்தாலும், மனசு எங்கோ பறந்திருந்தது.

''ப்ச்... ஒண்ணுமில்லீங்க...!''

''உன் மனசு எனக்குத் தெரியாதா? என்ன சொல்லு?''

''விஷ்ணுவுக்கு பார்த்துப் பார்த்து கல்யாணம் பண்ணி வச்சோம். சந்தோஷம்தான்... மறுக்கலே! ஆனா, நான் பெத்தப் பிள்ளை... என் ஷியாமோட கல்யாணத்துக்கு நாலு பேரைப் போல போய் கும்பலோட கும்பலா நிக்க வேண்டி வந்ததே... அதை நினைச்சா தாங்க மனசு ரெண்டா விண்டுப் போகுது!''

'என்னது... ஷியாம் சார் இந்தம்மாவோடப் பிள்ளையா?' டிரைவர் தனது காதையும் மனசையும் அவர்கள் பக்கம் திசை திருப்ப...

எதிரே வந்த கண்டெய்னர் லாரியை ஒரே ஒரு கணத்தில் கவனிக்கத் தவறினார்.

விளைவு?

பெரும் அலறல் சத்தங்களுடன் அந்தக் கார் அப்பள மாய் நசுங்கிப் போனது.

* * *

ஹாஸ்பிடலில் அத்தனை உறவினர்களும் குழுமி யிருக்க... வித்யா கதறிக் கதறி அரை மயக்கத்தில் விஷ்ணுவின் மடியில் படுத்திருந்தாள்.

சொர்ணலதா மிரட்சியுடன் கணவன் பக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

ரங்கராஜன் டாக்டர்களுடன் விவாதித்துக் கொண்டிருந் தார்.

மேகநாதனும், அம்சவேணியும் கலங்கியக் கண் களுடன்...

ஆறு மாத சிசுவை வயிற்றில் சுமந்திருந்த பாவனா மூச்சிரைக்க வந்தாள்.

''நீ ஏம்மா வந்தே?'' என்றாள் அம்சவேணி.

''எப்படி அத்தை வராமல் இருக்க முடியும்? எப்படி இருக்காங்க... டாக்டர் என்ன சொன்னார்?''

''தெரியலியேம்மா... நம்பிக்கையா எதுவும் சொல்ல மாட்டேங்கிறாங்க.''

பாவனா யோசனையுடன் டாக்டரை நோக்கி நடக்க, விஷ்ணுவும் எழுந்து வந்தான்.

விஷ்ணுவைப் பார்த்து விட்ட பாவனா நிதானித்தாள்.

''டாக்டர் என்ன சொல்றாங்க விஷ்ணு?''

விஷ்ணு உதடுகள் துடிக்க, கண் கலங்கினான்.

''என்னாச்சு விஷ்ணு?''

''கிட்டத்தட்ட எல்லாமே முடிஞ்சுப் போச்சுன்னு சொல் லிட்டாங்க.''

''மைகாட்!'' கால் கீழேயுள்ள நிலம் ஆடுவது போலி ருந்தது.

பெரியவர்கள் கூடிப் பேசினார்கள்.

பிறகு விஷ்ணுவையும், வித்யாவையும் அழைத் தார்கள்.

''வா விஷ்ணு... எந்திரிம்மா வித்யா! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பால் ஊத்து!''

''நோ... நோ... அங்கிள்! எனக்கு எங்கம்மா, அப்பா வேணும்'' சிறு பிள்ளையாய் கதறினாள்.

சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றனர்.

பக்கத்து பக்கத்து பெட்டில் கணவன் மனைவி இரு வரும் கடைசி மூச்சை சுமந்து கொண்டு படுத்திருந்தனர். அவர்கள் உடலில் ஏகப்பட்ட கருவிகளின் ஒயர்கள் இருந்தன.

பயங்கர அடி! தலை முழுக்கவே சிதைந்து கட்டுப் போட்டிருந்தார்கள். டிரைவர் மட்டும் ஸ்பாட்டிலேயே இறந்து விட்டார்.

அங்கிருந்த அனைவரும், பாவனா உட்பட ஸ்பூனில் பால் புகட்டினர். மூச்சடங்காமல் இழுத்துக் கொண் டிருந்தது.

''கடவுளே... இப்படியா சித்ரவதைப் பண்ணுவே? ரெண்டு உயிரும் யாருக்காக காத்திருக்கோ... தெரியலியே!'' ரங்கராஜன் புலம்பினார்.

சட்டென பாவனா அங்கிருந்து கிளம்பினாள்.

* * *

''ப்ளீஸ் ஷியாம்... இந்த சூழ்நிலைக் கூடவா உங்க மனசை மாற்றவில்லை?''

''ஏன் மாறணும்? சொல்லப் போனா அந்த ரெண்டு பேரும் எப்பவோ செத்திருக்கணும்! இழுத்துக்கிட்டிருக்காம்... நான் வந்து பால் ஊத்தணுமாம். விஷம் வேணும்னா ஊத்தறேன் வரட்டுமா?''

''இப்படியெல்லாம் பேசக்கூடாது ஷியாம். நீங்க அவங்களை விரோதியா நினைச்சாலும் அவங்க அப்படி நினைக்கலை. அந்த ரெண்டு உயிரும் உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கு!''

''இப்பதான் நான் ரொம்ப சந்தோஷமாயிருக்கேன். அவங்க மரணம் தான் என் தீபாவளி!''

''இவ்வளவு கல் நெஞ்சமா உங்களுக்கு?''

''அப்படி மாத்துனதே அவங்கதானே? பெத்த பிள்ளையை தத்துக் கொடுத்த அந்த பத்தினி தெய்வத்தை ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லச் சொல்லு. எங்கப்பா யாருன்னு?''

''ஷியாம்!'' கோபத்தில் இரைந்தாள்.

''பெத்தத் தாயை இதை விட மோசமாய் கேவலப்படுத்த முடியாது. அவங்களைப் பத்தி என்ன தெரியும் உங்களுக்கு? ஆனா, யாருக்கும் தெரியாத உண்மை எனக்கு மட்டும்தான் தெரியும். சத்தியம் பண்ணிக் கொடுத்ததால் தான்... நான் இத்தனை நாளா வாயை மூடிக்கிட்டு இருந்தேன். ஆனா, ஒரு தாயை களங்கப்படுத்தறதை விட சத்தியத்தை மீறுவது எவ்வளவோ மேல்! உண்மை தானே தெரியணும்... வாங்க என் கூட!''

கையை இறுகப் பற்றி இழுத்துச் செல்ல, குழப்பத்துடன் பின் தொடர்ந்தான்.

16

அவனைக் கட்டாயப்படுத்தி காஞ்சனா வீட்டிற்கு அழைத்து வந்திருந்தாள் பாவனா!

''இங்கே எதுக்கு என்னைக் கூட்டிட்டு வந்தே?''

''இங்கே தான்... நீங்க தேடிய உண்மைகள் மறைஞ்சிருக்கு ஷியாம்!''

''என்ன சொல்றே நீ?''

''இனிதான் சொல்லப் போகிறேன்!'' என்றவள், காஞ்சனா தன்னிடம் சொன்ன அத்தனை விஷயத்தையும் கூறினாள்.

அவள் சொன்னதையெல்லாம் நம்புவதா, வேண்டாமா என்ற குழப்பத்தில் ஆட்பட்டிருந்தான்.

''காதலிச்சது தப்பா ஷியாம்? இத்தனைக்கும் அது ஒரு தலைக்காதல்தான். ஏன் நீங்களும், நானும் கண்ணியமாக் காதலிக்கலையா? தான் ஒருத்தரை நேசிச்சதுத் தெரிஞ்சாலே என் பிள்ளை என்னைக் கேவலமா நினைப்பான்னு அழுதவங்க உங்கம்மா!''

ஷியாம் அமைதியாகவே இருந்தான். அவன் நம்பவில்லை என்று புரிந்தது.

சுவற்றோடு பதிக்கப்பட்டிருந்த வாட்ச் ரோபை திறந்துக் காட்டினாள்.

"இதையெல்லாம் பாருங்க! நாள், பண்டிகை, பிறந்த நாள்னு வரும்போதெல்லாம் உங்களுக்காக ஒவ்வொரு வருஷமும் வாங்கி குவிச்ச துணிமணிகள்."

வியந்தான்.

"இதோ... இதைப் பாருங்க" சைடில் இருந்த லாக்கரைத் திறந்து கொத்தாய் டாகுமெண்ட் பேப்பர்களை எடுத்தாள்.

"அத்தனையும் உங்களுக்காக எழுதி வச்சிருக்கிற சொத்து பத்திரங்கள். விஷ்ணுவுக்கும், வித்யாவுக்கும் போக சரிசமமாய் உங்களுக்கும் தந்திருக்காங்க. தான் இறந்த பிறகு உங்களிடம் சேர்க்கச் சொல்லி வச்சிட்டுப் போனாங்க... உங்கம்மா!"

".....?!"

"உங்களைப் பார்க்கும் போதெல்லாம் கபிலன் கண் எதிரே நடமாடுவது போல் உயிரை வதைப்பதால் தான் உங்களை தத்துக் கொடுத்தாங்க. இதோ, இந்த போட்டோக்களைப் பாருங்க..!"

"யார்... யார் இது? என்னைப் போலவே... ஆனா, பழசாய் இருக்கே?" கண்கள் தெறித்து விடும்போல் ஆச்சர்யம் காட்டினான்.

"இதுதாங்க கபிலன்!"

"மைகாட்... அச்சு அசலாய் என்னைப் போலவே இருக்காரே!"

"ஆமாங்க... அதனால்தான் அத்தை மனச்சித்ரவதைக்கு ஆளாகியிருந்தாங்களாம். இந்த கபிலன் இறந்து மூணு வருஷம் கழிச்சுதான் நீங்க பிறந்திருக்கீங்க. அத்தையோட கேரக்டரையே சந்தேகப்பட்டுட்டீங்களே!"

உறைந்து போய் நின்றிருந்தான்.

மெல்ல அவன் தோளில் கைவைக்க... திரும்பியவன் கண்களில் கண்ணீர்!

"ஷி... யா... ம்!" என்றாள் அதிர்ச்சியாக.

"தப்பு செய்துட்டேன் பாவனா... ரொம்பப் பெரிய தப்பை செய்துட்டேன்!"

* * *

மனம் கலங்க ஹாஸ்பிடல் செல்கிறான்.

எதிர்பார்க்காத விஷ்ணுவும், வித்யாவும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர்.

அவனுக்காகவே காத்திருந்த பெற்றவர்கள், அவன் பால் புகட்டியதும்... நிம்மதியாய் மூச்சை நிறுத்திக் கொண்டனர்.

அவன் யார் என்ற உண்மை விஷ்ணுவுக்கும், வித்யாவுக்கும் தெரிய... மேலும் அதிர்ச்சி.

"ரெண்டு பேரும் என்னை மன்னிச்சிடுங்க!" என்றபடி இருவரையும் அணைத்துக் கொண்டு அழுதான்.

"விஷ்ணு உன்னை நான் ரொம்பவே கஷ்டப்படுத்திட்டேன்டா ஸாரி!"

"அ... அ...ண்...ணா!" என்று விம்மினான்.

"உன்கிட்டே ஸாரி கேட்கக் கூட கூச்சமாயிருக்கு வித்யா... ப்ளீஸ் என்னை மன்னிப்பாயா?"

"அம்மாவும், அப்பாவும் எங்களுக்கு உங்களைக் கொடுத்துட்டுப் போயிருக்காங்கண்ணா!" அவன் மார்பில் முகம் புதைத்துக் கதறினாள்.

அவள் தலையை அன்பாய் கோதி விட்டான்.

பாவனா அந்த துக்கத்திலும் சந்தோஷப்பட்டாள்.

* * *

இரண்டு வருடம் கரைந்தோடியது.

அன்று தீபாவளி!

குடும்பம் மொத்தமும் சூழ்ந்து பட்டாசுகளை வெடித்துக் கொண்டிருந்தனர்.

ஷியாமும், விஷ்ணுவும் சரவெடிகளை கையிலேயேப் பிடித்துக் கொண்டு வெடிக்க... மேகநாதன் பயந்து காதைப் பொத்திக் கொண்டார்.

பாவனா சமையல்காரர்களின் உதவியுடன் பட்சணங்களையும், பல வகை நான்வெஜ் அயிட்டங்களையும் சமைத்துக் கொண்டிருந்தாள்.

அம்சவேணி அடிக்கடி கிச்சன் பக்கம் வந்தாள்.

''நானும் உதவட்டுமா பாவனா?''

''ஒண்ணும் வேண்டாம் அத்தை! கிச்சன் பக்கம் வந்தாலே ஷுகர் தாறுமாறாய் எகிறிடும்னு டாக்டர் சொல்லலையா? வேணும்னா காபி தரவா... சர்க்கரைப் போடாம...?''

''மருமகளா, மாமியாரா நீ? மனுஷியோட உணர்வுகளை புரிஞ்சுக்க மாட்டேங்கறியே!'' இனிப்பு பட்சணங்களை ஏக்கத்துடன் பார்த்துவிட்டு நகர்ந்தாள்.

''நான் ஹெல்ப் பண்ணட்டுமா பாவனா?'' எட்டு மாத வயிறை சாய்த்துக் கொண்டு வந்தாள் சொர்ணலதா.

''எண்ணெய்ப் பிசுக்கு இருக்கிற இடம். வழுக்கும்... நீ போ லதா! திவ்யாக் குட்டிய மட்டும் கொஞ்சம் கவனிச்சுக்க... தண்ணியப் பார்த்தா கும்மாளம் போடுவா!''

''சரி'' என்று அவளும் போய் விட்டாள்.

வித்யாவும், தீப்தியும் தட்டு நிறைய பலகாரங்களை சாமிக்கு படையல் போடுமுன் திருடிக் கொண்டு வந்து மொட்டை மாடியில் ரவுண்டு கட்டி அடித்துக் கொண்டிருந்தனர்.

''என்னதான் சொல்லு... திருட்டு மாங்காய்க்கு இருக்கிற ருசியே தனிதான்!''

''ஏய்... தீப்தி... அது மாங்காயில்லே... லட்டு!''

''ஐய்யே... ரொம்பத்தான்... எங்களுக்கு ஒண்ணுமேத் தெரியாதுப் பாரு!''

வீடு மொத்தமும் கலகலவென்றிருந்தது.

ஷியாம் மனநிறைவுடன் வீட்டைப் பார்த்தான். ஆனாலும் அவனுக்கு சின்ன மனக்குறை இருந்தது.

அவன் மகள் திவ்யா... அசப்பில் காஞ்சனாவையே கொண்டு பிறந்திருந்தாள்.

பழுப்பு நிறக் கண்களும், உதட்டோரம் மச்சமும் கூட அப்படியே அம்மாதான்!

ஆனால், ஒண்ணரை வயதாகியும் இன்னும் பேச்சு வரவில்லை.

பூஜை ஆரம்பமானது. குடும்பம் மொத்தமும் ஒன்று கூடியது.

பாவனா அருகில் நின்றிருந்த திவ்யா ஷியாமைப் பார்த்ததும் ஓடி வந்து மடியில் அமர்ந்தவள், திடீரென, ''ப்பா...'' என்றாள்.

அத்தனை பேரும் ஆச்சர்யப்பட...

மறுபடி மறுபடி அவனை ''ப்பா... ப்பா'' என்று அழைத்துக் கொண்டிருந்தாள் குழந்தை.

ஷியாம் வாரி அணைத்து முத்தமிட்டவனின் கண்கள் கலங்கின.

"அம்மான்னு நான் அழைக்காத குறையைப் போக்க, அப்பான்னு அழைக்க என் மகளாய் வந்து பிறந்திருக்கிறாயா அம்மா?" ஆனந்தக் கண்ணீர் விட்டான் ஷியாம்.

பாவனாவும் நெக்குறுகி நின்றிருந்தாள்.

அங்கு நிலவிய இறுக்கத்தை உடைக்க நினைத்த தீப்தி, "ஹை... திவ்யாக்குட்டி பேசிட்டா, திவ்யாக் குட்டி பேசிட்டா... எல்லோரும் ஸ்வீட் எடுத்துக்குங்க" என்றவள் கை நிறைய இனிப்புகளை அள்ளிக் கொண்டு ஓடினாள். வித்யாவும் அள்ளிக் கொண்டு ஓட...

"ஏய் தீப்தி... வித்யா... எச்சில் பண்ணாதீங்க!" பாவனா கத்தினாள்.

சந்தடி சாக்கில் அம்சவேணி ஒரு குலோப் ஜாமுனை வாய்க்குள் அதக்கினாள்.

பார்த்து விட்ட பாவனா, "என்ன அத்தை இது?" என்றாள் செல்லமான அதட்டலோடு.

"உப்பு இருக்கான்னு பார்த்தேன் பாவனா!" என்றாள் பாவமாய்.

அதைக் கேட்டு குபீரெனச் சிரிப்பலை எழுந்துப் படர்ந்தது சுனாமியாய்.

என் பிரியசகி

1

வந்து நின்ற அவளை வித்தியாசமாய் பார்த்தார் அந்த பள்ளியின் வாட்ச்மேன்.

அந்த சூழ்நிலைக்கும், இடத்துக்கும் ஒட்டாத பெண்.

கசங்கியிருந்த, சாயம் போன பருத்தி சேலை. எண்ணை வழிய இறுக்கமாய் போடப்பட்டிருந்த பின்னல். வியர்த்துக் கொட்டியதால் நிறத்தை மட்டமாக்கி காட்டிய மாநிறம். முகம் நிறைய பதற்றம்.

'யாரிவள்... புதிதாய் தெரிகிறாளே!'

வாட்ச்மேன் தணிகாசலம். இன்னும் ஐந்தே நிமிடத்தில் பள்ளி விடப்போகும் நேரம் நெருங்குவதால் தன்

பணிகளில் கவனமாய் இருந்தாலும் அவள் மீதும் ஒரு கண் பதித்திருந்தார்.

அது... சென்னையில் பிரபலமான பள்ளி. சுத்தம், சுகாதாரம், படித்த திறமையான ஆசிரியர்கள், தரமான கல்வி, மாணவர்களின் திறனறிந்து... அந்தத்துறையில் ஊக்குவித்து உபதிறமையை வளர்ப்பது என்று நல்ல பெயர் வாங்கியிருந்ததால் அங்கு அட்மிஷன் கிடைப்பதே அரிதாய் இருந்தது.

பீஸெல்லாம் நடுத்தர வர்க்கம் நினைத்தே பார்க்க முடியாத உயரத்தில் இருந்தது. அதனால் அங்கு படிக்கும் மாணவர்களின் தொண்ணூறு சதவீதம் பேர் காரில் தான் வருவார்கள்.

கேட்டுக்கு வெளியே, பரந்து விரிந்திருந்த மைதானத்தில் கார்களும், பைக்குகளும் ஆட்டோக்களும் காத்திருந்தன.

அவள் புடவைத் தலைப்பின் நுனியை அவ்வப்போது தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் விழிகள் உன்னிப்பாய் பிள்ளைகள் வரும் வாசலையேப் பார்த்துக் கொண்டிருந்தன.

தணிகாசலத்தின் மனதில் சந்தேகம் எழுந்தது.

பள்ளியை பெருக்கி சுத்தம் செய்யும் பார்வதி காலி பக்கெட்டுடன் அவரைக் கடந்துச் சென்றாள்.

''பார்வதி...''

''என்னண்ணா?''

''இங்கே வாயேன்!''

வந்தாள்.

''அதோ.. அவளைப் பாரேன்!''

''யாரு அந்த பச்சைப் புடவை கட்டியிருக்கிறப் பொண்ணையா?''

''ஆமாம்!''

''என்ன அவளுக்கு?''

''அவளை இதுக்கு முன்னே இங்கே பார்த்திருக்கியா?''

''இல்லையே... ஏன் கேக்கிறே?''

''அவ முகமே சரியில்லே பார்வதி. கண்ல திருட்டுத் தனம் தெரியுது. அடிக்கடி முந்தானையைத் தொட்டு பார்த்துக்கறா. நீ போய் பீட்டரையும், வடிவேலுவையும் வரச் சொல்லேன். இவளை கவனிக்கணும். பெல் அடிச்சதும் என் பார்வையிலிருந்து விலக வாய்ப்பிருக்கு.''

''பார்த்தா.. ஒரு மாதிரியா தான் தெரியுது. இரு.. நான் போய் கூட்டியாறேன்.''

* * *

பிற்பகலின் வெயில் மூர்க்கமாகவே இருந்தது. வியர்வை வழிய சைக்கிளில் கொரியர் கொண்டு செல்லும் இளைஞர்கள், பைக்கில் பயணித்த வாலிபர்கள், முதுகில் புத்தக மூட்டையைச் சுமந்த மாணவர்கள் என அந்த நேரத்திற்கே உரிய பரபரப்பு மந்தமான மதிய தூக்கத்தை கடந்து வந்திருந்தது.

ஹேமா பதற்றத்துடன் வாட்ச்சில் நேரம் பார்த்தாள். பதறினாள்.

''பெல் அடித்து விட்டிருப்பார்களே... அபிலாஷ் காத்திருப்பானே.''

''சீக்கிரம் போ மேன். எவ்ளோ லேட் தெரியுமா? பிள்ளை நான் இன்னும் வரலையேன்னு தவிச்சுக் கிட்டிருக்கப் போறான்.''

அம்பது வயது மூர்த்தி வேகத்தை அதிகப்படுத்தினார்.

"இன்னும்.. இன்னும் வேகமாப் போ!"

எதிர்ப்பட்ட லாரிகளின் இடையே முதலாளியம் மாவை வைத்துக் கொண்டு படுவேகமாக காரோட்ட மனசு இடம் தரவில்லை.

"இன்னும் பத்து நிமிஷத்துல போய்டலாம்மா. ரொம்ப வேகமாப் போகக் கூடாதுன்னு ஐயா சொல்லியிருக்கார்."

"அதை நீ சொல்லாதே.. அடிக்கடி லீவுப் போட்டு உயிரை வாங்கறே. என் பிள்ளை காத்துட்டிருக்கப் போகி றான்."

அவள் சொல்லி முடிக்கும் முன் கார் நின்றது.

"ஏன் நிறுத்தினே...?"

"தெரியலேம்மா. அதுவா நின்னுடுச்சு. இதோ பார்த் துடறேன்." இறங்கி பானெட்டை நோக்கிப் போக... "நாச மாப் போச்சு" என்று பொறுமையிழந்தாள்.

மூர்த்தி சங்கடத்துடன் அவள் முன் வந்து நின்றார்.

"என்ன?"

"பெட்ரோல் காலிம்மா!"

"யோவ்.. அறிவில்லே உனக்கு? கார்ல பெட்ரோல் இருக்கா. இல்லையான்னு சரிபார்க்கிற வேலைக்கூட உன்னாலப் பார்க்க முடியாதா? நான் ஆட்டோ பிடிச்சுப் போய்க்கறேன். நீ வீட்டுக்கு வந்து கணக்கை முடிச்சுக் கிட்டுக் கிளம்பு. நீ சரிப்பட்டு வரமாட்டே!"

"அம்மா.. அம்மா!" மூர்த்தி கெஞ்ச, கெஞ்ச சாலை யோரம் நின்றிருந்த ஆட்டோவில் ஏறிப் பறந்தாள்.

அவளையே பரிதாபமாய் பார்த்த டிரைவர் பெருமூச்சு விட்டார்.

மூர்த்தி ஒரு வாரம் லீவுக் கேட்டிருந்தார். டெங்கு காய்ச்ச லால் பாதிக்கப்பட்டிருந்தவருக்கு உடல் வலியால் களைத்துப் போயிருந்தார்.

இன்று இன்னொரு டிரைவர் முத்துவேல் தன் தங்கைக்கு திருமணம் என்று லீவு போட்டு விட, வந்தே ஆகணும்னு வீட்டிற்கு ஆள் அனுப்பி வரச்செய்து விட்டாள். அவர் வரும்போதே பள்ளிக்குச் செல்ல தயார் நிலையில் இருந் தாள் ஹேமா.

ஏற்கனவே லேட்டு என்று குதித்தவள். உடனே காரில் ஏறி அமர புறப்பட்டாச்சு.

இதில் மூர்த்தி தவறு எங்கே?

"ஐயா வந்தால் சொல்லிக் கொள்ளலாம். அவர் புரிந்துக் கொள்வார்."

* * *

ஒரே வகை பட்டாம்பூச்சிகள் குபுக்கென ஒட்டு மொத்த மாய் பறந்து வருவது போலிருந்தது. யூனிபார்மில் குழந்தைகளைப் பார்க்கும் போது.

அவள் ஆவலோடுத் தேடினாள்.

"எங்கே.. எங்கே அவன்?"

கண்கள் இப்படியும், அப்படியுமாய் ஆவலாய்த் தேட... சட்டென விழிகள் விரிந்தன.

"அதோ..அவன் தானே?"

துருதுரு விழிகளுடன், சுருட்டை கேசத்துடன், அவன் அப்பாவின் சாயலை கொஞ்சமும் விட்டு வைக்காமல் பிரம்மனிடம் கேட்டு வாங்கி வந்திருந்த சிறுவன் தன் அம்மாவைத் தேடினான்.

"அபிலாஷ்."

கிசுகிசுப்பான குரல் கேட்டுத் திரும்பிய அபிலாஷ் அந்த புதியவளை தலை சாய்த்துப் பார்த்தான்.

"நீங்களா ஆன்ட்டி கூப்பிட்டீங்க!"

"ம்..."

"என் பேர் உங்களுக்கு எப்படித் தெரியும். யார் நீங்க?"

"உன்னை எனக்கு ரொம்ப நல்லாத் தெரியும். இந்தா இந்த சாக்லேட்டை சாப்பிடு!"

"ம்ஹூம் வேணாம்!"

"சாப்பிடு கண்ணா!" ஊட்டி விட முயல...

கையால் உதறினான்.

"எங்க மம்மி யார் எதைக் குடுத்தாலும் சாப்பிடக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க!"

"ஏய்.. யாரு நீ?"

அவளின் தோளில் பார்வதியின் கரம் வந்து விழுந்தது. திடுக்கிட்டாள்.

2

அழுதழுது முகம் சிவந்து போயிருந்தாள் ஹேமா. இன்னும் அவளிடம் பதட்டமும், பயமும், கோபமும் அப்படியே இருந்தது.

அவளை மட்டும் வாட்ச்மேன் கவனிக்காமல் விட்டிருந்தால்... என்பிள்ளை இந்நேரம்...? ஐயோ...!'

ரைட்டர் சொன்ன இடத்தில் தணிகாசலமும், பார்வதியும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தனர்.

"எப்ப கூப்பிட்டாலும் விசாரணைக்கு வரணும்!"

"கண்டிப்பாங்க.. அவளை விட்றாதீங்க!"

அபிலாஷை தன்னோடு சேர்த்து இறுக்கி அணைத்திருந்த ஹேமாவிடம் வந்தனர்.

"கம்ப்ளைண்ட் எழுதிக் கொடுத்துட்டோம்மா. நாங்க வர்றோம்!"

"போங்க.. ஆனா உங்களையும் நான் சும்மா விடப் போறதில்லே. என் ஹஸ்பண்ட் வரட்டும். என்னய்யா ஸ்கூல் நடத்திறீங்க? பிள்ளைப் பிடிக்கறவல்லாம் ஈஸியா உள்ளே வர்ற அளவுக்கு இருக்கு உங்க லட்சணம். விடமாட்டேன்... கேஸ் போட்டு என்னப் பண்றேன் பார்!" வெடித்தாள்.

அபிலாஷ் அம்மாவையே மிரட்சியுடன் பார்த்தான்.

தணிகாசலம் பார்வதியிடம் கண்களால், 'போய் விடலாம்' என்று சைகை காட்ட...

நகர்ந்தனர்.

"என்ன சார்.. ஏதாவது சொன்னாளா?"

"இல்ல மேடம்... எவ்வளவு அடிச்சும் வாயேத் திறக்க மாட்டேங்கறா. அட்லீஸ்ட் பேரையாவது சொல்லலா மில்லே?"

"இவளை விட்றாதீங்க... பார்க்க பார்க்க ஆத்திரமா இருக்கு. கடத்துறதுக்கு இவளுக்கு என் பிள்ளை தான் கிடைச்சானா? நினைச்சுப் பார்க்கவே நடுங்குது சார்!"

புடவை கிழிந்திருக்கு, கன்னத்தில் ரத்தம் கட்டி கறுப்பாய் உறைந்திருக்க, உதடு கிழிந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது... அவளுக்கு.

லாக்கப்பில் இருந்தவள் மெல்லத் திரும்பி பெஞ்சில் அமர்ந்திருந்த ஹேமாவை கசப்பாய் பார்த்தாள்.

நல்ல சிவந்த நிறம், பார்லரின் உதவியோடு பட்டைத் தீட்டப்பட்ட அழகு, அவ்வளவு அழுதும் லிப்ஸ்டிக் அழியவில்லை. கிளிப்பில் அடைப்பட்டிருந்த கவரிங் செய்யப்பட்ட முடி, கையில்லா கருநீல நிறச் சுடிதார் அவள் கலரை மேம்படுத்திக் காட்டியது. முப்பது வயது என்று மாரியம்மன் கோவிலில் சத்தியம் பண்ணினால் கூட நம்ப முடியாத இளமை.

கோபத்துடன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''சார் எப்ப வருவார் மேடம்? அவர் கிட்டே பேசிட்டு ஸ்ட்ராங்கா எப்.ஐ.ஆர். போட்றலாம்.''

''பெங்களூர்ல இருக்கார். அவருக்கு தான் ட்ரை பண்றேன்... லைனே கிடைக்க மாட்டேங்குது.''

''ரொம்ப நேரம் நீங்க இங்கே இருக்க வேணாம். புறப் படுங்க மேடம்.. சார் வந்ததும் அனுப்பி வையுங்க!''

''தாங்க்யூ இன்ஸ்பெக்டர்.. எப்படியாவது அவகிட் டேர்ந்து உண்மையை வரவழைச்சிடுங்க!''

''அது என் பொறுப்பு!''

அவள்.. அபிலாஷையே பார்த்தாள்.

எதேச்சையாக அவளைப் பார்த்த அபிலாஷ் அம் மாவை இறுகக் கட்டிக் கொண்டான்.

''மம்மி.. போய்டலாம் மம்மி.. அந்த பூச்சிக்காரி என்னையேப் பார்க்கிறா!''

அடுத்த கணமே இன்ஸ்பெக்டர் அவள் கன்னத்தில் பளாரென அறைந்தார். விட்ட இடத்திலிருந்து விசா ரணையைத் தொடங்கினார்.

ஹேமா குழந்தையை வாரி அணைத்த படி வெளியே வந்தாள்.

பிரிட்ஜில் வைத்த ஆப்பிளாய் சில்லென்றிருந்தது பெங்களூர்.

நகரின் பிரதான ஸ்டார் ஹோட்டலின் கான்பரன்ஸ் ஹாலில் பிஸினஸ் மீட்டிங்கில் இருந்தான் ஹரி. மிக முக்கியமான மீட்டிங் என்பதால் எந்த போன்காலும் தன்னை இடையூறு செய்து விடக்கூடாது என்று ஸ்ட்ரிக்ட் டாக ஆர்டர் போட்டிருந்தான் தன் பர்சனல் அஸிஸ்டன்ட் தாரிகாவிடம். அவனுடைய பர்சனல் செல்போன் உட்பட மூன்று செல்போன்களையும் அவளிடமே கொடுத்து, 'போன் வந்தால் நீயே சொல்லிவிடு... எக்காரணத்தைக் கொண்டும் என்னிடம் தராதே' என்று அறைக்கு வெளி யில் நிறுத்தியிருந்தான்.

ஆங்கில நாவலில் மூழ்கியிருந்த தாரிகா, எம்.டி.யின் பர்சனல் செல்போன் அலறி கவனத்தை திசைத் திருப்ப வைத்தது.

'பர்சனல் லைன்.. பேசலாமா, வேணாமா?' தயங்கி னாள்.

வெகுநேரமாய் ரீங்கரித்துக் கொண்டேயிருக்க, எடுத்துப் பேசினாள்.

''ஹலோ!''

''ஹலோ.. யார் பேசறது?''

குரலின் அதிகாரம் வைத்தே புரிந்துக் கொள்ள முடிந்தது மேடம் என்று.

''மேடம்.. நான் பி.ஏ. தாரிகா பேசறேன்!''

''நீ ஏன் இந்த போனை அட்டெண்ட் பண்றே?''

சொன்னாள்.

"சரி.. உங்க எம்.டி.கிட்டேக் கொடு!"

"ஸாரி மேடம்... எந்த போன்கால் வந்தாலும் தரக் கூடாதுன்னு சார் சொல்லிட்டார்."

"எவ்வளவு தைரியம் உனக்கு? மத்தவங்களும் நானும் ஒண்ணா? குடு முதல்ல..."

"ஸாரி மேடம்.. மீட்டிங் முடிஞ்சதும் நானே பேசச் சொல்றேன். என்ன விஷயம்னு சொன்னீங்கன்னா நானே சொல்லிடறேன்."

"திமிர் தானே உனக்கு? வச்சுக்கறேன் உனக்கு..." பட்டென எதிர்முனை துண்டிக்கப்பட உதடைப் பிதுக்கி தோள்களைக் குலுக்கிக் கொண்டாள் தாரிகா.

சரியாய் ஒரு மணி நேரம் கழித்து மீட்டிங் முடிய, டையை சரிபண்ணிக் கொண்டே வந்த ஹரி தமிழ்ப்பட நாயகனைப் போல் கம்பீரமாய், வசீகரமாய் இருந்தான்.

"எனி கால்ஸ் பார் மீ?"

"எஸ் சார்..." என்று தொழில் சம்பந்தப்பட்ட போன் அழைப்புகளைச் சொன்னவள் கடைசியாக, "உங்க மிஸஸும் போன் பண்ணினாங்க சார். அர்ஜன்ட் மேட்டராம். நான் உங்க கிட்டே போன் தரலேன்னு கோபப்பட்டாங்க சார்!"

"நியாயமான கோபம் தானே? எப்படி சமாளிக்கப் போறேனோ தெரியலையே.." பொய்யான பதைப்புடன் போனில் நம்பரைப் போட்டபடி நகர்ந்து ஜன்னலோரமாய் சென்றவரை சிரிப்புடன் பார்த்து விட்டு நாசூக்காய் நகர்ந்தாள்.

"ஹலோ..."

".....?!"

"கோபப்படாதே ஹேமா... முக்கியமான மீட்டிங்கில் இருந்தேன்!"

"....."

"அவங்க மேல கோபப்படாதே! நான் தான் எந்த போன்காலும் தரக் கூடாதுன்னு சொல்லியிருந்தேன்."

"....."

"சின்னக்குழந்தை மாதிரி திரும்பத் திரும்ப அதையே சொல்லிட்டிருக்காதே.. என்ன விஷயம் சொல்லு!"

"....."

"எனக்கு இங்கே இன்னும் ஒரு வாரத்துக்கு வேலை இருக்கு. உடனே சென்னைக்கு வாங்கன்னு கூப்பிட்டா எப்படி?"

"....."

"அபிலாஷுக்கா.. என்ன ஆச்சு?" துணுக்குற்றான்.

"....."

"யாரு? எப்ப?"

"....."

"அபிலாஷ் ஸேப்ட்டியா இருக்கானில்லையா? தேங்காட்! நான் வரவரைக்கும் அவனை ஸ்கூலுக்கு அனுப்பாதே!"

"....."

"ஒரு அக்ரிமெண்ட் கையெழுத்தாகணும் ஹேமா. உடனே வருவது சாத்தியமில்லை. எப்படியாவது ரெண்டு நாள்ல வரப்பார்க்கிறேன். அந்த போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு நான் இப்ப போன் பண்ணிடறேன். பயப்படாதே

ஹேமா... எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். சரியா? ஓகே!''

போனை கட் பண்ணியவன் மனசு பதறியது.

'என் பிள்ளையை கடத்த முயன்றார்களா? அதுவும் பெண்ணா? யாரவள், எதற்காக?'

உடனே ஏரியா இன்ஸ்பெக்டருக்கு போன் போட்டான்.

3

இரண்டு நாட்கள் கழித்து பெங்களூரிலிருந்து திரும்பி வந்த கணவனை அணைத்துக் கொண்டு அழுதாள் ஹேமா.

''என்ன ஹேமா?''

''பயமாயிருக்குங்க.. என் பிள்ளைய வெளியே அனுப்பவே பயிமாயிருக்குங்க. கொஞ்சம் ஏமாந்திருந்தாலும் என் பிள்ளைய நான் மிஸ் பண்ணியிருப்பேன். அவளோட... அதாங்க நம்ம பிள்ளையை கடத்தினாளே... அவளோட முகம் என் கண்ணிலேயே நிக்குதுங்க! முகத்துல ஒரு ராட்சஷத்தனம். எப்படிப் பார்க்கிறாத் தெரியுமா? அவளை சும்மா விடக்கூடாது. வெளியே வர முடியாத அளவுக்கு பெரிய கேஸாப் போட்டு உள்ளே தள்ளச் சொல்லுங்க.''

''இன்ஸ்பெக்டர்கிட்டேயும், ஏசிக்கிட்டேயும் போன்ல பேசிட்டேன். அவளை நல்லா கவனிக்கச் சொல்லியிருக்கேன். கவலைப்படாதே... அபிலாஷ் எங்கே?''

''உள்ளே தான் இருக்கான்!''

ஹரி அறைக்குள் சென்றான். வீடியோ கேம்ஸ் விளையாடிக் கொண்டிருந்த அபிலாஷ் காலரவம் கேட்டு

திரும்பியவன், ''டாடி'' என்று ஓடி வந்து அவன் கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டான்.

தூக்கி அணைத்துக் கொண்டான் முகமெங்கும் முத்தமிட்டான்.

''அபிக்கண்ணா, என் செல்லக்குட்டி!''

''டாடி என்னை விட்டு எங்கேயும் போய்டாதீங்க டாடி!''

''ஏம்ப்பா?''

''பயமாயிருக்கு டாடி! என்னை யாராவது தூக்கிட்டுப் போயிடுவாங்க டாடி!''

''அப்படியெல்லாம் எதுவும் நடக்காது கண்ணா! டாடி இருக்கேன்ல?''

''ஸ்கூலுக்கு ஒரு பூச்சிக்காரி வந்து எனக்கு சாக்லேட் குடுத்து தூக்கிட்டு போகப் பார்த்தா டாடி!''

''அதைப்பற்றி நினைக்காதே அபி! டாடி பார்த்துக்கறேன்... நீ போய் கேம்ஸ் விளையாடு!''

''பார்த்தீங்களா... அபி ரொம்ப பயந்துப் போயிருக்கிறான். அவ எதுக்காக நம்மக் குழந்தைய கடத்த திட்டம் போட்டாள்னு தெரியலே. அபின்னு பேர் சொல்லி கூப்பிட்டிருக்கா. அப்ப.. நம்மக் குழந்தைய ரொம்ப நாளா வாட்ச் பண்ணி, டீடெய்ல்ஸ் கலெக்ட் பண்ணிட்டுதான் காரியத்துல இறங்கியிருக்கா.

அவ தனியாள் கிடையாது. பெரிய கூட்டமே பின்னாடி இருக்கணும். வாயத் திறந்து இதுவரைக்கும் ஒரு வார்த்தைக் கூட பேசலே...!''

''அபியைப் பார்த்துக்க ஹேமா! முதல்ல நீ தைரியமாயிரு. நான் இதை சும்மா விடப்போறதில்லே. குளிச்

சிட்டு ஸ்டேஷன் வரை போய்ட்டு வர்றேன். டிபன் எடுத்து வை!'' குளியலறை நோக்கி நடந்தான்.

''நானும் வர்றேங்க...''

''வேணாம் ஹேமா. அப்புறம் கூடவே அபியையும் கூட்டிட்டுப் போகணும். அந்த லேடி, அந்த சூழல், அவனுக்கு பயத்தை இன்னும் அதிகப்படுத்தும்.''

''நீங்க சொல்றதும் சரிதான். ஆனா, அவளை என் கையால அடிக்கணும் போலிருக்குங்க... ஆத்திரமா வருது.''

''என்ன இப்ப.. உனக்கு பதிலா நான் அடிச்சிடறேன்'' குளித்து முடித்து சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான்.

யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்த இன்ஸ் பெக்டர் வாசலில் இவன் கார் வந்து நின்றதைப் பார்த்ததும், ''அப்புறம் பேசறேன், வச்சிடு'' என்று கட் பண்ணி விட்டு எழுந்து வந்தார்.

''வாங்க மிஸ்டர் ஹரி.. பெங்களூர்ல இருந்து எப்ப வந்தீங்க?''

''இன்னைக்கு தான். வந்ததும் கிளம்பி வந்துட்டேன்.''

''பிஸினஸ் எல்லாம் எப்படியிருக்கு சார்!''

''புதுசா ஒரு பிராஞ்ச் ஓபன் பண்றோம். அதுக்கான வேலையிலே தான் மும்முரமா இருக்கோம். அந்த சமயத்திலே தான் இப்படியொரு பிரச்சனை. அதான் கிளம்பி வந்துட்டேன். அந்த லேடியப்பத்தி விஷயம் தெரிஞ்சதா?''

''இல்லே சார். நீங்க சொன்ன மாதிரியே பலமா கவனிச்சேன். அப்பக்கூட வாயேத் திறக்க மாட்டேங்கறா.''

''ஐ ஸீ!''

''ஸ்ட்ராங்கா ஒரு கேஸ் போட்ரலாம் சார். பிராஸ்ட்டிடியூஷன் போடலாம்னு நினைச்சேன். அதுக்கூட ஈஸியா வெளியே வந்துடலாம். அதனால் ப்ரவுன் சுகர் கடத்தினதா எப் ஐ ஆர் போட்ரலாம் சார். இருபது வருஷம் உள்ளேத் தள்ளிடலாம்.''

''செய்யலாம் சார்... சும்மா விடக்கூடாது. எங்கே அவ... நான் பார்க்கலாமா?''

''ஷ்யூர்... யோவ் தங்கவேலு.. லாக்கப்பை திற...''

தங்கவேலு என்கிற அந்த போலீஸ்காரருக்கு அதிசயமாய் தொப்பையே இல்லாமல் போலீஸ்காரராய் இருக்க வேண்டிய லட்சணமான உடற்பயிற்சி தேகத்துடன் கம்பீரமாய் இருந்தார்.

லாக்கப் பூட்டைத் திறந்ததும் உள்ளே நுழைய போன ஹரியைத் தடுத்தார்.

''அவளை வெளியே கூப்பிடலாம் சார்!''

''பரவாயில்லை இன்ஸ்பெக்டர்.. நான் அவகிட்டே பேசிப் பார்க்கிறேன்.''

''அவகிட்டேயா.. வாயை தைச்சி வச்சிருக்கா.''

''முயற்சிப் பண்ணுவோமே...!''

''சரி'' என்றார் இன்ஸ்பெக்டர்.

லாக்கப்பில் நுழைந்த ஹரி கெட்ட வாடைக்கு மூக்கை சுருக்கினான்.

பராமரிப்பில்லாத சிதிலமடைந்த சிமெண்ட் தரை. சுவற்றோரம் குவளையில் தண்ணீர். அந்த அறைக்குள்ளேயே ஒரு ஓரமாய் கழிப்பிடம். அதற்கு மூன்றடி தள்ளி அவள்!

கிழிந்த துணியாய் முதுகுக்காட்டிப் படுத்திருந்தாள். துணி விலகிய இடைவெளியில் பட்டைப் பட்டையாய் சிவந்திருந்தது. தரையில் ரத்தத் துளிகள் காய்ந்து.... அருவறுப்பை தந்தது.

''தங்கவேலு அவளை எழுப்புய்யா!''

தங்கவேலு பூட்ஸ் காலால் அவளை எத்தினார்.

''ஏய்.. ஏய் எந்திரி!''

''.....?''

''எந்திரிங்கறேன்ல? நீ கடத்த நினைச்சியே.. அந்தப் பையனோட அப்பா வந்திருக்கார். எத்தனை லட்சம் வேணுமோ கேளு...'' என்றார் கிண்டலாய்.

அவளிடம் முனகலுடன் கூடிய அசைவு!

இடது கை மணிக்கட்டு புஸ்ஸென்று வீங்கிப் போயி ருந்தது.

வாசலில் சலசலப்பு கேட்டது. நான்கு போலீஸ்காரர்கள் மூன்று இளைஞர்களை அடித்து துவைத்தபடி இழுத்துக் கொண்டு வந்தனர்.

''தங்கவேலு... இங்கே வாய்யா!'' என்ற இன்ஸ்பெக் டரின் குரலுக்கு வெளியேறினார்.

மெல்ல எழுந்தமர்ந்து திரும்பியவளை நெற்றி சுருங்கப் பார்த்தான்.

முகத்தில் ஏகப்பட்ட காயம். வலதுப்பக்க புருவம் எட் டணாசைஸில் வீங்கிப் போயிருக்க.. கண்களை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

அவனுக்காகவே எதிர்பார்த்து காத்திருந்த பார்வை.

ஆனால், அவனைத்தான் புரட்டிப்போட்டது அவளின் முகம்.

''இ...வ...ளா?'' அதிர்ச்சி என்றால், அப்படியொரு அதிர்ச்சி. அவளிடம் எந்த சலனமும் இல்லை.

''நீ.. நீ.. எப்படி இங்கே?''

''நா.. நான் யாருன்னு யார்கிட்டேயும் சொல்லலே... சொல்லவும் மாட்டேன்!'' என்றாள் நைந்த சன்னமானக் குரலில்.

அவளை அந்தக் கோலத்தில் பார்க்க பார்க்க பதறியது. வேதனை குரல் வளையை இறுக்கியது.

அங்கே அதற்கு மேல் நிற்க திராணியற்று இன்ஸ் பெக்டரிடம் வந்தான்.

''என்ன சார்.. ஏதாவது சொன்னாளா?''

''கேஸ் எதுவும் போட வேண்டாம். கம்ப்ளைண்டை வாபஸ் வாங்கிக்கறேன்... அவளை விட்ருங்க?'' என்றான் ஹரி.

''என்ன சொல்றீங்க?'' என்றார் நம்ப முடியாமல்.

''அவளை விட்ருங்கன்னு சொல்றேன்'' என்றான் அழுத்தமாய்.

4

புது பிராஞ்ச், புது ப்ராஜெக்ட், அக்ரிமென்ட், ஆபீஸ் என்று எந் நேரமும் அதே சிந்தனையாய் இருப்ப வன்... இப்போது அத்தனையும் ரப்பர் கொண்டு அழித்ததுப் போல் நினை வெல்லாம் அவளைச் சுற்றியே ஓடியது.

போலீஸ் ஸ்டேஷனில் சில பார்மாலிட்டியை முடித்துக் கொண்டு காரில் ஏறிக் கிளம்பினான்.

தனக்கு முன்பே அனுப்பி வைக்கப்பட்ட அவளை சாலையில் தேடினான்.

சற்று தூரத்திலேயே கண்களுக்கு தென்பட்டாள். கிழிந்திருந்தப் புடவையை போர்த்திக் கொண்டு, விந்தியபடி மெல்ல நடந்து கொண்டிருந்தாள்.

காரை ஓரமாய் நிறுத்தி விட்டு, அவளருகே சென்றான்.

"சத்யா!"

திரும்பவே சிரமப்பட்டாலும், அந்த குரலுக்கு ஆச்சர்யத்துடன் திரும்பினாள்.

"ஏன்.. எதுக்காக இப்படியெல்லாம்?"

".....?"

"எப்ப இங்கே வந்தே?"

".....?!"

"எப்படியிருக்கே?"

".....?!"

எதற்குமே பதிலேதாராமல் விரக்தியுடன் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு திரும்பி நடந்தாள்.

"ஏன் பேச மாட்டேங்கிறே சத்யா? வா... எங்கே போகணும்னு சொல்லு.. நானே கொண்டு போய் விட்டுர்றேன்!"

மெல்லத் தலையசைத்து விட்டு நடந்தாள்.

"ரொ... ரொம்ப அடிச்சிட்டாங்களா சத்யா?"

"நல்லா கவனிக்கச் சொல்லி மேலிடத்து உத்தரவாச்சே? வலி கூடப் பரவாயில்லே.. தாங்கிக்க முடிஞ்சுது. ஆனா, ஒவ்வொரு முறையும் என் அன்புக்காகவே அடி வாங்கிட்டிருக்கேனே.. அதை தான் தாங்கிக்க முடியலே...!"

அந்த வார்த்தைகள் அவனை சாட்டைக் கொண்டு அடிப்பது போலிருந்தன. அவன் கால்கள் கட்டிப் போட்டதுப் போல் நின்றன.

அவள்.. திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தாள்.

* * *

அவனுக்காகவே காத்திருந்தாள் ஹேமா!

"என்னங்க ஆச்சு? அவளைப் பத்தி விஷயம் ஏதாவது தெரிஞ்சுதா?"

"சூடா காபி வேணும் ஹேமா... தலை வலிக்குது..."

"வள்ளி" என்று சமையல்காரம்மாவை அழைத்தாள்.

"வேணாம்.. நீயே போட்டுக் கொண்டு வாயேன்! அவளை விட நீ தான் நல்லாப் போடறே!"

"இதோ வந்துட்டேன்!" திருப்தியுடன் நகர்ந்தாள்.

மனைவியிடம் என்ன பதில் சொல்வது என்று சுத்தமாக யோசிக்கவேயில்லை. 'அவள் வருவதற்குள் பதிலை தயாரித்து விடலாமே!'

பத்து நிமிடத்தில் காபி கோப்பையுடன் வந்தாள்.

"ஸ்ட்ராங்கா... கொஞ்சம் ஷுகர் குறைச்சு போட்டு எடுத்து வந்தேன். குடியுங்க!"

உறிஞ்சியவன், "எக்ஸலண்ட் ஹேமா!" என்றான்.

"சொல்லுங்க.. அவ மேல கேஸ் பைல் பண்ணியாச்சா?"

"இல்லே ஹேமா!"

"பின்னே?"

"கம்ப்ளைண்டை வாபஸ் வாங்கிட்டேன்!"

''எ..ன்...ன?''

''ஆமாம் ஹேமா.. அவ.. கடத்திட்டுப் போக வரலே. அவளோட குழந்தைய மாதிரியே நம்ம அபிலாஷும் இருந்ததால சாக்லேட் குடுத்திருக்கா?''

''அதெப்படி? கரெக்டா அபியோட பேரைச் சொல்லி யில்லே கூப்பிட்டிருக்கா?''

''இந்த மேட்டரை இத்தோட விட்டுடேன் ஹேமா! அவ தப்பானவ இல்லேன்னு தெரிஞ்சப்பிறகும் தண்டிக் கறது ரொம்ப தப்பு. அவ ஏற்கனவே செய்யாத தப்புக்கு நிறையவே அடி வாங்கிட்டா... பாவம் நடக்கக் கூட முடியலே!''

''செத்து ஒழியட்டும்!''

''ஹே...மா!''

''ஏன் கத்தறீங்க? என்னாச்சு உங்களுக்கு? அவளைப் பார்த்தா சின்னப்பிள்ளைக் கூடச் சொல்லும்.. அவகிட்டே தப்பு இருக்குன்னு. மூணு நாளா தூக்கமில்லாம செத்துக் கிட்டிருந்தேன். நீங்க என்னடான்னா... கம்ப்ளெண்டை வாபஸ் வாங்கிட்டேன்னு வந்து நிக்கறீங்க. அபிலாஷ் மேல எனக்கிருக்கிற பாசம் கூட உங்களுக்கு இல்லீங்க.''

''என்னைத் தப்பா புரிஞ்சுக்கிட்டு உயிரை வாங்காதே. என்னைக் கொஞ்சம் தனியா விடேன்... ப்ளீஸ்!''

அவன் கத்தலில் ஸ்தம்பித்தவள் விருட்டென உள்ளே போய் விட்டாள்.

அவனும் சொல்லிக் கொள்ளாமலே.. அலுவலகம் கிளம்பிப் போனான். ஆனால் அங்கேயும் மனசு வெள் ளாடு மாதிரி சத்யாவைச் சுற்றியே ஓடியது.

என்றும் இல்லாத அதிசயமாக அன்று சீக்கிரமாகவே வீடு திரும்பி விட்டான்.

பணத்தால் இழைத்து கட்டப்பட்ட வீடு!

கிரானைட்டும், குழல் விளக்குகளும், இம்போர்டட் சோபா, நாற்காலிகளும், தேக்கு, ரோஸ்வுட்டால் செதுக் கப்பட்ட சிலைகளும் என... ஹரி தன் விருப்பப்படி கட்டிய கனவு வீடு!

அழகான, அன்பான மனைவி ஹேமாவால் இன்னும் பிரகாசமாயிருந்தது.

ஹேமா, அபியை மடியில் அமர்த்தி என்னவோ ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

அவளின் வாஞ்சையும், அன்பும் அவனை நெகிழ்த் தின.

இவனைப் பார்த்தும் பார்க்காமல் அமர்ந்திருந்த அவ ளின் பக்கத்தில் போய் அமர்ந்து தோளை அழுத்தினான்.

''கைய எடுங்க...''

''ஹேமா!''

''எடுங்கன்னு சொல்றேனில்லே?''

''ஏன் இப்படி...''

''ப்ளீஸ்.. உங்கக்கிட்டே பேச எனக்குப் பிடிக்கலே... என்னைக் கொஞ்சம் தனியா விட்டா புண்ணியம்!''

முகத்திலடிப்பதுப் போல் பதிலடி!

திகைத்து தான் போனான்.

இத்தனை வருட தாம்பத்யத்தில் அதிகப்படியான கோபமும், எரிச்சலும் இன்று தான் வெளிப்பட்டிருக் கிறது. அது பிள்ளையின் பொருட்டு என்று சமாதானம் பண்ணிக்கொண்டாலும்.. வலித்ததை மறுக்க முடி யாதே?

ஒதுங்கிப் போனான்.

ஹேமாவும் விலகிப் போனாள்.

நாட்கள் கடந்தன. ஒதுங்கலும், விலகலும் ஒட்டிக் கொள்ளவேயில்லை.

ஹரியினுள் நிம்மதியற்ற அவஸ்தை! ஊடுருவிப் பார்த்தால்.. அது ஹேமாவினால் ஏற்பட்டதல்ல எனப் புரிந்தது.

சத்யா.. சத்யாவினால்!

தவித்த மனதிற்கு ஆறுதல் தேடி கோவிலுக்குச் சென்றான்.

சௌடேஸ்வரி அம்மன் கோவில் அது!

அவன் வீட்டிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. திருமணமான புதிதில் வந்தது. அதோடு இப்போது தான் வருகிறான்.

கோவில் இன்னும் விரிவாக்கப்பட்டு புதிதாய் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருந்தன.

சன்னதியின் பின்புறம் பெரிய நாகலிங்க மரமும், நாவற்பழ மரமும் இருந்தது. மரத்தினடியில் பாம்புப்புற்று இருந்ததால் பாலும், முட்டையும் வைக்கப்பட்டு கெட்ட வாடை வீசும்.

ஆனாலும் ஹரிக்கு அந்த இடம் ரொம்பவேப் பிடிக்கும். புது மனைவியுடன் கடவுள் சன்னதியில் மனம் விட்டுப் பேசி மகிழ்ந்த இடமல்லவா?

அந்த இடம் நோக்கிச் சென்றவனை அதிர்ச்சி அறைந்தது.

அந்த இடத்தில் சத்யா அமர்ந்திருந்தாள்.

கண்களில் நீங்காத சோகம். அடிபட்ட காயங்களின் வீக்கமும், தழும்பும் மிச்சமிருக்க.. எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள்.

"சத்யா!"

ஒரு திடுக்கிடலோடு அவனைப் பார்த்தவள் அதே வேகத்தில் எழ முற்பட.. சேலைக்குள்ளிலிருந்து வெளியே வந்தது...

தாலி!

கயிற்றில் எண்ணெய் பிசுக்குடன் அரைப் பவுன் தாலி கண்களில் பட... சட்டென எடுத்து உள்ளே மறைத்துக் கொண்டாள்.

அவளையே கண்கள் விரியப் பார்த்தவனுக்கு நெஞ் செல்லாம் அரித்தது. கண்கள் கரித்தது.

சத்யாவைப் பற்றிய கடந்த காலம் கண் முன் நின்றது.

5

மண்டபத்தில் திருமணம்!

உறவினர்களாலும், நண்பர்களாலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

புரோகிதர் தனக்கு நினைவிற்கு வந்த மந்திரங்களை எல்லாம் சொல்லி நெய் ஊற்றி புகையை உற்பத்தி பண்ணிக் கொண்டிருந்தார்.

பட்டு வேட்டி சட்டையில் அமர்ந்திருந்த ராம், யாருக்கும் தெரியாமல் இடக்கையால் சத்யாவின் காலை கிள்ளிக் கொண்டிருந்தான்.

யாராவது பார்த்துவிடப் போகிறார்களோ என்ற பதைப்புடன் சத்யா தவித்ததை ஓரக்கண்ணால் ரசித்தான்.

மணப்பந்தலை சுற்றி ராமின் உறவினர்களே ஆக்கிர மித்திருக்க, ராம் அம்மாவைத் தேடினான்.

நெற்றியில் பட்டையாய் விபூதிப் பூசியிருந்த மைனா வதியம்மாள் கண்ணாடியணிந்த கண்களில் வழியே மணமேடையை பார்த்தபடி கீழே முன் வரிசையில் அமர்ந்திருந்தார்.

பார்த்து விட்ட ராம் சங்கடப்பட்டான்.

அம்மாவிற்கு திருமணத்தில் விருப்பமில்லை. அவனுக் கென்று ரதிதேவி மாதிரி பெண்ணைப் பார்த்து முடிவு செய்திருந்தார் ரகசியமாக! நல்ல வசதி, கார், வீடு, ஒராக்கம் என்று கை நிறைய அள்ளிக் கொண்டு வர பெண் தயாராய் இருந்த நிலையில், மட்டமான நிறமும், சுமாரான அழகும், வக்கற்ற குடும்பமுமாய் இருந்த சத்யாவை தான் திரு மணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்து சம் மதம் வாங்கினான்.

சத்யாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே கொஞ்ச மும் பிடிக்காமல் போனது மைனாவதிக்கு.

சத்யாவின் பெற்றோருக்கும் இந்தத் திருமணத்தில் உடன்பாடில்லை. அவர்கள் குடும்பத்தில் முதல் காதல் திருமணம். அதுவும் வேறு ஜாதியில்! மைனாவதியின் அலட்சியமானப் பார்வையும், பேச்சும் கலக்கத்தைத் தந்தது.

பெண் சந்தோஷமாய் வாழ்வாளா? மாப்பிள்ளை அருமையானவர் தான். ஆனால் நல்ல குடும்ப வாழ்க்கை அமைய அது மட்டும் போதுமா என்ன? அதுவும் சத்யா அந்தளவுக்கு திறமைசாலி அல்லவே!

திருமணம் எங்கள் முறைப்படி தான் நடக்க வேண்டும் என்று ஸ்ட்ரிட்டாக சொல்லிவிட்டாள் மைனாவதி.

அதனால் மனம் சுருங்கிப் போன, சத்யாவின் பெற்றோர் வைகுந்தனும், மகாலட்சுமியும் நான்கு பேரைப் போல கும்பலோடு கும்பலாய் அமர்ந்து விட்டனர்.

அண்ணன் தீபன் வாசலில் நின்று வருகிறவர்களை வரவேற்பது போல் பாவ்லா செய்ய.. அண்ணி தான் ஓடி ஓடி குளிர்பானங்களை சப்ளை செய்து கொண்டிருந்தாள்.

சத்யாவின் குடும்பம் வாழ்ந்து கெட்ட ரகம். தங்களால் முடிந்தளவு பொன் வைக்கிற இடத்தில் பூ வைத்து ஒதுங் கிக் கொண்டனர். உறவினர்கள் சூழ்ச்சியால் வீட்டின் மேல் கேஸ் போட்டு, ஏலமும் போட்டு கைவிட்டுப் போயாச்சு. பிள்ளையின் தயவில் காலம் ஓடிக் கொண் டிருந்தது.

ஏதோ பிள்ளையாய் பார்த்து தங்கள் சக்திகேற்ப தங்கையை திருமணம் செய்துக் கொடுப்பார் என்று நினைத்திருந்த வேளையில் வசதியான வீட்டுப் பிள்ளையை காதலித்துத் தொலைத்து விட்டால்.. பாவம் தீபனும் தான் என்ன செய்வான்?

நண்பன் விக்னேஷை அனுப்பி அம்மாவை மேடைக்கு வரச் சொன்னான். கொஞ்சம் பிகு பண்ணி பிறகு மேடை ஏறி விட்டாள் மைனாவதி.

"உங்கம்மா, அப்பா எங்கே சத்யா?" மெல்லக் கேட் டான்.

"தெரியலையே!"

பார்வையால் தேடியவனுக்கு அகப்பட்டார்கள் இரு வரும்.

"என்ன லட்சணம் இது? பார்க்கிறவங்க என்ன நினைப் பாங்க? விக்னேஷ் அவங்களையும் கூட்டிட்டு வா!"

புரோகிதர் இருவருக்கும் தட்டில் கூரைச் சேலை, வேட்டி, சட்டை வைத்து உடை மாற்றிக் கொண்டு வர அனுப்பி வைத்தார்.

இதற்கென்றே காத்திருந்தது போல் உறவினர் கும்பலொன்று ராமின் பின்னாடியே சென்றது.

"ராம்.. உன்னை நினைச்சா ஆச்சர்யமாயிருக்கு!" என்றாள் கும்பகோணத்திலிருந்து வந்திருந்த சீதா சித்தி.

"என் சித்தி?" உடை மாற்றிக் கொண்டே கேட்டான்.

"ஒரு சட்டைன்னாக் கூட எங்கண்ணனோட செலக்ஷன் பெஸ்ட் செலக்ஷனா இருக்கும்னு உன்னைப்பத்தி பெருமையா சொல்லுவான் என் பிள்ளை வாசு. ஆனா, பொண்ணு விஷயத்திலே வொர்ஸ்ட்டா இருக்கே ராம்!"

"____?"

"நானும் அதைத்தான் சொல்ல நினைச்சேன்! நம்ம சொந்தத்துல இல்லாதப் பொண்ணுகளா? என்னன்னு நினைச்சி இவளைப் பிடிச்சே? உன் கலருக்கும், அழகுக்கும் அவ உன் பக்கத்துல இருக்கறதேத் தெரியலே. மனசுக்கு திருப்தியாவே இல்லே. மைனா இதுக்கு எப்படி ஒத்துக்கிட்டான்னு தான் ஆச்சர்யமாயிருக்கு" என்றாள் திருச்சி அத்தை காமாட்சி.

".....?!"

"நான் கூட ஒரு வேளை பொண்ணு வசதிபோல.. பணத்துக்கு ஆசைப்பட்டு தான் கல்யாணம் பண்ணிக்கிறான் போலன்னு நினைச்சா.. அதுவுமில்லே. கல்யாணப் பொண்ணு போட்டிருக்கிறதில பாதி கவரிங் நகை தான்."

"சித்தி ப்ளீஸ்.. நிறுத்தறீங்களா?" என்றான் ராம் கோபமாக.

"எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு. அவளுக்கு என்னைப்பிடிச்சிருக்கு. பணம் எனக்கு அவசியமில்லே. என் சத்யா அப்படியொன்னும் மோசமில்லையே! தேவையான அழகோட லட்சணமாகவே இருக்கிறா. கோணாறு நீங்கப் பார்க்கிறப் பார்வையிலே தான் இருக்கு. மனசிருந்தா ஆசீர்வதியுங்க. இல்லேன்னா சும்மாயிருங்க. இப்படி இந்த நேரத்திலே என்கிட்டே வந்து பேசறது அநாகரீகமாத் தெரியலேயா? உங்க பிள்ளைங்களுக்கு உங்க ஆசைப்படி பண்ணிவையுங்க. அதை விட்டுட்டு..."

"அது சரி.. இப்பவே இங்கே சப்போர்ட்டா. மைனா பாடு திண்டாட்டம் தான்!" நமுட்டுச் சிரிப்புடன் வெளியேற... கசப்புடன் அவர்களைப் பார்த்தான்.

ஒரு வழியாய் பலரின் வாழ்த்தோடு, கெட்டி மேளம் முழங்க, அட்சதை மழைப்பொழிய சத்யா கழுத்தில் தாலிக்கட்டினான் ராம்.

சத்யா முகத்தில் தான் என்னவொரு பாவம்? லேசாய் கண்கள் மினுக்க காதல் கணவனை நன்றிப்பெருக்குடன் பார்த்தாள்.

களிவான கண்களும், நேர்த்தியான புருவங்களும், ஒற்றைக்கல் மினுக்கிய கூர்மையான நாசியும், புன்னகையை தேக்கி வைத்த உதடுகளுமாய்... என்னக்குறை என் சத்யாவிற்கு?

வசதி வாய்ப்பற்ற நடுத்தர வர்க்கத்தில் பிறந்ததால் எல்லாமே குறைகளாய் தெரியுமோ?

சித்தியும், அத்தையும் சும்மாயிருக்கவில்லை என்பதை வீட்டிற்கு வந்து பால், பழம் சாப்பிட்ட உடனே தெரிந்து போயிற்று.

'அம்மா மயங்கி விட்டாள்' என்ற செய்தி கேட்டு பதறி ஓடி வந்தான்.

''என்னாச்சும்மா?'' அதற்குள் தண்ணீர் அடித்து, புகட்டி எழுப்பி அமர்த்தியிருந்தனர்.

''காலைலேர்ந்து ஒண்ணுமே சாப்பிடலே ராம். பெரியம்மா அழுதுக்கிட்டே இருந்தாங்க'' என்றான் வாசு.

''காலைலேர்ந்து சாப்பிடலியா? என்னம்மா.. என்னம்மா... என்ன இதெல்லாம்?''

''.....?!''

''அழுதியாமே.. ஏன்?''

''.....?!''

''இப்ப பதில் சொல்லப்போறியா இல்லையா?''

மைனாவதி, அவளையே கலவரமாய் பார்த்தபடியிருந்த சத்யாவையும், மற்ற உறவினர்களையும் சங்கடத்துடன் பார்த்தாள்.

''சத்யா.. நீ பக்கத்து ரூம்ல இரேன். வாசு எல்லோரையும் கூட்டிட்டுப் போ!''

அனைவரும் அகல... அம்மாவின் தோளை பாசத்துடன் தடவிக் கொடுத்தான்.

''சொல்லும்மா.. என்ன பிரச்சனை உனக்கு?''

''என்னை மறந்துடுவியா ராம்?''

''எதுக்கு?'' தூக்கி வாரிப்போட்டது.

''இப்பவே உன் பொண்டாட்டிய தலைல தூக்கி வச்சிட்டு ஆடறியாம். உன் பொழைப்பு நாறப்போகுதுன்னு காது படவே பேசறாங்க ராம். என்னை கை விட்ருவியா? உன்னைப் பிரிஞ்சு ஒரு நாள் கூட இருந்ததில்லையே... என்னை முதியோர் இல்லத்துக்கு அனுப்பிடுவியா?''

''ஐய்யோ.. என்னம்மா பெரிய வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு? எனக்கு எப்பவுமே நீதாம்மா முக்கியம்! சத்யாவை விடவும் நீ தான் எனக்கு முக்கியம். இந்த வீட்டுக்கு எப்பவுமே நீ மட்டும் தாம்மா மகாராணி. நீ விரும்பாத எந்த விஷயமும் நடக்காது. எனக்கு தெய்வமே நீதானம்மா. நீ நிம்மதியா இருக்கறது சொந்தக்காரங்களுக்கு பிடிக்கலே... உன் மென்மையான மனசைப் புண்படுத்திட்டாங்க. மறுபடியும் சொல்றேன். எங்கம்மா தான் எனக்கு எல்லாமே.. போதுமா?''

''போதும் ராம்!'' நிம்மதியாய் மூச்சு விட்டாள் மைனாவதி.

6

இரண்டு அறைகள் கொண்ட சாதாரண வீடு தான் அது. வைகுந்தன் எல்லாம் இழந்து நொடித்துப் போன பின் வேறு வேலையைத் தேடிக்கக் கூட திராணியற்றுப் போனார். சின்னப் பிள்ளை தனிக்குடித்தனம் போய்விட்டான். பெரியவன் கூட தான் மூவரும் இருந்தனர். சும்மா சொல்லக் கூடாது தன் சக்திக்கேற்றாற் போல பெற்றவர்களை நன்றாகவே பார்த்துக் கொண்டான். தங்கையைப் படிக்க வைத்தான். தங்கைக்கு தான் பார்க்கும் அலுவலக நண்பர்களிடம் மாப்பிள்ளை பார்க்கும்படி சொல்லியும் வைத்திருந்தான் தீபன். அதற்குள் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. அவன் மனைவி சாந்தினியும் நல்ல பெண். ஆனாலும் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் மட்டந்தட்டி பேசும் ரகம்.

அன்று முதலிரவு!

தரையில் பெட்டை விரித்து அதன் மேல் கொஞ்சம் பூத்தூவி, ஒரு தட்டில் ஸ்வீட், பழங்கள், பக்கத்தில் குவளையில் பால்!

அறைக்குள் நுழைந்த ராமிற்கு என்னவோ போலாகி விட்டது.

கட்டில் கூடவா கிடையாது?

ஆயிரம் கனவுகளுடன் உள்ளே வந்த சத்யாவை அணைத்து கீழே சம்மணம் போட்டு அமர்ந்து விட்டான்.

"நீ சினிமாவெல்லாம் பார்ப்பியா சத்யா?"

"ம்...!"

"அப்ப கண்டிப்பா பர்ஸ்ட் நைட் சீனெல்லாம் பார்த்திருப்பியே...!"

"ம்!" என்றாள் நாணத்துடன்.

"ஆனா, கண்டிப்பா நம்மளை மாதிரி தரையில் பர்ஸ்ட் நைட் கொண்டாடி இருக்க மாட்டாங்க."

சத்யா சங்கடத்துடன் கணவனை ஏறிட்டாள்.

"ஏன் இவ்ளோ மட்டமா நடந்துக்கறாங்க உங்க வீட்லே?"

"ஸாரிங்க... உங்களுக்கு தான் தெரியுமே... நாங்க அண்ணனை சார்ந்துதான் வாழறோம். நாங்க எல்லோருமே தரையில தான் வாழறோம். நாங்க எல்லோரும் தரையில தான் படுத்துப்போம். அண்ணன் ரூம்லே மட்டும் ஒரு கட்டில் இருந்தது. அதுவும் உடைஞ்சுப் போய்ட்டதால தான்... எ... எனக்குப் புரியுதுங்க. ஆனா தப்ப நினைச்சுக்காதீங்க...!"

"ப்ச்... அதில்லே சத்யா. நான் தான் என் வீட்லே இல்லாத பொருளான்னு எந்த சீரும் வேண்டாம்னுட்டேனே! அந்தப் பெருந்தன்மை ஏன் இங்கே இல்லே? நம்ம பர்ஸ்ட் நைட்டுக்காகவாவது ஒரு புதுக்கட்டில் வாங்கியிருக்கலாமே!"

"ஸ... ஸாரிங்க!"

"மூடே ஸ்பாயில் ஆகிடுச்சு சத்யா. எனக்குத் தரையிலே படுத்தே பழக்கமில்லே. இதிலே நமக்கு பர்ஸ்ட் நைட்ங்கறது நினைச்சே பார்க்க முடியலே. குட் நைட்!"

அவள் கன்னத்தில் இயந்திரத்தனமாய் முத்தமிட்டு திரும்பிப் படுத்துவிட்டான்.

அத்தனை பலூன்களும் ஒரு சேர ஊசி கொண்டு உடைக்கப்பட்ட தினுசில் மனசு வலித்தது சத்யாவிற்கு.

பாலும் பழமும் அவளைப் பரிதாபமாய் பார்த்தன.

* * *

மறுவீடு வந்திருப்பதால்.. ஒரு வாரம் ராம் மாமியார் வீட்டில் இருந்தாக வேண்டிய கட்டாயம். அறைக்குள் நடந்த மனத்தாங்கலை சத்யா யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை.

காலை டிபன் சாப்பாடு முடித்ததும் தீபன், ராமிடம் இரண்டு சினிமா டிக்கெட்டுகளை தந்தான்.

"இந்தாங்க மச்சான். சத்யாவும் நீங்களும் சினிமாவுக்கு போய்ட்டு வாங்க."

"வாங்கிப் பார்த்தான். முதல் வகுப்பு டிக்கெட் தான். நல்ல படம் தான். ஆனால் தியேட்டர்?

சத்யாவுடன் கிளம்பியவன் வேறு படத்துக்குப் போனான்.

"என்னங்க... இந்தப் படத்துக்கா அண்ணன் டிக்கெட் வாங்கியிருந்தார்?"

"இல்லே!"

"பின்னே?"

"ஸாரி சத்யா. திரும்பவும் உன்னை சங்கடப்படுத்தறேன் இல்லே? அந்த தியேட்டர் ரொம்ப பழசு. மூட்டைப்பூச்சி கடிக்காம யாரும் வெளியே வரமுடியாது. எனக்கு இந்த அபிராமி, சத்யம், மாயாஜால்னு போய் தான் பழக்கம். உங்க வீட்லே மாப்பிள்ளைன்னா, எவ்வளவு முக்கியமானவர், எப்படி கவனிச்சுக்கணும்ங்கிற இங்கிதம் தெரியலேன்னு நினைக்கிறேன். சரி பரவாயில்லே விடு!"

கூனிக்குறுகிப் போனாள் சத்யா.

* * *

இரவு உணவானதும் "வர்றேன் சத்யா" என்றான்.

"எங்கே புறப்படறீங்க?"

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். நான் அவங்க பக்கத்தில் இருந்தால் தான் தெம்பாயிருப்பாங்க. நீ எங்கே போய்டப் போறே? நான் எங்கே போய்டப் போறேன்? காலைல வர்றேன். மனசுல எதையும் வச்சுக்காதே!"

"ம்...!" என்றாள் எதிர்ப்பார்ப்புகள் பொடிப் பொடியாக. சத்யாவின் பெற்றோர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"எ.. என்ன மாப்ளே... வீட்டுக்குக் கிளம்பறீங்களாம். அப்படி போகக் கூடாது மாப்ளே!" என்றார் புரியாத பார்வையுடன் வைகுந்தன்.

"சம்பிரதாயமெல்லாம் நம்ம சூழ்நிலைகளுக்காக தான் மாமா! அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. நான் பக்கத்துல இருக்கணும். சத்யாவே, 'முதல்ல அத்தைய கவனிங்கன்னு' வற்புறுத்தினா. காலைல வந்துடறேன். வர்றேன் மாமா. அத்தை வர்றேன். தீபன்..." கண்களால் விடை பெற்றுச் சென்று விட்டான்.

அன்று மட்டுமல்லாமல் அதற்கடுத்து வந்த நாட்களிலும் இரவானதும் அம்மா வீட்டிற்குச் சென்று விடுவான்.

தெருவில் உள்ளவர்களுக்கு விஷயம் கசிய... சத்யாவின் தலை தெரிந்தாலே நமுட்டு சிரிப்புடன் கிசுகிசுத்தனர்.

சாந்தினி ஒரு படி மேலே!

"ஏன் சத்யா..நிஜமாகவே ரெண்டு பேரும் லவ் பண்ணீங்களா? இல்லே ஒன் சைட் லவ்வா?"

"ஏன் அண்ணி அப்படி கேக்கறீங்க?"

"அவர் சைட்ல அப்படி ஒண்ணும் தெரியலியே! ஆளைப் போட்டு அம்மாவைப் பார்த்துக்க முடியாதா? இவர்தான் ஓடணுமா? விநோதமாயிருக்கு. புதுசா கல்யாணம் ஆனவங்க எப்படியிருப்பாங்க? அதுவும் ஆம்பளைங்க... காஞ்ச மாடு கம்பங்கொல்லையில பாயற கணக்குல அட்லீஸ்ட் குறைஞ்சது மூணு மாசமாவது இருப்பாங்க. ம்... பார்த்துக்க சத்யா. நீதான் புத்தி உத்தியா நடந்துக்கணும். அவர் எப்பவும் உன்னையே சுத்தி வாறமாதிரி மந்திரம் போடு.. தலையணை மந்திரம் தான்!"

அண்ணி கிண்டலாய் மனதை நோகடித்தாலும் அவள் சொன்னதிலும் உண்மை உறைந்திருப்பதை உணர்ந்தாள். கவலைப்பட்டாள்... யோசித்தாள்.

* * *

ஏம்ப்பா இங்கே வந்துட்டே?'' என்று உள்ளூரப் பொங்கிய சந்தோஷத்தை மறைத்துக் கேட்டாள் தாய் மைனாவதி.

''நேற்று நீ மயங்கி விழுந்ததிலேர்ந்து என் மனசு எதிலேயும் ஒட்டலேம்மா. அத்தை உடம்பு சரியில்லாம இருக்கறப்ப நீங்க அங்கே இருக்கறதுதான் நல்லது'ன்னு என்னை அனுப்பி வச்சவளே உன் மருமகள்தாம்மா. அவளுக்கு இப்பவே உன்மேல எவ்வளவு அக்கறை தெரியுமா?'' என்றான் சத்யாவையும் விட்டுத்தராமல்.

''அப்படியா?'' என்றதோடு சரி.

அதன் பிறகும் தினமும் இரவில் வந்துவிட கிஞ்சித்தும் தடுக்க முற்படாத மைனாவதி உற்சாகமானாள்.

சம்பிரதாயங்கள் முடிந்து சத்யா கணவனுடன் புகுந்த வீட்டிற்கு சென்றாள்.

நிஜத்தில்... அன்று தானே அவர்கள் முதலிரவு? பலவித எதிர்பார்ப்புடன் உடல் முழுக்க ஒருவித அவஸ்தையுடன் நடமாடினாள் சத்யா.

அதே சமயம்.. ஒரு பக்கம் பயமாகவும் இருந்தது. இப்போதும் ஏதாவது காரணம் சொல்லி ராம் அம்மா கூடவே படுத்துக் கொண்டு விடுவானோ என்று!

ஆனால், அப்படி எல்லாம் எதுவும் நடக்கவில்லை. ராம்... ரொம்பவே ஆசையுடன், நேசமுடன், காதலின் மூர்க்கமுடன் நடந்து கொண்டான்.

மனதிலிருந்த பாரமெல்லாம் காணாமல் போனது. திருப்தியும், களைப்பும் அவளை பேரழியாக காட்டியது. கணவனின் நெஞ்சின் மீது தலை வைத்திருந்தவள் அவன் கன்னத்தை ஆசையுடன் கடித்தாள்.

''எப்பங்க போகலாம்?''

''எங்கேடா?''

''கல்யாணத்துக்கு முன்னாடியே நாம ப்ளான் பண்ணினோமே... ஹனிமூனுக்கு போகலாம்னு! எப்ப, எங்கே போறதுன்னு டிசைட் பண்ணிட்டீங்களா?''

''போகலாம்...!''

''அதான் எப்ப?''

''அம்மாவுக்கு உடம்பு குணமானதும்!''

'அவங்களுக்கு என்ன உடம்புக்கு?' என்று கேட்க நினைத்து, அமைதியானாள்.

'அத்தை ஆரோக்கியமாத்தானே இருக்காங்க. பிறகேன்.. இவர் இப்படி சொல்றார்?'

திருமணத்திற்கு முன்பு ராமுவுக்கும் சத்யாவுக்கும் ஹனிமூனுக்கு குறைந்தது இருபது நாட்களாவது காதல் வானில் சிறகடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான் தான். ஆனால், திருமணமானதும், 'என்னை மறந்துடுவியாராம்?' என்று கேட்டது அவன் உயிர் வரை வதைத்தது.

எந்த சந்தர்ப்பதிலும் அம்மாவின் மனதில் அப்படியொரு எண்ணம் மறுபடி வரக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். அதனால் அடக்கி வாசிக்க வேண்டும் என்று முடிவு செய்தவன், தன்னை அம்மா சத்யாவிடம் அடங்கிப் போய் விட்டான என்று எண்ணம் வந்து விடக் கூடாது என்பதற்காக...

ஹனிமூன் போக வேண்டும் என்ற ஆசையை வழித் தெறிந்து விட்டான்.

7

அவளும் கேட்டுக் கேட்டு சலித்து விட்டாள்!

கணவனுடன் ஹில் ஸ்டேஷனில், குளிரில் ஒட்டிக் கொண்டு, பூக்கள் உதிர்ந்த ஈரமான பாதையில் நடந்தபடி, பனி மேகங்களுடன் மோதி, காணாமல் அவனைத் தேடி, அறைக்குள் அவனே உடையாய் இணைபிரியாமல்.. இன்னும் எத்தனை எத்தனையோ கனவுகள், கற்பனைகள்!

இதோ, திருமணமாகி இரண்டு மாதம் ஆகிவிட்டது. இன்னும் எப்போது?

"ஏங்க?"

"என்ன சத்யா?"

"உங்கக் கிட்டே பேசணும்!"

"ஆபீஸ் போய்ட்டு வந்துடறேன். நைட்டு பேசலாம். புதுசா ஆரம்பிச்ச தொழில், அதிக நேரம் தேவைப்படுது.

"சரி சொல்லு!"

"ஹனிமூன் எப்ப?"

"கல்யாணமாகி ரெண்டு மாசமாயாச்சு!"

"ஆமாங்க!"

"இப்பப் போனா ப்ரண்ட்ஸ்கள் கிண்டல் பண்ணுவாங்க. தவிர, ஆபீஸை விட்டு ஊரை சுத்தினோம்னு வச்சுக்க... வந்ததும் இழுத்து மூட வேண்டியதுதான். இப்பதானே வாழ்க்கை ஆரம்பிச்சிருக்கோம்? இன்னும் கடக்க வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கு. ரெண்டு மூணு வருஷமாகட்டும். பாரினுக்கே போய்ட்டு வரலாம்."

"அதுக்குப் பேரு ஹனிமூனா? குழந்தைப் பிறந்துடும். பிறக்கறதுக்கு முன்னாடி லைப்பை என்ஜாய் பண்றது வேற... பிறந்த பிறகு என்ஜாய் பண்றது வேற..." என்றாள் ஏமாற்றத்துடன்.

"சரி.. இருக்கட்டுமே.. குழந்தையோடவே போய்ட்டு வந்தாப் போச்சு.. என்ன குறைஞ்சிடப்போகுது?"

அழகாய் வாயடைத்தான்.

சத்யாவிற்கு ஏகப்பட்ட வருத்தம். கனவுகளும், கற்பனைகளும் பனிப்புகையிலேயே காணாமல் போயின. ஆனாலும் தன் ஏமாற்றத்தை வெளிக்காட்ட விரும்பாமல் கணவனுடன் இன்னமும் ஒட்டி உறவாடினாள்.

அண்ணியின் அறிவுரை அவளை எப்போதும் எச்சரித்துக் கொண்டேயிருக்கும். அதனால் தன் வெட்கத்தை உதறி கணவனை அடிக்கடி கட்டியணைத்து முத்தமிடுவாள். நுனி நாக்கால் முகமெங்கும் கோலமிடுவாள். மோவாயை, கன்னத்தை பல் பதியக் கடிப்பாள்.

ராமிற்கு பரவசமாகத்தான் இருக்கும். ஆனால் அதையும் மீறி ஒரு யோசனை ஓடிக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் கேட்டான்.

"என்ன சத்யா... நான் செய்ய வேண்டியதெல்லாம் நீ செய்யறே! உனக்கு செக்ஸ் பீலிங்ஸ் அதிகம்" என்றான்.

"ஆமாம்.. அப்படித்தான் வச்சுக்குங்களேன். எனக்கு உங்களைப் பார்த்தாலே கடிச்சித் தின்னணும் போலிருக்கு. அவ்ளோ ஆசை உங்க மேலே!" என்றாள்.

அவளின் அதீத ஆசை வியப்பை தந்தாலும், அதை விட அதிகமாய் சந்தோஷத்தையும் தந்தது.

அவனும் அவளுக்கு அன்பை தாராளமாய் அள்ளித் தந்தான்.

அதே சமயம், மகன் வீட்டிலிருக்கும் நேரங்களில் எல்லாம் சிட்டுக் குருவிகளைப் போல் இருவரும் கொஞ்சிக் கொண்டும், சிரித்துக் கொண்டு இருந்ததை மைனாவதி கவனிக்கத் தவறவில்லை. சத்யா கணவனின் அன்பில் திளைத்து, பூரித்து முகமெங்கும் பொங்கி வழிய... அந்த அழகுடன் வீட்டில் வளைய வந்தவளை பார்க்கையில் திக்கென்றிருந்தது.

'என் பிள்ளை மாறிவிட்டானா?'

சத்யா நன்றாகவே சமைத்தாள். ருசித்து சாப்பிட்டான் ராம். ஆனால் மைனாவதிக்குத் தான் பிடிக்காமல் போனது. சமையல் சுவையாகத்தான் இருக்கும் நாக்கு கேட்கும். ஆனால் மனசு வீம்பாய் ஒதுக்கும். மகன் இல்லாத நேரங்களில் முகத்திலடிப்பது போல் விமர்சிப்பாள். தொட்டதற்கெல்லாம் முகத்தை தூக்கி வைத்துக் கொள்வாள்.

சத்யா அமைதியாகவே இருப்பாள். ஒரு வார்த்தையும் மாமியாரிடம் பதிலாய் பேசியதில்லை. ஆனால், சில முறை கணவனிடம் மனசுப் பொறுக்காமல் ஆதங்கத்துடன் சொல்வாள்.

தன் தாயைப் பற்றி தன்னிடமே குறை சொல்வதை மட்டும் அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கடினப்பட்டு பொறுமை காத்தவன் ஒரு நாள் கோபமாய் வெடித்து விட்டான்.

''நானும் பார்க்கறேன். எப்பப் பார்த்தாலும் எங்கம்மாவை குறை சொல்லிட்டே இருக்கிறே. பெரியவங்க அப்படிதான் பேசுவாங்க. அதைப் பொறுத்துப் போக முடியாதா? நீ அவங்களை தெய்வமா நினைக்கணும். எங்கம்மா எனக்கு எப்பேர்ப்பட்ட பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணனும்னு நினைச்சாங்க தெரியுமா?

ஆனா, என் ஆசையை சொன்னதும் மறுபேச்சு பேசாம சரின்னாங்க தெரியுமா? சொல்லிக் காட்டறேன்னு நினைக்காதே! உன் குடும்ப சூழ்நிலைக்கு எங்க வீட்டுக்கு மருமகளா வர்றது நடக்கற விஷயமா? நடந்துடுச்சே! காரணம் யார்? எங்கம்மா தானே?''

அவனின் கோபம் இதயத்தில் அறைய சுருங்கிப் போனாள்.

ராமிற்கு அவளைப் பார்க்கவே சங்கடமாகிவிட்டது. கோபத்தில் பேசினானே ஒழிய அவனுக்கு அவள் மீது கொள்ளைக் காதல் இருந்தது.

அவள் முகவாட்டம் அவனைத் தாக்கியது.

இதற்குப் பெயர்தானே தாம்பத்யம்?

அவளை சமாதானப்படுத்த சத்யாவை இரண்டு, மூன்று நாட்கள் அம்மா வீட்டில் கொண்டு போய் விடுவான். அலுவலகத்தில் நேரம் அட்ஜஸ்ட் பண்ணி மனைவியை மாமியார் வீட்டிலிருந்தே சினிமா, கோவில் என்று அழைத்துச் செல்வான். மகளை மருமகன் சந்தோஷமாய் வைத்திருப்பது பெற்றவர்களுக்கு மகிழ்ச்சி! அவர்களுக்கு வேண்டியது அது தானே?

ஆனால் தன் வீட்டில் இருக்கும்போது மனைவியுடன் வெளியில் செல்லத் தயங்குவான். ஓரிரு முறை தவிர கோவிலுக்குக் கூட அம்மாவுடன் தான் செல்வான்.

'சின்னஞ்சிறுசுக... நீங்க போய்ட்டு வாங்க. நான் வரலேப்பா.. கால் வலிக்குது...' என்று நாசூக்காய் மறுக்கவும் மாட்டாள் மைனாவதி.

அவனாகவே மோதிரம், டிரஸ் எல்லாம் வாங்கிக் கொண்டு, ஒவ்வொரு முறையும் மாமியார் வீட்டில் தந்ததாக அம்மாவிடம் காட்டுவான்.

அப்படியாவது அம்மா மனைவியை நேசிக்க மாட்டாளா என்கிற நப்பாசையில்.

அம்மாவையும், மனைவியையும் தன் இரு கண்களாய் நினைத்தான். அவர்கள் இருவருக்கும் இவன் தானே உலகம்?

சத்யா உண்டானாள்!

ராம் குதித்தான். அவன் வாரிசாயிற்றே? பெண்களைப் போலவே, ஆண்களும் முழுமையடைவதும், அதிக மகிழ்ச்சி அடைவதும் அவர்கள் தந்தையாகும் போது தான்!

வைகுந்தனும், மகாலட்சுமியும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

மைனாவதிக்கும் சந்தோஷம் தான். இந்தக் குடும்பத்துக்கு மகனின் பெயரைச் சொல்லிக் கொண்டு வாரிசு வரப்போகிறதே! ஆனால், சத்யாவை ஏனோ மனசு ஏற்றுக் கொள்ளவே மாட்டேன் என்றது. அவளை தன் குடும்ப வாரிசை சுமக்கும் ஒரு இயந்திரமாகத்தான் நினைத்தாள். அன்பாய் ஒரு வார்த்தை.. அவளிடமிருந்து சத்யாவுக்கு போய்ச் சேரவேயில்லை.

நாக்கு வாய்க்கு ருசியாய்க் கேட்டது. சமைத்துப் போட யாருமில்லை. அவளாகத்தான் சமைக்க வேண்டும். என்றாவது மகாலட்சுமி அவளுக்குப் பிடித்ததை சமைத்து எடுத்து வருவாள். அதுவும், மைனாவதியின் கடுகடு முகம் கண்டு வருவது நின்று போனது.

வாந்தி ஒரு பக்கம் அவளை வாட்டியது. சாப்பிட்ட மறுகணமே குமட்டிக் கொண்டு வர.. ஓய்ந்து போவாள்.

சும்மா சொல்லக் கூடாது. ராம் மனைவியை உள்ளங் கையில் தாங்க முடிந்திருந்தால், கண்டிப்பாய் தாங்கியிருப்

பான். அவ்வளவு பாசம் காட்டினான். அவளுக்குப் பிடித்ததை எல்லாம் வாங்கித் தந்தான்.

வெரைட்டியாக கூல்ட்ரிங்ஸ் வாங்கி பிரிட்ஜில் நிரப்பினான்.

நான்காவது மாதம் தாளிக்கும் வாசனைக்கே வாந்தி எடுத்தாள்.

நடக்கக் கூட தெம்பின்றி சுருண்டு படுத்துக் கிடக்கும் மருமகளுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்கக் கூட மனசு வரவில்லை மைனாவதிக்கு. அவள் பாட்டிற்கு சீரியலில் மூழ்கி விடுவாள்.

எரிச்சலும், ஆத்திரமுமாய் கணவனிடம் கொட்டினாள்.

''உங்கம்மாவுக்கு எப்படிங்க மனசு வருது? கொஞ்சம் கூட நிக்காம வாந்தி எடுத்துட்டிருக்கேன். பார்த்துக்கிட்டு சும்மாவே உட்கார்ந்திட்டிருக்காங்க. ஒரு டம்ளர் தண்ணீர் குடுக்கக் கூட மனசு வரலே. ஒரு பொண்ணைப் பெத்து வளர்த்து, ஆளாக்கியிருந்தா, அந்த அருமை புரியும்.''

சொல்லி முடிக்கவில்லை.

கன்னம் சிவந்து போனது அவன் அறைந்த அறையில்!

வலியில் துடித்துப் போனவளைப் பார்த்து கத்தினான்.

''எவ்வளவு தைரியம் உனக்கு? என்கிட்டேயே எங்கம்மாவைப் பத்தி மட்டமாப் பேசறியா? அவங்க என்ன உனக்கு வேலைக்காரியா? இதோ பார் சத்யா.. இது தான் கடைசி! இனி எங்கம்மாவைப் பத்தி ஒரு வார்த்தை பேசினியோ... என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது!''

அடி தந்த வலியும், அவன் வார்த்தைகள் தந்த வலியும் உள்ளத்தை நைந்து போக வைத்தது.

'வயிற்றில் குழந்தையை சுமந்திருக்கும் நேரத்திலும் கை நீட்டி அடிக்கிறான் என்றால்...?

எல்லாம் அவன் அம்மாவால் தான்?'

அதுவரை மாமியார் மீது வராத விரோத எண்ணம் துளிர்விடத் தொடங்கியது.

8

ஏழாவது மாதம்! வயிறு பம்மென்று புடைத்திருந்தது. சத்யா ஆசையுடன் அதைத் தடவினாள்.

கனமானப் பொருட்களை தூக்குவ தில்லையே தவிர, அனைத்து வேலை களையும் அவளே செய்தாள். எல்லாம் முடித்து விட்டு கட்டிலில் வந்து படுத்தவளுக்கு அப் போது தான் உறைத்தது.

காலைலேர்ந்து வயிற்றில் அசைவே இல்லையே! இங்கும் அங்கும் நகர்ந்த இனிய அதிர்வைத் தரும் குழந்தை.. இன்று முழுக்க நகரவே இல்லையே! ஒரு நாளைக்கு குறைந்தது பனிரெண்டு முறையாவது அசைவு இருக்க ணுமே!

என்னாயிற்று?

வயிற்றை இங்குமங்கும் மெல்ல அழுத்திப் பார்த்தாள்.

'என் செல்லமே... என்னாச்சு உனக்கு? எப்பவுமே அம்மாவோட விளையாடுவியே... எட்டி உதைப்பியே! இன்னைக்கு ஏன் அமைதியாய்ட்டே? அம்மா பேசறது கேட்குதா? அம்மா ரொம்ப பயந்துப் போயிருக்கேன். வா.. அம்மாக் கூட விளையாட வா!'

மனதிற்குள்ளாகப் பேசினாள்.

ஐந்து நிமிடம் சென்றிருக்கும். லேசாக அசைவுத் தெரிந்தது. இருக்க.. இருக்க இங்குமங்கும் மிதக்க

இடப்புறம் வயிறு புடைக்க... தலை முட்டுவதும் புரிந்தது.

சத்யா பரவசமுடன் தடவிக் கொடுத்தாள்.

''தாங்க்ஸ்டா செல்லம்!''

* * *

வளைகாப்பு முடிந்து சத்யா தாய் வீட்டிற்கு வந்தாள். ராம் தினமும் அலுவலகம் முடிந்து நேரே மனைவியைப் பார்த்து விட்டுத் தான் வீட்டிற்கு செல்வான்.

அன்று.. ஹாஸ்பிடலுக்கு வழக்கமான செக்கப்புக்கு சென்று வந்த பின் இடிந்து போயிருந்தனர். சத்யாவும் அவள் பெற்றோரும்!

குழந்தையின் தலை திரும்பியிருப்பதால் நார்மல் டெலிவரிக்கு வாய்ப்பே இல்லை என்று டாக்டர் கூறி விட்டார்.

விஷயமறிந்த ராம் ஆறுதலாய் மனைவியின் கையைப் பற்றி அழுத்தினான்.

''இப்பல்லாம்.. சிசேரியன்ங்கறது சாதாரண விஷயம் சத்யா. அதுவும் நார்மல் டெலிவரியோட வலிக்கு பயந்தே அவங்களே சிசேரியன் பண்ணச் சொல்லிடறது காஷூவலா நடக்குது.. பயப்படாதே!''

''.....?!''

''மாமா... சத்யாவ எந்த ஹாஸ்பிடல்ல சேர்க்கறதுன்னு முடிவுப்பண்ணிட்டீங்களா? டாக்டர்ஸ் திறமைசாலியா இருக்கறது மட்டுமில்லே, ஹாஸ்பிடலோட சுத்தம். நர்ஸ்களோட அணுகுமுறைன்னு எல்லாத்தையும் சரி பார்க்க வேண்டியிருக்கு. இந்த ஏரியாவிலேயே கிட்டத் தட்ட எட்டு பிரைவேட் ஹாஸ்பிடல் இருக்கு போல.. விசாரிச்சிடுங்க...''

"பிரைவேட் ஹாஸ்பிடலா?" திக்கென்று மனைவியை திரும்பிப் பார்த்தார்.

"என்ன?" என்றான் புரியாமல்...

"அது.. வந்து..."

"சொல்லுங்க மாமா!"

சத்யாவும்.. விஷயம் புரிந்து தலைகவிழ்ந்துக் கொண்டாள்.

"ஆ.. ஆபரேஷன் வேற..."

"ஆமாம்!"

"குறைஞ்சது முப்பது, நாற்பதாயிரம் ஆகும் மாப்ளே...

"எங்களால அந்தளவுக்கு செலவுப் பண்ணி பார்த்துக்க முடியற நிலைமையிலே இல்லே. அதான் கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியிலே சேர்க்கலாம்னு..."

"எ... என்னது? கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியிலா?" பொங்கி வந்த கோபத்தை சிரமப்பட்டு அடக்கினான்.

".....?!"

"என் குழந்தை கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரியிலே பிறக்கறதா?"

".....?!"

"பாருங்க மாமா! நான் அதுக்காக அரசாங்க ஆஸ்பத்திரியை குறை சொல்லலே. எங்க வசதிக்கு எங்க வாரிசு அங்கே பிறக்கறது கவுரவக் குறைச்சல்! நாளைக்கு எங்க உறவுக்காரங்க ரொம்ப மட்டமா பேசுவாங்க! அதனால..."

".....?" வைகுந்தன் பரிதாபமாய் பார்த்தார்.

"நீங்க நல்ல ஹாஸ்பிடல்ல சேர்த்துடுங்க. ஆகற செலவை நான் பார்த்துக்கறேன்."

சத்யா தலை தூக்கி கணவனை கண் கலங்கப் பார்த்தாள்.

மாமனாரும், மாமியாரும் சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல் நெக்குருகினர்.

மனைவியுடன் அறைக்குள் வந்தான் ராம்.

சத்யா.. அவன் நெஞ்சில் முகம் புதைத்து விசும்பினாள்.

"ஏய்... என்ன?"

"உங்க முகத்துல முழிக்கறதுக்கே வெக்கமா இருக்குங்க."

"ஏன்?"

"ரிக்ஷா ஓட்டறவன் கூட மாமியார் வீட்லேர்ந்து இது வேணும். அது வேணும்னு சட்டதிட்டமாய் பேசி வாங்கிக்கறாங்க. ஆனா உங்க தகுதிக்கு நீங்க அந்தஸ்தான இடத்திலே கல்யாணம் பண்ணியிருக்கலாம். என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதால தானே உங்களுக்கு இத்தனை செலவு...?"

"பைத்தியம்... இதுக்கா அழறே? பணக்கார வீட்டு மாப்பிள்ளை ஆகறது ஈஸியான விஷயம்தான். ஆனா, மனசுக்கு பிடிச்சவளை கல்யாணம் பண்ணிக்கறது எல்லோருக்கும் வாய்க்கற விஷயமா என்ன? காதலும், கல்யாணமும் கொடுக்கல், வாங்கல் விஷயமா என்ன... ஒரு விஷயத்தைத் தவிர! அன்பு மட்டும் தான்! புரியுதா? கவுரவ விஷயம்ங்கறது அடுத்த பட்சம் தான்! முதல்ல நீயும், குழந்தையும் ஆரோக்கியமா, ஸேபா இருக்கணும்ங்கறதுதான் முக்கியம்? இந்த செலவுக்கூட உங்கம்மா, அப்பாவுக்கா செய்யறேன்? என் பொண்டாட்டி, குழந்தைக் காகத்தானே? பீல் பண்ணாம ஹாப்பியா இரு."

''ம்...!'' என்றாள். இன்னும் அழுத்தமாய் முகம் புதைத்து...

''சரி.. குழந்தைக்கு பேர் செலக்ட் பண்ணிட்டியா?''

''ம்... நிறையப் பேர் எழுதி வச்சிருக்கேன்!''

''சொல்லு.. பார்ப்போம்!''

''ம்ஹூம். மனசுல தான் வச்சுக்கணும் சொல்லக்கூடாது.''

''சென்டிமெண்ட்? ஓக்கே விடு.. என்ன குழந்தை வேணும்?''

''பெண் குழந்தை வேணும். ஆனா, பிறக்கப்போறது ஆண் குழந்தை தான்!''

''எப்படி அவ்ளோ உறுதியாச் சொல்றே?''

''மனசு சொல்லுது அடிக்கடி கனவுல ஒரு ஆண் குழந்தை வருது'' அப்படியே உங்க சாயல்ல... அழகா...''

''எங்கம்மா சாயல்ல பிறந்தா சந்தோஷம்.''

''அதெல்லாம் கிடையாது. உங்க சாயல்ல தான் பிறக்கும். என் பிள்ளை அவங்க பாட்டியை வந்து உதைக்கப் போறான் பாருங்க!''

''என் செல்லத்துக்கு எங்கம்மாவைப் பத்தி பேச லேன்னா தூக்கமே வராது... இல்லே!'' வலிக்காமல் அவள் கன்னத்தை செல்லமாய் கிள்ளினான்.

* * *

டாக்டர் குறித்த நாளில் ஆபரேஷன் மூலம் அழகான ஆண் குழந்தை பிறந்தது.

நல்ல எடையுடன், தலை நிறைய முடியுடன் வெள்ளை வெளேரென்று அப்பாவின் சாயலில் பிறந்தது.

ராம் குழந்தையைப் பார்த்து அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

மனைவியின் நெற்றியில் இதழ் பதித்து, ''பையன் சூப்பராயிருக்கான் சத்யா.. தாங்க்ஸ்டா!'' என்றான்.

மைனாவதி கைகள் நடுங்க, கண்கள் மினுக்க, அள்ளி அணைத்துக் கொண்டாள்.

''என் பேரன், என் குலக்கொழுந்து, என் ராஜா.''

''பார்த்து, பார்த்து.. கொஞ்சம் மிச்சம் வைங்கம்மா!'' என்று கிண்டல் செய்தான் ராம்.

என் பேரனை என்கிட்டேயே கொடுத்துடுடா! நானே வளர்த்துக்கறேன்.''

''எடுத்துக்கம்மா.. உன் பேரன்.. உனக்கில்லாத உரிமையா? உன் இஷ்டப்படி வளர்த்துக்க. நாங்க இன்னொன்று பெத்துக்கறோம்'' என்றான்.

''இல்லே.. இது என் பிள்ளை.. நான் தான் வளர்ப்பேன்!'' சற்று அழுத்தமாகவே மாமியாரிடமிருந்து குழந்தையைப் பிடுங்கி அணைத்துக் கொண்டாள் சத்யா.

அதைப் பார்த்து ராம் வாய்விட்டு சிரித்தான்.

''சரி.. சரி.. வச்சுக்க!'' என்றான்.

மைனாவதி வெறுப்பு கக்கும் விழிகளுடன் மருமகளைப் பார்த்தாள்.

9

'வாழ்க்கை என்பது இத்தனை இனிமையானதாய் இருக்குமா என்ன?' என்ற ஆச்சர்யம் சத்யாவிற்கு அடிக்கடி எழுந்தது.

அவளின் செல்லக் குழந்தை வாழ்வின் அத்தனை சந்தோஷங்களை கூடவே அள்ளிக் கொண்டு வந்திருந்தான்.

உழைத்து களைத்து வந்த ராமிற்கும் மிகப்பெரிய எனர்ஜி டானிக்காக இருந்தான் குழந்தை அபிலாஷ்.

மாதங்கள் பல கடந்திருந்தன. அபிலாஷ் தவழ ஆரம் பித்திருந்தான்.

அவன் பின்னேயே தவழ்ந்து செல்வது இருவருக்கும் பொழுது போக்கு.

மைனாவதியும் பேரனை தரையில் விடுவதில்லை. எந்நேரமும் தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருப்பாள்.

அபிலாஷின் பொக்கை வாய் சிரிப்பில் உலகம் மறந் திருந்தனர்.

அதற்கும் திருஷ்டிப்பட்டு விட்டது போலும்.

ஒரு நாள்!

குழந்தைக்கு தடுப்பூசி போடுவதற்காக கணவனுடன் ஹாஸ்பிடலுக்கு சென்றிருந்தாள் சத்யா.

ராமாயணம் புத்தகம் ஒன்று இரண்டு வாரமாகக் காணவில்லை. மைனாவதிக்கு தினமும் அதில் பத்து பக்கமாவது வாசித்தால் தான் பொழுதுப் பூர்த்தியாகும்.

எங்கே போயிருக்கும்?

ஒரு முறை சத்யா அதை எடுத்துப் புரட்டியதாய் நினைவு. நிறைய புத்தகங்களை படிக்கும் பழக்கமுடையவள் தான் அவளும்.

அவளின் அறையிலிருக்கும் கப்போர்டில் ஏகப்பட்ட புத்தகங்கள் இருக்கும்.

'போய்ப் பார்க்கலாமா?'

தயக்கம் எழுந்தது.

'ஏன் போனால் என்ன? என் வீடு இது? அவள் இங்கு இருப்பதால் அந்த அறை அவளுக்கு சொந்தமாகி விடுமா என்ன?'

மைனாவதி அறைக்குள் சென்றாள்.

அவள் மட்டுமா.. கூடவே விதியும் தான்!

அறை சுத்தமாக, பாந்தமாக இருந்தது. இத்தனைக்கும் அபிலாஷ் நிமிடத்திற்கொரு முறை கலைத்துப் போட்டு விளையாடியும்!

அலமாரியில் அழகாக புத்தகங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.

தடிமனாய் இருந்த புத்தகங்களில் பார்வையை ஓட விட்டு, எடுத்துப் பார்த்து அதே இடத்தில் வைத்துக் கொண் டிருந்தாள்.

அப்படி ஒரு புத்தகத்தை இழுத்தபோது கூடவே ஏழெட்டுப் புத்தகங்கள் கீழே விழுந்தன.

மைனாவதி அவற்றை எடுத்து அடுக்கினாள். அதில் ஒரு பைண்டிங் பண்ணப்பட்டிருந்த புத்தகம் அட்டை பிய்ந்து மல்லாந்திருக்க எடுத்தாள்.

அதனுள்ளிருந்து ஒரு கவர் விழுந்தது.

அதையும் எடுத்து புத்தகத்தினுள் வைக்கப் போனவள், என்ன நினைத்தாளோ பிரித்துப் பார்த்தாள்.

முதலில் ஒரு இளைஞனின் கலர்ப்போட்டோ வந்து விழுந்தது.

'யாரிவன்? சத்யாவின் அண்ணனா?'

'இல்லையே அவனை ஒரு முறைப் பார்த்திருக்கிறேனே. கொஞ்சம் கறுப்பாய் அவள் சாயலில் இருப்பான். இவன் யார்?'

'இதென்ன?' இன்னும் விரலில் நெருட கவரினுள் ஏதோ பேப்பர் இருப்பது தெரிந்தது.

எடுத்தாள், பிரித்தாள்!

கடிதம் முத்தான கையெழுத்தில்!

"ஆரம்பமே, என்னுயிர் சத்யாவுக்கு...!" என்று இருக்க... துணுக்குற்றாள்.

'என்ன கடிதம் இது?'

கண்களை அவசரமாய் ஓடவிட்டாள்.

"என்னுயிர் சத்யாவுக்கு...!"

உன் இதயத்தில் வாழும் மகேந்திரன் எழுதிக் கொள்வது! நாம் வழக்கமாய் சந்திக்கும் இடத்தில் கடந்த ஒரு வாரமாய் காத்திருந்து ஏமாந்துப் போகிறேன். என் மீது இன்னும் கோபமா செல்லம்?

நீ என்னவள் என்ற உரிமையினால் தானே முத்தமிட்டேன். அதுவும் கன்னத்தில்! அதற்குக் கூட தகுதியற்றவனா நான்? அன்றிலிருந்து என்னிடம் பேசக் கூட மறுக்கிறாய். நான் செய்தது தவறில்லை என்பது என் கருத்து. தவறென்று நீ நினைத்தால் மன்னித்து விடு! நீயில்லாத வாழ்க்கை எனக்குத் தேவையே இல்லை. உனக்காக அதே இடத்தில் காத்திருக்கிறேன்.

இத்துடன் என் போட்டோ இணைத்துள்ளேன். (இந்த வாரத்தில் என் முகம் மறந்திருக்குமோ.. என்ற கவலையால்!)

இப்படிக்கு,

உன்னுயிர் மகேந்திரன். (10.11.2007)

படித்து முடித்தவளின் உடம்பெங்கும் வியர்த்துக் கொட்டியது கைகள் நடுங்கின.

'என்னக் கண்றாவி இது? அந்தப்பழிகாரி எவனையோ காதலிச்சிருக்கா. கடிதத்தையும், போட்டோவையும் பத்திரமா ஒளிச்சு வச்சிருக்கா? போயும், போயும் என் பிள்ளை அந்த சாக்கடையிலா போய் விழணும். ஒரு வேளை அவனுக்கும் விஷயம் தெரியுமோ? தெரிஞ்சு தான் வாழ்க்கை கொடுத்திருக்கானோ?

வரட்டும்!

மனதில் எரிமலைக் குழம்பாய் கோபம் கொதிக்க காத்திருந்தாள்.

சிரிப்பு சத்தத்துடன் வந்திறங்கினர் தம்பதிகள்.

பாட்டியைப் பார்த்ததும் அபிலாஷ் தாவினான்.

வாங்கிக் கொண்டாள்.

"ஏம்மா டல்லாத் தெரியறே? உடம்புக்கு முடியலியா?" என்றான் தனயன்.

"இல்லேப்பா உன்கிட்ட கொஞ்சம் பேசணும்!"

"என்ன சொல்லும்மா!"

"தனியாப் பேசணும்!"

அடுத்த கணமே நகர்ந்து விட்டாள் சத்யா.

"வா.. இப்படி" என்று மகனை தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

"இந்தா.. இதைப் பிரிச்சுப் பார்!"

"என்னம்மா இது?"

"அசிங்கம்டா... என் குடும்பத்துக்கு வந்த கேடு.. படி!"

குழப்பத்துடன் பிரித்தவன்.. படிக்க படிக்க முகம் மாறிக் கொண்டேயிருந்தது.

''இவ பவிசுப்பற்றி ஏற்கனவே உனக்குத் தெரியுமா ராம்?''

''இல்லை'' என்று தலையாட்டியவனை கனமாய் நெஞ்சின் மீது ஏதோவொன்று அழுத்தியதுப் போல் வலித்தது.

''என்ன இது? ஏன்? எப்படி? சத்யாவா? குழந்தையைப் போல் மெத்மெத்தென்று மேலே விழுந்து காதலாய் விளையாடிவளின் நெஞ்சில் ஏற்கனவே ஒரு காதலா?''

வருடங்கள் கடந்திருந்தாலும் கடிதத்தை கிழித்துப் போடாமல் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாள் என்றால் அவனை இன்னும் உள்ளத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாள் என்று தானே அர்த்தம்?

ஏற்கனவே ஒருத்தனைக் காதலித்து, அவனுக்கடுத்த நிலையில் தான் நானா?

நினைப்பே கசப்பாய் இருந்தது.

'எனக்கே எனக்கென்று படைக்கப்பட்டவள் இல்லையா? எவ்வளவுப் பெரிய விஷயத்தை மறைத்து, என்னைக் காதலித்தாள்?

அதெப்படி முடியும்? ஒருத்தனை நினைத்த நெஞ்சம் இன்னொருவனை எப்படி ஏற்கும்?

இதுநாள் வரையில் எச்சில் பண்டத்தையா சாப்பிட்டு வந்தேன்?'

''இதோப் பார் ராம்... அவ இந்த வீட்லே இருக்கக் கூடாது!''

''அம்மா... என்னைக் கொஞ்சம் தனியா விடும்மா!''

''இதிலே யோசிக்க என்ன இருக்கு... என் குடும்ப மானமேப் போச்சு. ஒரு... இந்த வீட்டுக்கு...''

''சொன்னாப் புரியாது?'' அதட்டலாய் வந்தது குரல். முறைத்து விட்டுப் போய் விட்டாள்.

சற்று நேரம் பொறுத்து தன் அறைக்குச் சென்றாள்.

குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருந்தவள் ஜாக்கெட்டை சரிப் பண்ணி, உறங்கிய அபிலாஷை தொட்டிலில் படுக்க வைத்தாள்.

இவனைப் பார்த்ததும், ''சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''சத்யா...''

''என்னங்க?''

''காதலைப் பத்தி என்ன நினைக்கிறே?''

''என்ன திடீர்னு இப்படியொரு கேள்வி?''

''கேட்டதுக்கு பதில்!''

''வார்த்தைகளால் சொல்லிட முடியுமாங்க? கடவுள் எனக்குக் கொடுத்த மிகப் பெரிய பரிசே... நீங்களும், உங்கள் காதலும் தான்!''

''அப்படியா... சரி இதென்ன கடிதம்?''

அவன் நீட்டியதை இயல்பாய் வாங்கிப் பார்த்தவள் மிக மிக அதிர்ந்தாள்.

'இது... இது... எப்படி... இவரிடம்?'

தலை சுற்றியது பயத்தில் கண்கள் இருண்டன.

10

மிக மிக கடினப்பட்டு சுற்றுச் சூழலை உணர்ந்தாள் சத்யா. நாடி நரம்புகளில் ஊடுருவி உடம்பெங்கும் நடுக்கம் பரவியது.

''சொல்லு சத்யா... யாரந்த மகேந்திரன்?'' சத்யா கண்ணீர் மல்க தலை கவிழ்ந்திருந்தாள்.

''சொல்லுன்றேன்ல... ஏமாந்தவன் கேள்வி கேட்கக் கூடாதா?''

''ஐயோ... பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க. நான் உங்களை எந்தளவு நேசிக்கிறேன்னு...''

''வசனம் பேசாதே. பதிலை சொல்லு. மகேந்திரன் யார்?''

''அ... அவன் என்னை காதலிச்சான்!''

''நீ?''

''அது... அது... நான் அப்ப சின்னப் பொண்ணுங்க. உலகம் புரியாத வயசு. ஸ்கூல்ல படிச்சிட்டிருந்தேன். அவன் விரட்டி, விரட்டி காதலிச்சான். அந்த இன்பாச்சு வேஷனை காதல்னு நினைச்சு... நானும்...!''

''காதலிச்சே!''

''இல்லேங்க விவரம் தெரிஞ்சு நான் நேசிச்ச ஒரே ஆண் நீங்கதான்!''

''என்ன அழகாய் பேசறே சத்யா? முத்தம் வரைக்கும் இடம் கொடுத்திருக்கே. யார் கண்டது அதற்கு மேலும்....''

''ப்ளீஸ்... ப்ளீஸ்... அபாண்டமாப் பேசாதீங்க. பதினாறு, பதினேழு வயசுல காதலைப் பத்தி என்னங்க தெரியும்? அவன் தப்பானவன்னு தெரிஞ்சதும், அவனை ஒரேயடியா தலை முழுகினேன்ங்க.''

''ஓஹோ... அதனாலதான் அவன் கொடுத்த லெட்டரையும், போட்டோவையும் பத்திரமா வச்சிருந்தியாக்கும்.''

''உண்மையை சொல்றேங்க அவன் எனக்கு நிறையவே கடிதம் கொடுத்தான். எல்லாத்தையும் கிழிச்செறிஞ்சுட்டேன். இது மட்டும் எப்படியோ, எதிலேயோ தங்கிடுச்சு.''

''ஏன்... இத்தனை பெரிய விஷயத்தையும் என்கிட்டே மறைச்சே?''

''பயமாயிருந்துச்சுங்க. அதனால என்னை வெறுத்திடுவீங்களோன்னு. என் மனசுல உங்களைத் தவிர யாரும் இல்லை. அப்படியிருக்க ஏன் இதையெல்லாம் சொல்லி வீணா மனத்தாங்கலை உண்டு பண்ணனும்னு...!''

''சத்யா... நீ சொல்றதுல எத்தனை சதவீதம் உண்மை, எத்தனை சதவீதம் பொய்னு நான் கண்டறிய விரும்பலே, அந்த மகேந்திரன் இப்ப எங்கேயிருக்கான், என்ன பண்றான்னு தெரிஞ்சுக்கக் கூட விரும்பலே!''

''அவன் அப்பவே அவங்கப்பாவுக்கு மாற்றல் வந்த தால நார்த் சைட்ல...''

''நான்தான் தெரிஞ்சுக்க விரும்பலேன்னு சொல்றேன்?'' என்றான் அனல் கக்க.

வாயடைத்துப் போனாள்.

''நடந்ததெல்லாம் சரியா, தப்பான்னு பகுத்துப் பார்க்கிற விசாலமான மனசும் எனக்கில்லே. நான் அப்பட்டமா ஏமாத்தப்பட்டிருக்கேன். எனக்குன்னு வாற்வ மனசாலும், உடம்பாலும் சிறு கீறல் கூட இல்லாம இருக்கணும்னு சின்ன வயசிலேர்ந்தே எதிர்பார்ப்பேன், ஆசைப்பட்டேன். உன் கடந்த கால வாழ்க்கையை என்னால ஜீரணிக்க முடியவில்லை. நீ அப்பவே சொல்லியிருந்தா நம்ம கல்யாணமே நடந்திருக்காது. ஆனா, கல்யாணத்துக்குப் பிறகு தெரிஞ்சதால...''

''.....?!''

"நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாழ முடியாது!"

"எ... என்ன சொல்றீங்க?" சத்யாவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

"நாம பிரியறதைத் தவிர வேறு எந்த முடிவும் எடுக்க முடியாது."

"ஐயோ... பேசறது நீங்கதானா? அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காதீங்க. எ... என்னால முடியாதுங்க!" அழுதாள்.

"என்னால முடியும்!" என்றான் அழுத்தமாக.

"நான் மறைச்சது தப்புதாங்க. அதுக்காக வேற என்ன தண்டனை வேணும்னாலும் குடுங்க. என்னை கை விட்டுடாதீங்க!"

"நீ வேற ஒருத்தனை காதலிச்சதையே தப்புங்கறேன். மறைக்காம சொல்லியிருந்தாலும் கல்யாணம், அது இதுன்னு எங்கம்மா மனசை கஷ்டப்படுத்தாம இருந்திருப்பேன். என்னை விட்ரு சத்யா! இங்கே இருந்து மேலும் என்னை அசிங்கப்படுத்தாதே!"

வார்த்தைகளால் அசிங்கப்படுத்தினான்.

"என்ன நடக்கிறது இங்கே?"

'பதினாறு வயது, வாழ்க்கையை முடிவு செய்கிற வயதா? ஒவ்வொரு பெண்ணின், ஆணின் பள்ளிப் பருவத்திலும் பெரும்பாலும் எட்டிப் பார்க்கும் சலனம் தானே இது? ஏன் இவர் கடந்த வாழ்க்கையில் எந்தப் பெண்ணையுமே பார்த்து சலனப்படாமல் இருந்திருப்பாரா? காதலுக்கும், சலனத்துக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறதே! அந்த மகேந்திரன் தப்பானவன் என்று தெரிந்தும் ஒதுங்கி, ஒதுக்கினேனே! அவன் முகம் நினைவுப்

பெட்டகத்திலிருந்து எப்போதோ... அழிந்து போனதே! இவர் எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை தருகிறாரே! என்னால் எப்படி முடியும்? அவரைப் பிரியறதா? நினைக்கும் போதே உயிர் பிரிந்து போய்விடும் போல் இருக்கிறதே!'

அந்த வீட்டில் ஒவ்வொரு விநாடியும் வேண்டாத கசப்புடனும், மவுனத்துடனே இறந்தன. சத்யா அழுதழுது நெஞ்சம் வறண்டு போனாள்.

மைனாவதியோ ஆர்ப்பாட்டமே நடத்திக் கொண்டிருந்தாள்.

நாக்குதான் பெண்ணுக்கு வாள். அது எப்போதும் துருப்பிடிப்பதே இல்லை. மைனாவதி தன் நாக்கால் அவளை சுழற்றி, சுழற்றி அடித்தாள். அவளை கேவலமாய் விமர்சித்தாள். அவள் இருக்கும் வீட்டில் தானிருக்க மாட்டேன் என்று முரண்டு பிடித்தாள்.

அலுவலகம் போனாலும் அதே சிந்தனை. வீட்டிற்கு வரவும் பிடிக்கவில்லை. சத்யா முகம் பார்க்க பிடிக்கவில்லை. அம்மாவின் கத்தல் பிடிக்கவில்லை. பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது.

அம்மா தீவிரமாய் இருந்தாள். தன் வார்த்தைக்கு செவி சாய்க்கவில்லை என்று அவள் வீட்டை விட்டு வெளியேற... அவளைத் தடுப்பதற்குள் தாவு தீர்ந்து போயிற்று. சத்யா எவ்வளவோ மன்றாடியும் அவளை அவளின் பெற்றோரிடம் ஒப்படைக்க அழைத்து வந்தான்.

பெட்டியுடன், முகவாட்டத்துடன் மகளையும், மாப்பிள்ளையையும் பார்த்ததும் ஏதோ பிரச்சனை என்று தான் நினைத்தனர் அவளைப் பெற்றவர்கள்.

"வாங்க மாப்பிள்ளே... தீபன் சேர் எடுத்துப் போடு. மகா... காபி போட்டு எடுத்துட்டு வா!"

"பரவாயில்லைங்க.... காபியெல்லாம் வேண்டாம். உங்க பொண்ணை விட்டுட்டுப் போகத்தான் வந்தேன்!"

"விட்டுட்டா?" குழம்பியவர், நீங்க எங்கேயாவது ஊருக்குப் போறீங்களா மாப்பிள்ளே?"

"இல்லீங்க... இனி உங்க பொண்ணு உங்களோடதான் இருப்பா... நிரந்தரமா!"

"எ... என்ன சொல்றீங்க மாப்பிள்ளை?" தூக்கி வாரிப் போட்டது அங்கிருந்த அனைவருக்கும்.

"தயவு செய்து என்னை மாப்பிள்ளைன்னு கூப்பிட றதை நிறுத்துங்க முதல்ல."

விஷயம் விபரீதமானது என்று புரியவே... அரண்டு போயினர்.

"ஏன்... ஏன் இப்படியெல்லாம்?"

"நான் உங்க தங்கையை டைவர்ஸ் பண்ணப் போகி றேன் மிஸ்டர் தீபன்!"

"என்ன சார் நீங்க பாட்டுக்கு தலையுமில்லாம, வாலு மில்லாம என்னென்னவோ பேசிட்டு இருக்கீங்க? என் னமோ மளிகைக் கடையில சர்க்கரை, ரவை வாங்கிட்டு வேண்டாம்னு திருப்பித் தர்ற மாதிரி சத்யாவை வேண் டாம்னு தள்ளிட்டு போனா என்ன அர்த்தம்?"

"நியாயமான கோபம் மிஸ்டர் தீபன். உங்க தங்கை மலிவான நடத்தை உள்ளவங்கறதால வேண்டாம்ங் கறேன். போதுமா காரணம்?"

"இதோப் பாருங்க... என் தங்கையை அசிங்கமாப் பேசினீங்கன்னா... நான் மனுஷனா இருக்க மாட்டேன்!"

"இந்த கோபத்தையும், அக்கறையையும் அவளை வளர்க்கறதுல காட்டியிருந்தா... இந்த அவமானம் நேர்ந் திருக்காதே தீபன்! இந்தாங்க இதைப் படிச்சுப் பாருங்க... உங்க அன்பு தங்கையோட யோக்யதையை!"

சத்யா கூனிக் குறுகி மகனை இறுக்கி அணைத்துக் கொண்டு கண்ணீர் வகுத்தாள்.

படித்த தீபன் முகம் சிவக்க சத்யாவைப் பார்த்து "த்தூ" என்று காறித் துப்பினான்.

அடுத்தடுத்து கடிதம் கைமாற...

சத்யாவிற்கு எதிரான காட்சிகள் அரங்கேறின.

11

காதல் என்பதையே தீண்டத் தகாத வார்த்தையாக கருதியிருந்த குடும்பம்! மகள் ஒருவனைக் காதலிக்கிறாள் என் பதையே ஏற்றுக் கொள்ள முடியாமல் திணறி, வேறு வழியின்றி, அவர்களின் உறுதியான அன்பிற்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது.

அப்படியிருக்க மகள் அதற்கு முன்பே இன்னொரு காதலில் ஈடுபட்டாள் என்று ஆதாரத்துடன் சொல்லும் போது எப்படி ஜீரணிக்க முடியும்?

சத்யாவின் மேல் கேவலமான பார்வைகள் மொய்த்தன. வெறுத்தன.

"கவுரவமான குடும்பம் எங்களோடது. எல்லாத்தையும் மறைச்சி உங்க பொண்ணு என்னை ஏமாத்திட்டா. ஆனது ஆச்சு... மறந்து மன்னிச்சு ஏத்துக்குங்கன்னு தயவு பண்ணி யாரும் டயலாக் பேசாதீங்க. நான் மகான் அல்ல.

இந்த ஒண்ணரை வருஷம் வாழ்ந்ததையே ரொம்ப அசிங்கமா நினைக்கிறேன். இந்த குழந்தை என்னோட்டது.' அதை உறுதியா சொல்ல முடியும். அதனால என் குழந்தையை என்கிட்ட ஒப்படைச்சிட சொல்லுங்க... உங்க பொண்ணை நீங்களே வச்சுக்குங்க.''

''சார்... உங்களுக்கு வேண்டாம்னா தூக்கி எறிஞ்சிட்டுப் போங்க. அதுக்கேன் எங்க தலைல கட்ட நினைக்கிறீங்க. நாங்களும் கவுரவமான குடும்பத்தைச் சேர்ந்த வங்கதான். தங்கச்சி வாழாவெட்டியா வந்திருக்கா, வரதட்சணை கொடுமையால வந்திருக்கானா அது ஒரு பேரு! ஆனா, கல்யாணத்துக்கு முன்னால வேற ஒருத்தனை லவ் பண்ண காரணத்துக்காக இவளை கொண்டு வந்து விட்றீங்கன்னா... நாங்களும் குடும்பத்தோட தூக்குலதான் தொங்கணும். எனக்கும் ஒரு பெண் குழந்தை இருக்கு. இவளுக்காக என் பொண்ணோட வாழ்க்கையை சீரழிக்க விரும்பலே. எனக்கு ஒரு தங்கச்சி இருந்தா... அவ செத்துப் போயிட்டா! இதோ... அவளைப் பெத்தவங்க... அவங்க அவளை வச்சுக் காப்பாத்திக்கறதாயிருந்தா... தாராளமா தனியாப் போய் வச்சுக்கட்டும். அவங்ககிட்டேயே பேசிக்குங்க சார்!'' என்றான் தீபன்.

''என்ன தீபன் அப்படி சொல்லிட்டே? நாங்க மட்டுமென்ன மானம் போய் வாழறவங்களா? எனக்கு பொண்ணே இல்லே... அவளுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லே... நீங்க அவளை விரட்டுவீங்களோ, வச்சுக்குவீங்களோ, இல்லே எரிப்பீங்களோ... எங்களுக்குத் தெரியாது. தயவு பண்ணி அவளை வெளியே கூட்டிட்டுப் போங்க'' என்றார் வைகுந்தன்.

மகாலட்சுமிதான் அலை பாய்ந்தாள். பெற்ற வயிறு எரிந்தது.

'ஆளாளுக்குப் பேசறாங்களே... என் குழந்தை பேச சந்தர்ப்பம் தராமல்... அவள் மனதில் என்ன இருக்கிறதென்று தெரியாமல் என்ன பேசுகிறார் இவரும்?'

கண்கள் பொங்கின.

''அ...அ...ப்...பா... நீங்களுமா?'' சத்யா நம்ப முடியாத அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''கூப்பிடாதே தாயே... உன் வாயால என்னை அப்படி சொல்லிக் கூப்பிடாதே... நாங்க என் பிள்ளைய நம்பி வாழறவங்க. இங்கே நின்னு அதிலே மண்ணள்ளிப் போட்றாதே... போ!''

சத்யா சிரித்துக் கொண்டாள்.

'பாவம்... இவர்களும் தான் என்ன செய்வார்கள்? தீபனின் நிழலில் வாழ்பவர்கள். என்னால் எதற்கு அதற்கும் கேடு! ஆமாம், நான் என்ன தவறு செய்து விட்டேன் என்று ஆளாளுக்கு என்னைப் பந்தாடுகிறார்கள்?'

''ஒரு நிமிஷம்!'' என்றாள், அது நேரம் வரை கவிழ்ந்திருந்த தலையை உயர்த்தி.

''உங்க எல்லோரையும் புரிஞ்சுக்க கடவுள் எனக்கொரு சந்தர்ப்பம் கொடுத்ததாகவே நினைச்சுக்கறேன். வேற எதையும் பேச விரும்பவில்லை. என்னாலயும் தனியா வாழ முடியும். என் குழந்தையை வளர்த்து ஆளாக்க முடியும். உதவின்னு உங்களைத் தேடி வந்தா செருப்பால அடிங்க!''

''ஹலோ... நீங்க எங்கே வேணும்னாலும் போங்க. என் பிள்ளைய என்கிட்டே கொடுத்துட்டுப் போங்க!''

''பாருங்க மிஸ்டர் ராம்! நான் இன்னமும் உங்களை மதிக்கிறேன். பணம், அழகுன்னு முக்கியத்துவம் தராம

அன்புக்காக கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க. உங்க உயர்ந்த உள்ளத்துக்காக நான் உங்களை குறைத்து பேச விரும்பலே. உங்களுக்கு அபிலாஷ் கிட்டே எந்தளவுக்கு உரிமை இருக்கோ அந்த அளவுக்கு எனக்கும் உரிமை இருக்கு. ஏன்னா, பத்துமாசம் சுமந்து, வலிக்க, வலிக்கப் பெத்தவ நான்! இப்பவும் உங்கம்மா உங்களை உரிமை கொண்டாடலயா? உன்னை விட எனக்கு எங்கம்மாதான் முக்கியம்னு நீங்க என்கிட்ட சொன்னதில்லையா? தொப்புள்கொடி உறவுங்கறது சாதாரணமானதா என்ன? அதனால அபிலாஷ் எப்பவும் என்கிட்டதான் இருப்பான். இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம். அவ மூலமா எத்தனை குழந்தை வேணும்னாலும் பெத்துக்குங்க. ஆனா, எனக்கு இப்பவும் சரி, எப்பவும் சரி... என் பிள்ளை மட்டும் தானே உறவு?''

''நீ என்ன பேசினாலும் சரி. என் பிள்ளை எனக்கு வேணும்!''

''வற்புறுத்தினீங்கன்னா எங்க ரெண்டு பேரையும் உயிரோட பார்க்கமாட்டீங்க.!''

''என்ன மிரட்டறியா? என் குழந்தையை கோர்ட் மூலமாகவே வாங்கிக் கொள்ள எனக்குத் தெரியும்!'' கோபத்துடன் சவால் விட்டு காரில் ஏறிச் சென்றான் ராம்.

தோளில் குழந்தையும், கையில் பெட்டியுமாக பிறந்த வீட்டைக் கூட திரும்பிப் பார்க்க மனமின்றி நடந்தாள் சத்யா!

* * *

தற்காலிகமாக தன் தோழியின் வீட்டில் சில நாட்கள் தங்கினாள். வேலைக்கு மனுப்போட ராமிடமிருந்த தன் டிகிரி சர்ட்டிபிகேட்களை கேட்டாள். அது கிடைத்தால்

வேலைக்குச் சென்று விடுவாளே! அதனால் கண் னெதிரே கிழித்துப் போட்டான்.

அப்ளை பண்ணி டூப்ளிகேட் சர்ட்டிபிகேட் வாங்க பணமோ, அவகாசமோ இல்லாததால், வேறு வேலை தேடத் தொடங்கினாள்.

தோழியின் உறவினர்கள் மூலமாக, வீடு வீடாய் சென்று கணக்கெடுக்கும் மார்க்கெட்டிங் ரெப்ரசென் டேடிவ் வேலை கிடைத்தது. குழந்தையை தோழியின் வீட்டில் விட்டுச் சென்றாள்.

கடினமான உழைப்பு, இயந்திரத்தனமான உலகில், நேரங்களை எண்ணிச் செலவிடும் மனிதர்களில், இப்படி வீடு வீடாய் வரும் ரெப்ரசென்டேடிவ்களை மதித்து பதில் சொல்பவர்கள் எத்தனை பேர்? என்னமோ, வீட்டை நோட்டம் விட்டு கொள்ளையடிக்கவே வருவது போலவே விரட்டுவதும், முகம் சுளிப்பதும்...

அவர்களும் மனிதர்கள்! அதுதான் அவர்கள் தொழில் என்று எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்? கணக் கெடுக்கும வீட்டின் எண்ணிக்கையைக் கொண்டு தானே அவர்களுக்கு கமிஷன் நிர்ணயிக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட அனுபவம் சத்யாவுக்கும் நேர்ந்தது.

'நானும் இதே வேலை பார்ப்பவர்களை மதித்து பதில் சொல்லாமல், பிஸியாய் இருக்கிறேன்' என்று அனுப்பி விடவில்லையா?

அவளுக்கும் அதே மாதிரி பதில்கள் நிறையவே கிடைத்தன.

ஆனால் சோர்ந்து போகவில்லை. குழந்தையின் முகம் நினைவிற்கு வரும். டானிக் பருகியது போல் சுறுசுறுப் பாகி விடுவாள்.

அலைந்தாள், திரிந்தாள். கஷ்டப்பட்டு சம்பாதித்தாள். கண்ணுக்குக் கண்ணான குழந்தையின் முகம் பார்த்து வேதனைகள் மறந்தாள்.

சின்னதாய் தனி வீடு பார்த்தாள்.

தன் தேவைகளை குறைத்தாள்.

வருமானம் வீட்டு வாடகைக்கும், குழந்தையின் பராமரிப்பிற்காகவுமே சரியாக இருந்தது. அவளின் உணவு குறைந்தது. உடல் இளைத்தது.

ஆனாலும் வைராக்கியமாய் உழைத்தாள்.

அலுவலகம் முடிந்ததும் நேரே குழந்தையைப் பார்க்க வந்து விடுவான் ராம். வீட்டிற்குள்ளே வரமாட்டான். வாசலில் தன் காரில் வைத்து மகனிடம் கொஞ்சுவான்.

அவளிடம் விவாகரத்துக் கேட்டும், குழந்தையை ஒப்படைக்க சொல்லியும் கேஸ் போட்டிருந்தான்.

சத்யா தைரியமாய், நம்பிக்கையாய் இருந்தாள். அபிலாஷ் தனக்குத் தான் என்பதில் உறுதியாய் இருந்தாள்.

அவள் வீட்டிற்கு எதிரே காலிமனை இருந்தது. அங்கே அவளையே பார்த்தபடி ஒரு ஆண் நிற்பதை சில நாட்கள் கழித்தே உணர்ந்தாள்.

அவன் தன்னையே பார்ப்பதும், அவள் பார்த்தால் இளிப்பதுமாய்...

நடுங்கினாள்.

பாதுகாப்பில்லாத பெண் என்பதை நோட்டம் விட்டிருந்தவன், ஒரு நாள் வீட்டிற்குள்ளேயே நுழைந்து விட்டான்.

அவனை எதிர்பார்க்காத சத்யா, பயத்தில் மூச்சு விடவும் மறந்தாள்.

12

பயத்தில் காய்ச்சலே வந்து விட்டது சத்யாவுக்கு! நினைத்துப் பார்க்கக் கூட பயந்தாள்.

அன்று உள்ளே நுழைந்த அந்த காலிப்பயலின் பார்வையும், சிரிப்பும்

''ஏய்... ஏய்... யார் நீ? ஏன் உள்ளே வந்தே? வெளியேப் போ!''

''குழந்தைய வச்சுக்கிட்டு தனியா இருக்கேப் போல உன் பேர் என்ன?''

''இப்ப வெளியேப் போகப் போறியா, இல்லே கத்தி ஊரைக் கூட்டவா?''

''எதுக்கு அவசரப்படறே? எல்லாம் ஒரு அட்ஜஸ்ட் மெண்ட் தான். என் பொண்டாட்டியும் ஓடிப் போய்ட்டா. நீ எதுக்கு வேலைக்குப் போய் அல்லாடறே? நான் பார்த்துக்கறேன்.

தினமும் கால வந்துட்டுப் போறானே அவன் யாரு? என்னை மாதிரி ரூட் போடறானா? யாரையோ நம்பி ஏமாந்துட்ட போல? பிள்ளைய குடுத்துட்டு ஓடிப் போய்ட்டானா?''

''ராஸ்கல் உன்னை!'' மூலையில் சார்த்தி வைத்திருந்த துடைப்பத்தை எடுத்தாள்.

''என்னடி பத்தினி வேஷமாப் போடறே? கார் வச்சிருந்தாதான் படுப்பியா? உன்னை அப்புறமாப் பார்த்துக்கறேன். இந்த முரளியப் பகைச்சுக்கின்னா ஒழுங்கா வாழ்ந்துட முடியாதுன்னு கூடிய சீக்கிரம் தெரிஞ்சுக்கவே! நான் யாரு, என் பலம் என்னன்னு தெரியாதுல்ல? காட்டறேன்!''

விருட்டென்று வெளியேறினான்.

அன்று படுத்தவள்தான்! வேலைக்கு போகக் கூட முடியாதளவு காய்ச்சல்!

ஒரு பெண் தனியே சுயபலத்துடன் தலை நிமிர்ந்து வாழவே முடியாதா? ஏன் என்னை நோக்கி இத்தனை அம்புகள்?

இது நாள் வரை ராம் குழந்தையைப் பார்க்க வரும் பொழுது குழந்தையை வாசலில் விட்டு விடுவாள். ராம் தூக்கிக் கொண்டு காருக்குப் போய் விடுவான். இருவரிடமும் எந்தவித பேச்சு வார்த்தையும் இல்லை. கடந்த இரண்டு நாட்களாக அலுவலகத்தில் அதிக பணி காரணமாக குழந்தையைப் பார்க்க ராமினால் வர முடியவில்லை.

அன்று வந்தவன், சத்யாவைப் பார்த்து வியந்தான். என்னவாயிற்று இவளுக்கு? ஏனிப்படி இருக்கிறாள்?

குழந்தையை அவனிடம் கொடுத்தவளின் பார்வை தெரு முனையில் பார்த்துக் கொண்டிருந்த முரளியைப் பார்த்து விட்டது.

உடம்பு தன்னிச்சையாய் நடுங்கியது.

குழந்தையுடன் திரும்பினான் ராம்.

"ஒரு நிமிஷம்!"

".....?"

"உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்."

"ம்..."

"உள்ளே வாங்க..."

"இல்லே இங்கேயே இருக்கிறேன். என்ன விஷயம்?"

"வாசல்ல வச்சு பேசற விஷயமில்லே..."

"நம்ம விஷயம் தெருவுக்கே வந்தாச்சு. வாசல்ல வச்சுப் பேசறது தப்பில்லே..."

"வாசலோட உங்க பயணம் முடிஞ்சுப் போறதாலதான் என்னை தப்பான கோணத்துல பார்க்க வச்சிருக்கு."

ராம் புருவம் உயர்த்தினான்.

"அதோ அங்கே நிக்கறானே அவன் பேரு முரளியாம். திடீர்னு வீட்டுக்குள்ளே நுழைஞ்சிட்டான்" என்றபடி அன்று நடந்தவைகளை கூறினாள். "அதனால நீங்க உள்ளே வந்து உக்கார்ந்துட்டுப் போனா அவனுக்கு ஒரு பயம் வரும்" என்றாள் மிரட்சியுடன்.

"ஸாரி கேஸ் கோர்ட்ல இருக்கிறப்ப நான் வீட்டுக்குள்ளே வர்றது சரியாயிருக்காது!" என்றவன் யோசனையுடன் காருக்குப் போனான்.

சத்யா அவன் முதுகையே வெறித்துப் பார்த்தாள்.

* * *

விவாகரத்து வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது. வக்கீல் வைத்துக் கொள்ள சத்யாவுக்கு வழியில்லை. அவளே வாதாடினாள்.

எதிர்க்கட்சி வக்கீல் கேட்ட கேள்விகளுக்கு உண்மையை மட்டும் பதிலாகத் தந்தாள்.

"திருமணத்திற்கு முன்பு மகேந்திரன் என்பவருடன் உங்களுக்கு காதல் இருந்ததா?"

"ஆ...ஆமாம்... ஆனால், அது."

"கேட்டதற்கு மட்டும் பதில் தந்தால் போதும். விளக்கம் வேண்டாம்."

"....."?

"குழந்தையுடன் தற்கொலை செய்து கொள்வேன் என்று எனது கட்சிக்காரரிடம் மிரட்டினீர்களா?"

"ஆ..... ஆமாம்.!"

"இப்போது நீங்கள் பார்க்கும் வேலையில் கிடைக்கும் சம்பளம் குழந்தைக்கும், உங்களுக்கும் போதுமானதாக உள்ளதா?"

"இ..... இல்லை!"

"அப்படியானால் குழந்தையை இனி வரும் காலத்தில் எப்படி படிக்க வைத்து ஆளாக்கப் போகிறீர்கள்?"

"என்னால் முடியும். என் பிள்ளைக்காக பிச்சைக் கூட எடுப்பேன்!"

"முரளி என்பவரை உங்களுக்குத் தெரியுமா?"

"அவர் யாரென்றுத் தெரியாது. ஆனால் ஒரு நாள் என் வீட்டுக்குள்..."

"தெரியுமா, தெரியாதா? அதற்கு மட்டும் பதில் கூறுங்கள்."

"தெ...ரி....யு...ம்!"

"எத்தனை வருடங்களாக?"

"வருடங்கள் அல்ல. மாதங்களாக...!"

"அதாவது, நீங்களும், உங்கள் கணவரும் பிரிந்த பிறகு. கடந்த ஒன்பது மாதங்களாக..."

"ஆமாம்!"

"முரளி உங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறாரா?"

"வந்திருக்கிறார்!"

'தட்ஸால் யுவர் ஆனர். மிஸஸ் சத்யா நல்ல குடும் பத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால்! நல்ல நடத்தைக்

கொண்டவர் அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. இல்லாவிட்டால், பெற்றவர்களும், சகோதரரும் கூட ஏன் அவருடன் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை.

அவர் ஒரு நல்ல மனைவியாகவோ, நல்ல மருமகளாகவோ என்றுமே நடந்து கொண்டதில்லை. சட்டென்று உணர்ச்சி வசப்படக் கூடிய இவரால் குழந்தை அபிலாஷிற்கு ஆபத்து காத்திருக்கிறது.

அவர் வாழும் வாழ்க்கையும், வீட்டிற்கு வந்து செல்லும் தொடர்புகளும், அபிலாஷ் வாழ தகுதியுடையதல்ல. குழந்தையின் எதிர்காலம் கருதி, அவனை அவனுடைய தகப்பனார் மிஸ்டர் ராமிடம் ஒப்படைக்கும்படியும், அவர் மனைவியிடமிருந்து விவாகரத்தும் கிடைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் யுவர் ஆனர்!"

திறமையாக வாதாடினார் வக்கில் இளங்கோவன்.

சத்யா மிரள மிரள விழித்தாள்.

அதெப்படி இங்கேக் கூட பொய் பேசுகிறார்கள்?

பாவம் அவளுக்குத் தெரியவில்லை. வக்கீல் பொய்யைத் தவிர வேறெதையும் பேசுவதில்லை என்று.

தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

'எனக்கும், முரளிக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாக அந்த வக்கீல் சொன்னானே அதைக் கேட்டுக் கொண்டு ராம் சும்மாதானே இருந்தார்? அவரிடமே அவனைப் பற்றி சொல்லி இருக்கிறேனே! ஏனிப்படி எல்லாருமே என் நடத்தை மீது கரிப்பூசுகிறார்கள்.

அபி... அபிக்கண்ணா! நீ சொல்லுடா... அம்மா தப்பானவளா? ம்! உன்னை என்கிட்டேர்ந்து பிரிக்க என்னை என்னென்னவோ பேசறாங்கடா. நீ அம்மாவை விட்டுப்

போய்டமாட்டியே உனக்காகத்தான்டா உயிரை சுமந்துக்கிட்டிருக்கேன். நீயும் என்னை விட்டுப் போய்டாதடா!'

''ம்... ம்மா...!'' மழலை மொழியுடன் அம்மாவின் நெஞ்சில் சாய்ந்து கொண்டான் அபிலாஷ்.

* * *

ஆனால், தீர்ப்பு?

சத்யாவுக்கு எதிராகவே அமைந்தது.

அவளுக்கும், ராமிற்கும் விவாகரத்து வழங்கியதோடு, குழந்தையின் எதிர்கால நலன் கருதி, தந்தையிடம் ஒப்படைக்கும்படியும், வாரத்தில் ஞாயிறு பகல் முதல் மாலை வரை சத்யா குழந்தையைப் பார்க்கலாம் என்றும் ஒரு தாயின் வேதனை மீது அம்பெய்தி துடிதுடிக்க வைத்து தீர்ப்பை எழுதினார் நீதிபதி.

இடிந்துப் போன சத்யா.... குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள்.

"இல்லே, நான் என் குழந்தைய தர மாட்டேன். நான் தரமாட்டேன். என்னய்யா தீர்ப்பெழுதறீங்க? உங்களுக்கு பிள்ளைக்குட்டி கிடையாதா? என் பிள்ளை எனக்குத்தான். என்கிட்டேர்ந்து அபியை பிரிச்சிடாதீங்க. நான் தரமாட்டேன்.!''

13

வெறி பிடித்தவள் போல் கத்திக் கொண்டு, குழந்தையுடன் ஒரே ஓட்டமாய் வெளியே ஓடினாள்.

அமர்ந்திருந்த மைனாவதி நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டு மகனின் கையை இறுகப் பற்றினாள் நன்றியுணர்வுடன்.

''என் மகனை என்கிட்டேர்ந்து பறிக்கப் பார்த்தே யில்லை. இப்போ பார்த்தியா உன் பிள்ளையை நான் பறிச்சுக்கிட்டேன்'' என்று வெற்றி மமதையுடன் கறுவிக் கொண்டிருந்தாள்.

நீதிபதி மணவிலக்களிக்கிறேன் என்றதும் சொல்ல வொணா வேதனை எழுந்தது ராமிற்கு.

அவன் சத்யாவை உயிருக்குயிராய் நேசித்தது நிஜம். அதனால்தான் இந்த நிரந்தரப் பிரிவு அவன் நெஞ்சில் ரத்தம் வடிய வைத்தது.

ஒருவேளை அம்மா அந்த விஷயத்தை பெரிதாக் காமல் இருந்திருந்தால், அவனும் கோபத்தோடு அவளை மன்னித்து விட்டிருப்பான். அம்மாவோ அவளை வெளியே அனுப்பியே ஆக வேண்டும் என்று ஆர்ப்பாட்டமே பண்ணி விட்டாள். அம்மாவை மீறி அவனால் எதையும் செய்ய முடியாது.

அன்று கூட அவளை அவள் வீட்டில் ஒப்படைக்கச் சென்ற போது ஆளாளுக்கு சத்யாவை கேவலமாய் பேசி வதைத்த போது ரத்தம் கொதிக்கத்தான் செய்தது.

தனியே குழந்தையுடன் அவஸ்தைப்படும் போது, அதை ஒரு வாய்ப்பாக கருதி முரளி வீட்டிற்குள் நுழைந்ததை ஒரு குழந்தையைப் போல் பரிதவிப்புடன் சொன்ன போது அந்த முரளியை எலும்புகள் நொறுங்க அடிக்கத் துடித்த உத்வேகத்தை அடக்கிக் கொண்டான்.

ஆனால், உள்ளிருந்த மிருக குணம், தன் தாயை சந்தோஷப்படுத்த, தன் குழந்தையை அவள் கையில் ஒப்படைக்க தாலி கட்டிய மனைவியின் நடத்தையை கோர்ட்டில் ஏற்றி இழிவுபடுத்தி விட்டான்.

இந்த பாவத்தை எந்த கோர்ட்டில் போய் கழுவுவான்?

இதோ இப்போதும் கூட தனக்கெதிரான தீர்ப்பிற்கு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி குழந்தையுடன் ஓடிய வளை மனம் வதைக்கப் பார்த்தான்.

உண்மையில் பெற்றவள் அவளுக்கல்லவா எல்லா உரிமையும் இருக்கிறது?

"ஐய்யோ ராம், அவ என் பேரனைத் தூக்கிட்டு ஓடறா. பார்த்துக்கிட்டு சும்மாவே உட்கார்ந்திருக்கியே போ என் பேரனை தூக்கிட்டு வா!".

'பேரனுக்காக உனக்கே பதைக்கும் போது, பெத்தவ ளாச்சேம்மா! அவ உயிரையே நாம பறிக்கும் போது சும்மாவா இருப்பாள்?' அம்மாவை ஏறிடவே விரும்பாமல் மெல்ல எழுந்தான்.

அதற்குள் இரண்டு பெண் போலீசார், நீதிபதியின் உத்தரவின்படி விரட்டிச் சென்று, அடித்து குழந்தையை மீட்டனர்.

அவளை இழுத்துக் கொண்டு வந்தனர்.

"அபி, என் அபி, என் அபியக் குடுத்துடுங்க. என் பிள்ளைய என்கிட்ட குடுத்துடுங்க" கதறி அழுதாள்.

கண் கொண்டு பார்க்க முடியாத ராம் முகத்தை திருப்பிக் கொண்டான்.

ராமிடம் குழந்தையைத் தர, அவன் அம்மாவிடம் தந் தான்.

மைனாவதி பேரனை மார்போடணைத்து உச்சி முகர்ந் தாள்.

"என்னங்க என்னங்க!" ராமின் காலை வந்து கட்டிக் கொண்டாள்.

"நான் என்னங்க தப்பு பண்ணினேன்? உங்க மனசைத் தொட்டுச் சொல்லுங்க... நான் தப்பானவளா? உங்களை உண்மையா நேசிச்சதுக்கு எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? அப்பா, அம்மா, அண்ணன் இப்ப என் பிள்ளைன்னு எல்லாரையும் என்கிட்டேர்ந்து பறிச்சிட்டீங் களே! எனக்கு எதுவும் வேணாம். என் பிள்ளைய மட்டும் குடுத்துடுங்க! எல்லாத்திலேயும் பெரிய சோகம் புத்திர சோகம்னு உங்களுக்குத் தெரியாதா? அபி இல்லாம என்னால எப்படி வாழ முடியும்?... நீங்களே சொல்லுங்க!" முகத்தில் அறைந்துக் கொண்டு அழுதாள்.

"ராம் புறப்படு!" அம்மா அதட்டலாய் உத்தரவிட, கட்டுப்பட்டவன் வேகமாய் வெளியேறினான்.

பெண் போலீசார் அவளை பிடித்துக் கொள்ள, அவள் கதரக் கதற வெளியேறினர்.

காரில் குழந்தையுடன் அமர்ந்தனர். அபிலாஷ் அம் மாவைத் தேடி உதடு பிதுக்கி அழுதான்.

கார் புறப்பட்டது.

ஒரு தாயின் பாசத்திற்கு முன், பலத்திற்கு முன் போலீ சார் எம்மாத்திரம்? அவர்களிடமிருந்து தன்னை விடு வித்துக் கொண்டு காரின் பின்வேகமாய் ஓடினாள்.

"அபீ..."

கார் வேகமெடுத்தது.

"அபீ..." மிக வேகமாய் ஓடினாள்.

அவள் பின்னே போலீசாரும்.

"ராம் வேகமாப் போ!"

மெல்ல திரும்பிப் பார்த்த ராமிற்கு பக்கென்றது.

ஒரு குதிரையின் பாய்ச்சலோடு ஓடி வந்து கொண்டிருந்தாள் சத்யா. சற்று தூரத்தில் கீழே பெரிய சிமெண்ட் கல் இருப்பதைப் பார்க்காத நேர்ப்பார்வை!

''ஐய்யோ...'' அவன் நடக்கப் போகும் விபரீதம் உணர்ந்து அலற அந்த விபரீதம் நடந்தே விட்டது.

படு வேகத்தோடு ஓடி வந்த சத்யா அந்தக் கல்லில் தடுக்கி விழுந்து தலையில் பலமாய் அடிபட ரத்தம் குபு... குபுவென்று பொங்கியது.

அவன் காரை நிறுத்தி இறங்கி வருவதற்குள்... ஆழ்ந்த மயக்கத்திற்குப் போயிருந்தாள்.

''ராம் நீ காரை எடு!'' என்ற அம்மாவின் வார்த்தையை அலட்சியப்படுத்தினான்.

போலீசார் உடனடியாக சத்யாவை ஹாஸ்பிடலுக்கு கொண்டு சென்றனர். அதன் பின் நடந்ததெல்லாம் ஒரு பெண்ணுக்கு நேரக் கூடாதவை.

பலமாய் தலையில் அடிபட்டதில் சித்தம் கலங்கிப் போனாள். சேலத்திலிருந்த மனநல மையத்திற்கு அனுப்பப்பட்டாள்.

* * *

வீட்டிற்கு வந்திருந்த ஹரி ஆயாசத்துடன் கண்களை மூடி சோபாவில் அமர்ந்திருந்தான்.

வற்புறுத்திய பின் சில வார்த்தைகள் சத்யாவிடமிருந்து உதிர்ந்தன.

''சேலத்திலேர்ந்து எப்ப வந்தே சத்யா?''

''ரெண்டு மாசமாச்சு! குணமாய்ட்டதால... இங்கே ஒரு சேவை மையத்தில் வேலை போட்டுக் கொடுத்து, அங்கேயே தங்க இடமும் கொடுத்திருக்காங்க.!''

''அபிலாஷை எப்படிக் கண்டுபிடிச்சே?''

''வீடு மாறிட்டதாலே சிரமப்பட்டே கண்டுபிடிச்சேன். உங்க வீட்டுப் பக்கம் சுத்தினேன். அபியை ஸ்கூலுக்கு அழைச்சிட்டுப் போறப்ப காரில் பார்த்திருக்கேன்!'' சொல்லும் போதே, வலியை மீறி கண்களில் மின்னலடித்தது.

கண்களைத் திறந்தவனின் நேரெதிரே பிரம்மாண்ட சைஸில் மாலை போடப்பட்டிருந்த போட்டோவுக்குள் அடைபட்டிருந்த மைனாவதி.

''சார் கொரியர்!''

வாசலில் குரல் கேட்டு நிமிர்ந்தான். ஹேமாவும் அறைக்குள்ளிருந்து நேரே வாசலை நோக்கிச் சென்றாள்.

''ஹரிராம்ங்கறது...''

''என் ஹஸ்பண்ட் தான்!'' கையெழுத்துப் போட்டு கவரை வாங்கினாள்.

''உங்க பேரு மேடம்!''

''ஹேமா!''

போய்விட்டான்.

கவரோடு உள்ளே வந்தவள் ஹரி... என்கிற ஹரிராமிடம் கொடுத்து விட்டு பக்கத்திலேயே அமர்ந்தாள்.

ஹரி சலனமின்றி அவளை திரும்பிப் பார்த்தான். வறட்டுக் கோபம் காணாமல் போய் அந்த பளிங்கு முகத்தில் செல்லமான நேசம் படர்ந்திருந்தது.

வங்கி கணக்கு சம்பந்தப்பட்ட கடிதம் தான்! படித்து விட்டு டேபிள் மீது வைத்தான்.

ஹேமா அவன் தலையைக் கோதி விட்டாள்.

''ரொம்ப டல்லா தெரியறீங்க... சாப்பிட வாங்க!''

"பசிக்கலே ஹேமா!"

"ப்ச்... என் மேல உள்ள கோபத்தை சாப்பாட்ல காட்ட வேண்டாம். என் பிள்ளை விஷயத்தில அவசரப்பட்டு முடிவெடுத்திட்டீங்கன்ற கோபம். யோசிச்சுப் பார்த்தேன். உங்க பிஸினஸ் டென்ஷன்ல போலீஸ் ஸ்டேஷன் கேசுன்னு அலைய முடியாது. அதை மனசுல வச்சுதான் அவளை விட்டுட்டீங்கன்னு புரிஞ்சுது. ஸாரிங்க!"

மனம் லேசாக... அவள் கையைப் பற்றினான்.

"கோபம்லாம் ஒண்ணுமில்லே ஹேமா... பசிக்கலே! பட், உனக்காக சாப்பிடறேன்... கொஞ்சமா!"

"வாங்க!" சிறு பெண் போல் துள்ளி எழுந்தாள்.

பேருக்கு கொஞ்சமாய் கொறித்து விட்டு படுக்கைக் குப் போனான்.

திருமணமான புதிதில் அவனும், சத்யாவும் அந்த செளடேஸ்வரி அம்மன் கோவிலுக்குத் தான் சென்றார்கள்.

'அதனால் தான்... அவளும் என்னைப் போலவே அங்கு சென்றாளோ?'

ஹேமா அவன் கழுத்தில் முகம் புதைத்து கிச்சு கிச்சு மூட்டினாள்.

"சாருக்கு என்ன ஞாபகமோ?" சொல்லிக் கொண்டே கன்னத்தைக் கடித்தாள்.

சத்யா கடித்தது நினைவிற்கு வந்தது.

அவனால் ஈடுபாட்டுடன் ஹேமாவைப் பார்க்க முடிய வில்லை.

"ஸாரி ஹேமா... டிஸ்டர்ப்டாயிருக்கேன். பிஸினஸ் டென்ஷன்... தலை வலிக்குது!" நாசூக்காய் தவிர்த்தான்.

"ஸாரி டியர்... தூங்குங்க!" அவனை தட்டிக் கொடுத்து விட்டு விலகிப் படுத்தாள்.

14

ஹேமா, அபிலாஷை நடுவில் போட்டு தானும் உறங்கி விட்டாள். அவனுக்குத்தான். உறக்கம் வர முரண்டு பண்ணியது.

ஹேமாவை திருமணம் செய்தது கூட அம்மாவின் வற்புறுத்தலாலும், உண்ணாவிரதமிருந்து பிடிவாதம் பிடித்ததாலும்தான்! ஹேமா மைனாவதியின் ஒன்று விட்ட அண்ணன் மகள் தான்.

ஏற்கனவே திருமணமாகி ஒரே வாரத்தில் கணவனை பறிகொடுத்திருந்த இளம்விதவை. அந்தஸ்தில் இவர் களை விட பல மடங்கு.

அம்மாவை ஆச்சர்யம் தாங்கிய வினாவுடன் பார்த்தான். அதன் பொருளைப் புரிந்து கொண்டவள், "என்னடா, அம்மா ஏற்கனவே கல்யாணமான பொண்ணாப் பார்க் கிறாளே. அந்த சத்யாவை ஏற்கனவே ஒருத்தனை காதலிச் சாங்கிற காரணத்துக்காக வீட்டை விட்டு விரட்டி னாளேன்னு பார்க்கறியா ராம்? ஹேமாவும், சத்யாவும் ஒண்ணாகிட முடியுமா? சத்யா உன்னை ஏமாத்தி கல் யாணம் பண்ணிக்கிட்டவ. ஹேமா அவளை மாதிரி கீழ் ஜாதியில்லே. நம்ம உறவுக்காரி, ரதி மாதிரி அழகி, பணக் காரி. அவளுக்கே கல்யாணமாகாத வரன்கள் நிறையவே வந்திருக்கு. ஆனா, அவதான் கல்யாணமான ஆளாப் பாருங்கன்னு சொல்லியிருக்கா. சொல்லப்போனா...

முன்னாடியே உனக்கு பொண்ணு தர விருப்பப்பட்டு அண்ணனும், அண்ணியும் என்னைக் கேட்டாங்க. நீதான் பிடிவாதமா அந்த நாதாரி நாயை கல்யாணம் பண்ணிப் பேன்னு ஒத்தைக் கால்ல நின்னியே! அதுக்கப்புறம் உனக்கும் சரி, அவளுக்கும் சரி, முதக் கல்யாணம் நிக்கல. அவளுக்கு நீதான்னு எழுதியிருக்கறதை யாராலை அழிச்சி எழுத முடியும்? உன்னை அவளுக்கு ரொம்ப பிடிக்குமாம் ராம். அதனால்தான் குழந்தை போல இருக்கிற உன்னை கல்யாணம் பண்ணிக்க உடனே சம்மதிச்சிட்டா!'' என்று அவனுக்கு வாகாய் பதில் சொல்லி வாயை அடைத்தாள் மைனாவதி.

சும்மா சொல்லக் கூடாது. ஹேமா நல்லவள் தான். குழந்தை அபிலாஷை ரொம்ப பிடித்துப் போக தன் பிள்ளையாகவே பாவித்ததோடு, தானொன்று பெற்றுக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாய், பாதுகாப்பாய் இருந்தாள்.

அவனையும், அபிலாஷையும் ஏற்றுக் கொண்டவளால் மைனாவதியை, அவளின் தெனாவட்டு பேச்சை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பேச்சு வாக்கில் இறந்து போன முதல் கணவனைப் பற்றி கிண்டலாய் பேசும் அநாகரிகத்தை கற்று வைத்திருந்தாள். ஹேமா வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்பதால், கணவனையும், அபிலாஷையும் கவனித்துக் கொள்வதைத் தவிர வேறெந்த வேலையையும் செய்வதில்லை. மைனாவதியைக் கண்டு ஒதுங்கிப் போனாள். ஆனால், சத்யா... மாமியாருடன் எவ்வளவு தான் மனஸ்தாபம் என்றாலும்... அவளுக்குத் தேவையானதை குறித்த நேரத்தில் சரியாக செய்து விடுவாள்.

வீட்டிலேயே ஜிம் இருந்ததால் காலை, மாலை இரு வேளையும் ட்ரெட் மில்லில் ஓடுவது, இன்ன பிற உடற்பயிற்சிகள் செய்வது என்று உடம்பை கட்டுக் கோப்பாக வைத்திருந்தாள் ஹேமா.

பழங்காலத்து மனுஷியான மைனாவதிக்கு இதெல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

''என்ன ராம்... இவ இப்படியெல்லாம் நடந்துக்கறா... என்னை மதிக்க மாட்டேங்கறா, குடிக்க தண்ணி கேட்டாக்கூட காதிலே விழாத மாதிரி போகிறா.''

''என்னைக் கேட்டா? உங்க அண்ணன் பொண்ணு இப்படி அப்படின்னு நீதானே சர்ட்டிபிகேட் குடுத்தே... நீயே கேள்!''

''என்ன குத்திக் காட்டறியா?''

''இல்லேம்மா... இதுவரைக்கும் என்ன சொன்னியோ அதைத்தானே கேட்டு நடக்கிறேன். அபிலாஷ் உனக்கே வேணும்னு கேட்டே. போடக்கூடாத பழியைப் போட்டு சத்யாவை அசிங்கப்படுத்தி மென்டல் ஹாஸ்பிடலுக்கே அனுப்பி பிள்ளைய உன்கிட்டே ஒப்படைக்கலியா? உனக்காக என்னதான் செய்யலே? கல்யாணமே வேண்டாம்னு மறுத்தவனை அடம் பிடிச்சு நீதானம்மா அவளை மருமகளா கொண்டு வந்தே? இதிலே குத்திக்காட்ட என்ன இருக்கு? நான் ஒரு தலையாட்டி பொம்மைதானம்மா!''

குழந்தையக் கூட என்கிட்ட விடமாட்டேங்கறா, அவளே வச்சுக்கறா!''

''உனக்கே இவ்ளோ கஷ்டமாயிருக்கேம்மா... பெத்தவளுக்கு எப்படியிருக்கும்? துடிக்க வச்சு தூக்கிட்டு வந்தோமே!''

"ராம்...!"

".....?!"

"நீ இன்னும் அவளையே நினைச்சிட்டிருக்கியா?"

லேசாய் கோபம் எட்டிப் பார்க்க, வியப்பு மேலிடக் கேட்டாள்.

"எவ்வளவு மோசமான கேள்விம்மா! நான் சத்யா மேல வச்ச அன்பைக் கூட மறந்திடலாம். ஆனா, அவளுக்குப் பண்ணின பாவத்தை எப்படி மறப்பேன்? சத்யாவுக்கு துரோகம் பண்ணிட்டேன்ம்மா. பெரிய தப்புப் பண்ணிட்டேன். உன் பேச்சை நான் கேட்டிருக்கக் கூடாது. என்னையே நம்பி வந்தவளை மென்ட்டல் ஹாஸ்பிட லுக்கு அனுப்பி வச்சேன். அவ பிரச்சனைகளை எனக்கு சாதகமாக்கி, நானே அவளை முரளியோட சம்பந்தப் படுத்தி அசிங்கப்படுத்திட்டேன். என் அறிவுக்கு புரிஞ் சுதும்மா.... பழைய காதல் விஷயமெல்லாம் தப்பா எடுத் துக்கற அளவுக்கு சத்யா தப்பானவ இல்லேன்னு. ஆனா மனசு முரண்டு பண்ணுச்சு. ஈகோ தடுத்துச்சு. ஒருவேளை நீ அவளுக்கு சாதகமாப் பேசியிருந்தா... அவளை ரெண்டு திட்டு திட்டி விட்டிருப்பேன். என்னை விட அதிகமா முரண்டு பிடிச்சதே நீதானே!"

"ராம்... நீயா பேசறே? அம்மா உன் நல்லதுக்கு தானே செஞ்சேன்?"

"நிம்மதியில்லாம தவிக்கிறேனம்மா! அப்பா உன்னை நடுத்தெருவிலே விட்டிருந்தா... புழு மாதிரி துடிச்சிருக்க மாட்டே! என்னை மட்டும் ஏம்மா அப்படியொரு பாவத்தைப் பண்ண வச்சே? உன்னை மாதிரி அவளும் பொண்ணு தானே? என் சத்யாவை என்கிட்டேர்ந்து பிரிச்சிட்டி யேம்மா!" பொருமினான், கலங்கினான்.

இது மாதிரியெல்லாம் ராம் பேசி கேட்டறியாத மைனா வதி உடைந்து போனாள்.

அந்தக் கவலை அவளை ரொம்ப நாள் விட்டு வைக்க வில்லை. ஒரு நாள் உறக்கத்திலேயே அவள் உயிர் பிரிந்தது.

ஹரிராம் தன்னை நம்பி வந்த ஹேமாவுக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. குழந்தையை அவள் குறை யின்றி கவனித்துக் கொண்டதால் முழு கவனத்தையும் பிஸினஸில் செலுத்தினான். லாபம் கொட்டியது. தொழிலை விரிவு படுத்தினான். நகரின் முக்கியஸ்தர் களில் ஒருவரானான்.

ராம், சத்யாவுடனான தன் திருமண ஆல்பத்தை பீரோவில் பூட்டி வைத்திருந்தான்.

ஹேமா பலமுறை மெல்ல சத்யா பேச்சை எடுப்ப துண்டு.

ராம் பதில் கூறாமல் பேச்சை மாற்றுவான்.

ஒருநாள் எப்படியோ சாவி கிடைத்து, பீரோவை திறந்து ஆல்பத்தை எடுத்துவிட்டாள்.

"ஏங்க... நான் எத்தனை முறை கேட்டிருப்பேன். கல்யாண ஆல்பத்தைக் காட்டுங்கன்னு. இல்லே... எப் படியோ மிஸ்ஸாயிடுச்சுன்னு சொன்னீங்க. ரொம்ப பத் திரமா வச்சிருக்கீங்க" என்றாள் அவன் கண்களில் தவறை ஆழமாய் தேடியபடி.

"ஏன் எடுத்தே ஹேமா... என் பர்மிஷன் இல்லாம!"

"உங்க பர்மிஷன் எனக்கெதுக்கு? ஐம் யுவர் பெட்டர் ஹாப்! பத்திரமா ஒளிச்சு வச்சிருக்கீங்க."

"சரி... என்ன இப்ப?"

''எவ்ளோ சாதாரணமா கேக்கறீங்க. உங்களுக்கும் அவளுக்கும் டைவர்ஸ் ஆயாச்சு. அவ சம்பந்தப்பட்ட எந்தப் பொருளும்... ஐ மீன் அவளுடைய நினைவுகள் கூட உங்க கிட்டே இருக்கக் கூடாது. நீங்க எனக்கு மட்டும் தான் சொந்தம்.''

''.....?!''

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? நான் ரொம்ப பொஸசிவ் கேரக்டர்.''

''அபிலாஷ்... சத்யாவை நினைவுபடுத்தலையா ஹேமா?''

''இல்லே... அவன் உங்க பிள்ளை, உங்க ஜீன், உங்க ரத்தம், அவள் வாடகைத் தாய் மாதிரி... அவ்வளவுதான்!''

''.....?!''

''ஆச்சர்யமாயிருக்கு. அவளை விழுந்து, விழுந்து காதலிச்சி, பிடிவாதம் பிடிச்சி கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களாம். அப்படி என்ன இருக்கு அவகிட்டே? அட்ராக்ட் பண்ற அளவுக்கு அந்த பைத்தியம் கிட்டே ஒண்ணுமே இல்லையே!''

''ஹேமா... திஸ் இஸ் த லிமிட்ஸ்! சத்யாவைப் பத்தி மட்டமாப் பேசறதை என்னால் அனுமதிக்க முடியாது''

''நீங்க யாரு அனுமதிக்கறதுக்கு? அதான் கோர்ட்டே பிரிச்சு வச்சிடுச்சே! சொல்லப் போனா, ஒரு மென்ட்டலப் பத்தி பேசறதுக்கு நான்தான் யோசிக்கணும். அவ இருந்த இடத்துல தான் இப்ப நான் இருக்கேன்றதே... ஜீரணிக்க முடியாத விஷயம்!''

திமிரும், கர்வமும் போட்டி போட பேசியவளை அடிக்கத் துடிக்க உணர்வுகளை அபிலாஷை நினைத்து

தன்னை அடக்கிக் கொண்டவன்... அதே வேகத்தோடு வெளியேறினான்.

15

அன்று அவன் திரும்பி வந்த போது ஆல்பத்தை எரித்து வைத்திருந்தாள் ஹேமா. அவளின் முரட்டுத்தனம் கண்டு வாயடைத்துப் போனான். எச் சரிக்கையாக இருந்தான். தப்பித் தவறிக் கூட சத்யாவின் பெயரை உச்சரிக்க வில்லை.

அன்று முதல் இன்று வரை அவன் கவனமாகவே இருந்தான்.

கஸ்தூரிபாய் சேவை மையம்!

முதியோர்கள், குழந்தைகள், பெண்கள் என்று கை விடப்பட்டிருந்த அத்தனை ஜீவன்களும் அடைக்கல மாகியிருந்த நந்தவனம் அது!

வார்த்தை ஜாலத்திற்காக அல்ல... நிஜமாகவே நந்தவனம்தான் அது!

உண்மையான தொண்டுள்ளம் கொண்ட சிலரால் நடத்தப்படுகிறது. வெளிநாட்டு வாழ் இந்தியரால் தயாள கொடையளிக்கப்பட்டு ஊர் ஊராய் கிளை நிறுவனங்கள் நிறுவப்பட்டு சேவை செய்து வருகின்றனர்.

மரங்களும், செடிகளும் சூழ்ந்த, கட்டிடங்கள். தரமான உணவு, ஆரோக்கியமான சூழ்நிலை, கைத்தொழில் கற்றுத்தருதல், கல்வியுடன் கம்ப்யூட்டர் பயிற்சி என்று நல்ல பெயருடன் திகழ்ந்து வருகிறது கஸ்தூரிபாய் சேவை மையம்!

கடந்த இருபது நாட்களாக வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அந்நிறுவனத் தலைவர் லலிதா முதல் நாள் இரவு தான் ஊர் திரும்பி இருந்தார்.

நிறுவனத்தை வலம் வந்து, அங்கிருப்பவர்களுடன் உரையாடிவிட்டு தன் அறையில் வந்தமர்ந்தவர் அப்போது தான் உணர்ந்தார்.

'சத்யாவை, எங்கே காணோம்? கண்ணிலேயே பட வில்லையே!'

அடுத்த நிமிடமே அவளிருந்த இடம் தேடி ஆள் போனது.

தயங்கித் தயங்கி தான் அறைக்குள் நுழைந்தாள். அவளைப் பார்த்த லலிதாம்மா துள்ளாத குறையாக அதிர்ந்தாள்.

''சத்யா... என்னாச்சு... முகம், உடம்பெல்லாம் என்ன காயம்?''

''அ... அது... வந்து... கீழே விழுந்துட்டேன்!'' அவள் கண்களை நேரேப் பார்க்க தைரியமின்றி தலை கவிழ்ந்தாள்.

''கீழே விழுந்து அடிபட்ட மாதிரித் தெரியலியே... யாரோ அடிச்சமாதிரியில்லே இருக்கு?''

''இ... இல்லே... ம்மா... ஆமாம்மா!'' ஒரு நிமிடத்திற்கு கூட அவளால் பொய்யைக் காப்பாற்ற முடியவில்லை.

எழுபது வயது லலிதாம்மா அவளருகில் வந்து, தவிப்புடன் கையைப் பற்றினாள்.

''யாரு... யாரது உன்னை அடிச்சது?''

''போ... போலீஸ்?''

''போலீஸ்? ஏன்?'' வியப்பின் எல்லைக்கே போனார்.

சத்யா... பயத்துடன், அழுகையுடன், வலியுடன் விவரித்தாள்.

லலிதாம்மா அவளைப் பற்றிய முழு விபரமும் அறிந்தவர். சேலத்தில் தன் மனநல காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த சத்யாவை அங்கு சென்றிருந்த போது குணமாகாத நிலையில் இருந்தவளை பார்த்து நெகிழ்ந்தார். தீவிர சிகிச்சைக்குப் பின் குணமானவளை தன் கண்காணிப்பில் வைத்துக் கொள்ள விரும்பி சென்னைக்கே அழைத்து வந்து விட்டார்.

தினசரி உணவு தயாரிப்பிற்கான காய்கறி, அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட கணக்கு வழக்குகளை பார்க்கும் வேலையை அவளிடம் ஒப்படைத்து, ஒரு சிறு தொகையை சம்பளமாக தந்து அங்கேயே தங்க இருப் பிடமும் தந்தார்.

''சத்யா... ஏம்மா அவசரப்பட்டே?''

''என்... என் பிள்ளைய பார்க்காம என்னால இருக்க முடியலேம்மா!''

''உன் பீலிங்ஸ் எனக்குப் புரியுது சத்யா! பாரு எவ் வளவு காயங்கள்? தவிர, மிஸ்டர் ராம் நடந்து கொண்ட விதம், அவர் மனசாட்சியே அவருக்கு தண்டனையை வழங்கியிருக்குன்னு புரியுது. நான் அவரைப் பார்த்து பேசவா?''

''இல்லேம்மா... வேண்டாம். இதே ஊர்லதான் என்னைப் பெத்தவங்களும் இருக்காங்க. அவங்களையும் கூட எனக்குப் பார்க்கத் தோணலே. அதே மாதிரி தான் என் பிள்ளையோட அப்பாவையும்! என் உயிர், மூச்சு எல் லாமே என் அபிலாஷ் மட்டும் தான். ஆனா, அவனுக்கு என்னை யாருன்னே தெரியலேம்மா!''

கதறியவளை, வார்த்தைகளின்றி அணைத்து தட்டிக் கொடுத்தார்.

* * *

அன்று அபிலாஷின் பிறந்த நாள்.

விடியற்காலையிலிருந்தே பங்களாவில் தோரணம் கட்டுவதும், சமையல் செய்வதுமான வேலைகள் ஆரம்ப மாகியிருக்க...

காம்பவுண்ட் சுவரை ஒட்டி, சேலைத் தலைப்பால் உடம்பைப் போர்த்திக் கொண்டு மெல்ல எட்டி, எட்டிப் பார்த்தாள் சத்யா.

அபிலாஷ் தன் கண்ணில் படமாட்டானா, என்கிற ஏக்கம் வழிந்தது.

எதற்காகவோ காரை எடுத்துக் கொண்டு வெளியில் வந்த ஹரிராம் அரையிருட்டில் ஒரு உருவம் தயங்கித் தயங்கி நகர்ந்து செல்வதை சந்தேகத்துடன் பார்த்தான்.

''ஏய்... யாரது... ஓடாதே... நில்லு!''

காரை வேகமாய் அவளருகே நிறுத்தி, காரின் வெளிச் சத்தில் அவளைப் பார்த்தவன், திடுக்கிட்டான்.

''ச....த்...யா! நீயா?'' அவசரமாய் இறங்கினான்.

''என்ன சத்யா?''

''ஒ... ஒண்ணுமில்லே...'' நகர்ந்தாள்.

''ஒரு நிமிஷம் சத்யா!''

''....?!''

''அபிலாஷை பார்க்கணுமா?''

ஈரத்தில் பளபளத்த கண்களால் அவனைப் பார்த்தாள்.

''ம்!''

''எத்தனை சட்டங்கள் பிரித்தாலும் அவன் உன் பிள்ளை சத்யா. சௌடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு அழைச்சிட்டு வரட்டுமா?''

கண்கள் சிரிக்க, கை கூப்பி விட்டு, வேகமாய் சென்ற வளை நெஞ்சம் பதைக்க பார்த்துக் கொண்டிருந்தான் இவன்.

* * *

அம்மனுக்கு பாலாபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. ஹரிராம், ஹேமா, அபிலாஷ் ஆகியோர் பிரகாரத்தில் நின்றிருக்க... சற்று தள்ளி ஒரு தூணின் மறைவில் நின்றபடி தன் மகனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சத்யா.

''இந்தக் கோவிலுக்கு எதுக்குங்க அழைச்சிட்டு வந் தீங்க? வழக்கமா காளிகாம்பாள் கோவிலுக்குத்தானே போவோம்? கோவில் சின்னதா, பழசாயிருக்கே?''

கிசுகிசுத்த ஹேமாவை முறைத்தான்.

''கோவில்லேயும் பாரபட்சம் பார்க்க ஆரம்பிச்சிடாதே! கோவில் பழசாயிருந்தாலும், சின்னதாயிருந்தாலும் எல்லா சாமியும் ஒண்ணுதான்!''

ஹேமாவை ராமின் அருகில் சேர்த்துப் பார்க்கவே நெஞ்சடைத்தது.

மனுஷங்களை மாதிரி, நீயுமல்லவா தாயே என்னைக் கைவிட்டுட்டே? எத்தனையெத்தனை மோசமான சம் பவங்கள் நடந்தேறிவிட்டன?

அதோ என் செல்லப் பையன். கருவாக உருவான நாளிலிருந்தே.... என் பிள்ளையை இப்படி வளர்க்கணும், அப்படி வளர்க்கணும்னு கனவு கண்டு, மனசுக்குள் பேசி

மகிழ்ந்தேனே! ஆனா, இப்ப, என் பிள்ளை கூட பேசக் கூட எனக்கு பாக்கியமில்லை. ஆசை, ஆசையாய் நான் வைத்த பெயரை சொல்லிக் கூப்பிடக் கூட இன்று எனக்கு உரிமையில்லை. அவனை தூரத்தில் இருந்து திருட்டுத் தனமாய் பார்க்கிற அளவுக்கு என்ன பாவம் செய்து விட்டேன்?

என் அபிக்குட்டி எவ்வளவு பெரிதாய் வளர்ந்து விட்டான்? அப்படியே அப்பாவை உரித்துக் கொண்டு பிறந்திருக்கிறான்? அவனைக் கட்டிக் கொண்டு முத்தமிட வேண்டும் போல இருக்கிறதே! ஏனம்மா என்னை சோதிக்கிறாய்?

''மம்மி... சாமிய ஏன் பால்ல குளிப்பாட்டறாங்க? எறும்பு கடிக்காது?'' அபிலாஷ் ஹேமாவின் மேல் சாய்ந்து கொண்டு கேட்டது காதில் விழுந்தது.

சத்யாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'அபி... நான்தான் உன் அம்மா. உன்னைப் பெத்தவடா. என்னை அம்மான்னு கூப்பிடுடா கண்ணா! அம்மான்னு கூப்பிடுடா...' மனசு ஓலமிட...

அதற்கு மேல் அங்கு நிற்பது உசிதமல்ல என்பதை உணர்ந்தவள்... வேகமாய் திரும்பி நடந்தாள்.

ஹரிராம் அவள் செல்வதை குழப் பத்துடன் பார்த்தான்.

16

வழக்கமாய் வாங்கும் மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்கிக் கொண்டு வேனில் ஏறப் போனவளை அந்தக் குரல் புரட்டிப் போட்டது.

''சத்யா!''

திரும்பியவளின் விழிகள் வியப்பில் விரிந்தன.

''நீ...ங்....க....ளா?''

''உனக்காக தான் வெய்ட் பண்ணிட்டிருந்தேன் சத்யா!'' என்றான் விழிகளில் நேசம் பொங்க.

''நா...நான் இங்கே... எப்படி....?''

''நானே சொல்லிடறேன் உன்னைப் பத்திய எல்லா விபரமும் எனக்குத் தெரியும். நமக்கு வேண்டப்பட்ட வங்களை பத்தி தெரிஞ்சுக்கிறது பெரிய விஷயமா என்ன?''

''இ... இனி இப்படி. ரோட்ல சந்திக்கிறது உங்களுக்கும் சரி, எங்கள் சேவை மையத்துக்கும் சரி. நல்லதல்ல... அதனால, தயவு செய்து என்னை சந்திக்க வராதீர்கள்'' தீர்மானமாய் கூறி விட்டு வேனில் ஏறி அமர்ந்தாள்.

''சத்யா ப்ளீஸ்... உன்கிட்ட நான் நிறையப் பேசணும்.''

''அதனால எந்த பிரயோஜனமும் இல்லே... வண்டிய எடுங்க சோமுண்ணா!''

''சத்யா... சத்யா...!''

அவன் கத்தக்கத்த வண்டி வேகமாய் போய் விட்டது.

ஆனால், சத்யாவின் மனசு தான் மின்சாரக் கம்பத்தில் சிக்கிய காற்றாடியாய் கிழிந்தன.

'எதற்கு ராம்... காலம் கடந்து என்ன பேசி என்ன ஆகப் போகிறது? பேசப்பேச எனக்கு அபியை உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமென்கிற ஆசைதான் பெரிதாகும். விட்டு விடுங்கள்.'

ஆனால், அவளை விட அவன் தான் ரொம்ப தவித்துப் போயிருந்தான்.

எப்போதும் அவளைப் பற்றிய எண்ணங்களே சுழன்றடித்தன.

'ஏதோ காரணங்களால் அவளை ஒதுக்கினேன். ஆனால், என் சத்யாவை நான் நேசித்தது, நேசிப்பது நிஜம் தானே? அனாதையாய் என் பிரியமானவள் சேவை மையத்தில் வாழ்வதா? என்ன செய்யப் போகிறேன்? கண்டிப்பாய் நான் இழைத்த தீங்குகளுக்கு பிராயச்சித்தம் தேடியே ஆக வேண்டும்.'

அடுத்த இரண்டாவது நாளே... கஸ்தூரிபாய் சேவை மையத்தின் வாசலில் காத்திருந்தான்.

வாட்ச்மேன் மூலம் தகவல் போக, பதைப்புடன் வந்தாள் சத்யா.

"வா... சத்யா!"

"என்னங்க இது... இங்கேயே வந்துட்டீங்க?"

"நான் உன்கிட்டேப் பேசியே ஆகணும் சத்யா. நீ என்கிட்டே பேசற வரை நான் இப்படி வந்துக்கிட்டே தான் இருப்பேன்!" சிறு பிள்ளையைப் போல் பேசினான்.

சத்யாவிற்கு ஆச்சர்யம் ஒரு பக்கம், சங்கடம் ஒரு பக்கம்.

காதலில் கட்டுண்டிருந்த போது ராமிடம் பார்த்த அதே சிறு பிள்ளைத்தன பிடிவாதத்தை இப்போது மறுபடியும் பார்க்கிறாள் பல வருடங்கள் கழித்து,

"எல்லாம் இழந்து பற்றிக் கொள்ள ஒரு பிடிமானமும் இன்றி தவித்தவளுக்கு கைப்பற்றி அழைத்து வந்து தங்க ஒரு கூரையைத் தந்தவள் லலிதாம்மா. இவன் இப்படி வாசலிலும், மார்க்கெட்டிலும் சந்தித்துப் பேசுவதை தவறாக எண்ணிக் கொண்டால்? அந்த சங்கடம் வேறு.

"சரி... சொல்லுங்க... என்ன பேசணும் உங்களுக்கு? சீக்கிரம் சொல்லிட்டுப் போங்க?"

"நான் உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேனா சத்யா?"

"....?!" சிரிப்புதான் வந்தது.

"சொல்லு சத்யா!"

"கேட்கறதுக்கு முன்னாடி யோசிச்சிட்டு கேள்வி கேளுங்க. மென்ட்டல் ஹாஸ்பிடல்ல இருந்து வந்தவங்கிட்ட கேட்கலாமா இப்படியொரு கேள்வி?"

"ஸாரி சத்யா... எல்லாம் என்னாலதான்... நம்பி வந்த உன்னை..."

"ஒருநிமிஷம்!"

".....?!"

"தயவு செய்து பழைய விஷயங்கள் பேச வேண்டாம்."

"அதுதானே சத்யா என்னை உறுத்திக்கிட்டு இருக்கு."

"மறக்க முயற்சி பண்ணுங்க."

"முடியல சத்யா. சொல்லப் போனா இப்பதான் அதிகமா நினைவிற்கு வருது."

"அது உங்களுக்கு மட்டுமல்ல... எனக்கும் ஆரோக்கியமான விஷயமல்ல...!"

"ஆனா, பேசணும் சத்யா. மனசுக்குள்ளே பொங்கிட்டு இருக்கிறதெல்லாம் வெளியில் வந்தால்தான் எனக்கு நிம்மதி. என் சந்தோஷமெல்லாம் உன்னோடயே போய்டுச்சுன்னா நம்புவியா? ஆனா, அதுதான் உண்மை!"

".....?"

"உனக்கு நான் செய்தது மிகப் பெரிய துரோகம். எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போனேன். சுயமாக எடுத்த

முடிவல்ல... கடைசி நேரத்திலே எங்கம்மா நிம்மதியா சாகலே தெரியுமா?''

''ப்ளீஸ்... இங்கிருந்து போய்டுங்க. உங்க ஸ்டேட்ட ஸுக்கு நீங்க இங்கே நின்னுக்கிட்டு பேசறது சரியா வராது. நா... நான்... இங்கே... இந்த மரத்தில் ஒண்டி வாழ்ந்துட்டு இருக்கிற நூத்துக்கணக்கான பறவைகள்ல நானும் ஒருத்தி. அதுக்கும் வேட்டு வச்சிடாதீங்க.!

''ப்ளீஸ்...'' கை கூப்பினாள்.

ஹரிராம் அவளையே சில கணங்கள் பார்த்தவன். ஒண்ணும் பேசாமல் காரை நோக்கிப் போனான்.

* * *

பத்து நாட்களாக ஹரிராம் அவளைப் பார்க்க வராதது சத்யாவிற்கு ஒருபுறம் நிம்மதியாய் இருந்தாலும், ஏனோ மனசு அவன் வரவேண்டும் என்று முரண்டுப் பிடித்தது.

ஆனால், அந்த பத்து நாட்களும் ஹேமாவிற்கும், ஹரிக்கும் பிரச்சனை அதிகமாயிருந்ததும், அதற்கு நான் தான் காரணம் என்று அவளுக்குத் தெரியாது.

உறக்கத்தில் ஒரு நாள் ஹரி. ''சத்யா... சத்யா நான் உனக்கு துரோகம் பண்ணிட்டேன் சத்யா'' என்று உளற.

அப்போதே எழுப்பி சண்டைப் போட்டாள் ஹேமா.

''அதெப்படி அவள் நினைப்பு உங்களுக்கு வரலாம்? அப்ப... எனக்குத் தெரியாமல் மென்ட்டல் ஹாஸ்பிடலுக்குப் போய் அவளைப் பார்த்துட்டு வர்றீங்க. அப்படித்தானே?'' என்று சந்தேகப்பட்டாள்.

அதன் பிறகு தொட்டதற்கெல்லாம் கோபப்பட்டாள், சந்தேகப்பட்டாள். பிரச்சனை வலுத்தது.

சத்யா... சமையல் கூடத்தில் காய்கறிகளை சரி பார்த்து எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''சத்யா... மேடம் உங்களைக் கூப்பிடறாங்க!''

உதவியாளர் பெண் அழைக்க... ''இதோ வந்துட்டேன்'' என்று உடனே கிளம்பினாள்.

''அம்மா!'' என்று அவர் முன்னே போய் நின்றாள்.

''வாம்மா சத்யா... வேலை முடிஞ்சுதா?''

''முடிச்சிட்டேன்ம்மா!''

''அந்த ரூம்ல உனக்காக, அபிலாஷோட அப்பா காத்துக்கிட்டிருக்கார்... போய்ப் பேசு!''

''அ...ம்...மா!'' என்றாள் அதிர்வில் ஓரடிப் பின்வாங்கி.

''போம்மா... நானும் பேசினேன். அவரும் மனசு விட்டுப் பேசினார்... தன் தவறுகளுக்கு நிஜமாகவே வருந்தறார். நீ வாழ்க்கையில் படக்கூடாத அவமானங்களையும், கஷ்டங்களையும் பட்டவ, அதற்கெல்லாம் ஆறுதலா கடவுள் உனக்கு ஏதோ நல்லது செய்யப் போறார்னேத் தோணுது, போ... போய்ப் பேசு... ஆல் த பெஸ்ட்!''

உள்ளே வந்தவளைக் கண்டதும் 'ச...த்...யா!' என்று நெகிழ்ந்தான்.

''உட்கார் சத்யா.''

அமர்ந்தாள்.

''என்னடா... சொல்லச் சொல்ல திரும்ப வர்றானேன்னுப் பார்க்கறீயா? இனி மேல் வரமாட்டேன்...!''

''.....?''

''நீ இங்கே இருந்தால்தானே வர்றதுக்கு? உன்னை நான் அழைச்சிட்டுப் போகவே வந்தேன்.!''

நெற்றி சுருங்கியது.

"ஆச்சர்யமாயிருக்கா சத்யா? எனக்கும் ஹேமாவுக்கும் பிரச்சனை அதிகமாகிட்டேப் போகுது" என்றவன் நடந்தவைகளை சுருக்கமாகச் சொன்னான்.

"உன் பேரைச் சொன்னாலே பேய் மாதிரி ஆடறா. அதெப்படி மறந்துட முடியும் சத்யா? உன்னை உருகி உருகி காதலிச்சி, ஆசை ஆசையாய் கல்யாணம் பண்ணிக் கிட்டவன். ஏதோ உன்னை இப்ப பார்த்ததால தான் இப்படியெல்லாம் பேசறதா நினைச்சிடாதே! உன்னைப் பிரிஞ்ச நாள் முதலா உன்னோட சேர்ந்து வாழணும்னு தான் ஆசைப்பட்டேன். அபிக்காக தானே இத்தனை அவஸ்தையும் பட்டே? அவன் உன் பிள்ளை. உன்கிட்டயே ஒப்படைச்சிடறேன். ஹேமாவை டைவர்ஸ் பண்ணப் போகிறேன்."

"பண்ணி..."

"நாம சேர்ந்து வாழலாம் சத்யா!"

"....?"

"என்ன சத்யா அமைதியாய்ட்டே?"

"ஒரே ஒரு கேள்வி...."

"கேளும்மா...!"

"நா... நான் தப்பானவள்னு தானே என்னை ஒதுக்கி வச்சீங்க. இப்ப மட்டும்..."

"ஸாரி சத்யா. நீ எப்படிப்பட்டவள்னு எனக்குத் தெரியும். அம்மாவுக்காக நான் மனசாட்சியில்லாம நடந்துக்கிட்டேன்."

"தாங்க்ஸ்ங்க... இது போதும்...!"

"நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலியே! நாம புதுசா வாழ்க்கைய ஆரம்பிக்கலாம் சத்யா!"

"அப்பவும் சரி அவசரப்பட்டு முடிவெடுத்தீங்க. இப்பவும் அதே மாதிரி அவசரப்படறீங்க."

"அவசரப்படலே சத்யா. சட்டம் பிரிச்சாலும் நீயும், நானும் புருஷன், பொண்டாட்டிதான். இழந்ததுக்கெல்லாம் சேர்த்து வச்சு உனக்கு சந்தோஷத்தைத் தரணும்னு ஆசைப்படறேன்."

".....?"

"சொல்லு சத்யா..."

"எனக்கு மூணு நாள் டைம் தர முடியுமா... யோசிக்கணும்."

"யோசிக்கணுமா?"

"ஆமாம்!"

"சரி!"

"ஆனா, அது வரைக்கும் என்னைப் பார்க்க வராதீங்க."

சற்று நிதானித்து "சரி" என்றான்.

அடுத்த நாள்!

பெட்டியுடன் லலிதாம்மாவின் முன் வந்து நின்றாள் சத்யா.

"உன் முடிவுல மாற்றமே இல்லையா சத்யா?"

"இல்லேம்மா... இந்த முடிவுதான் சரி. இல்லேன்னா இன்னொரு சத்யா உருவாகிடுவா!"

"என்னம்மா சொல்றே?"

"நான் யாரையும் குற்றமோ, குறையோ சொல்லலே. ராமோட பார்வையில் அவர் செய்யறது மனசாட்சிப்படி நியாயமாத் தெரியலாம். தப்பே செய்யாத நான் இவ்வளவு மோசமான தண்டனையை அனுபவிச்சது கண்டிப்பா அவரை உறுத்தவே செய்யும். அதே சமயம் ஹேமா பக்கமும் நியாயமிருக்கே? புருஷனை எந்த மனைவிதான்

விட்டுக் குடுப்பா? இப்ப முழு உரிமையும் ஹேமாவுக்கு தானே? அவளோட அன்புல எந்தப் பாசாங்கும் இல்லே. என் பிள்ளைய அவ இடத்துல வேற யார் வந்திருந்தாலும் ஹேமா அளவுக்கு அவ்வளவு பாசமா பார்த்துக்க முடியாது. அவளுக்கு துரோகம் பண்றது தப்பில்லையா?''

''நீ சொல்றது சரிதான்... ஆனா நீ பெத்த பிள்ளைய திருட்டுத்தனமா பார்க்க வேண்டிய அவசியமில்லையே. எதுக்காக கோர்ட்டு படியேறி போராடினே... உன் பிள்ளைக்காகத்தானே? அன்னைக்கு பறிச்சுக்கிட்டுப் போன உன் புருஷனே திரும்ப உன்கிட்ட ஒப்படைக்கிறேன் என்கிறார். நீ வேணாங்கறதுதான் ஆச்சர்யமாயிருக்கு.''

''பெத்தப் பிள்ளைய யாராவது வேண்டாம்னு சொல்லுவாங்களாம்மா? என் உயிர், உலகம் எல்லாமே அபிலாஷ் தானே? நான் மனநிலை பாதிக்கப்பட்டு கிடந்தப்பக் கூட என் பிள்ளையத் தவிர வேறெந்த நினைவும் இல்லையே! அப்படிப்பட்ட பிள்ளைய விட்டுத் தர்றேன்னா... இன்னொரு சத்யா உருவாகிடக் கூடாதில்லையா?''

''.....?''

''ஹேமா அபிலாஷ் மேல உயிரையே வச்சிருக்கா. என் பாசத்துல எந்த வகையிலேயும் குறைஞ்சதல்ல அவ பாசம்? அவனுக்காகவே தானொரு குழந்தையைப் பெத்துக்கல. அப்படிப்பட்ட தாயை ஏமாத்த எனக்கு மனசு வரலேம்மா.

அப்படிப் பறிச்சுக்கிட்டா என்னை விட மோசமா பாதிக்கப்படுவா! புதுசா ஒரு அம்மா வந்து, அபி உன்னை பெத்த அம்மா நான்தான்டான்னு குழப்ப மனசு வரலே. என் பிள்ளைய ஹேமா சந்தோஷமா வச்சிருப்பா. அந்த நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு.''

''ச...த்...யா!''

''புருஷன் பொண்டாட்டி சண்டை விடிஞ்சா காணாமப் போய்டும். அப்படி முடியாம பூதாகரமா பெருசாகுதுன்னா... அதுக்கு யாராவது காரணமாயிருப்பாங்க. இங்கே எனக்கேத் தெரியாம நான்தான் காரணமாயிருக்கேன்.

நான் இங்கே இருந்தா அவர் என்னைப் பார்க்க வருவார். மனசு ஊசலாடும். குற்ற உணர்வு வதைக்கும். நான் சுத்தமானவள்னு அவர் நினைச்சதே போதும். நான் மறுபடி சேலத்துக்கேப் போய்டறது தான் எல்லாருக்கும் நல்லது. என்ன ஒரு வித்தியாசம்? அஞ்சு வருஷம் முன்னாடி பைத்தியமாப் போனேன். இப்ப வேலைக்கான பொறுப்பை ஏத்துக்கப் போறேன்!''

''உன்னை அங்கே அனுப்ப மனசே இல்லை சத்யா. உன் பிடிவாதம்... என்னை தலையாட்ட வைக்குது!''

''எனக்கும் உங்களை விட்டுப் போக, மனசில்லே தாம்மா. ஆனா, இங்கேயிருந்தா... ஒரு அழகானக் கூட்டைக் கலைக்கற மாதிரி ஆகிடும்.''

''ராம் வந்தா நான் என்ன சொல்லட்டும்?''

''இந்த கடிதத்திலே எல்லாமே விளக்கமா எழுதியிருக்கிறேன். அவர் புத்திசாலி. வருத்தப்பட்டாலும், என்னை புரிஞ்சுப்பார். ஜீரணிச்சுப்பார். ஆனா, நான் இருக்கிற இடம் மட்டும் அவருக்குத் தெரியாம... நீங்கதான் பார்த்துக் கணும்,'' என்றவள் ஒரு கவரை நீட்டினாள்.

பெருமூச்சுடன் வாங்கிக் கொண்டார் லலிதாம்மா.

அவள் சேலம் செல்ல கார் ஏற்பாடு செய்திருந்தார்.

காரில் ஏறி அமர்ந்த சத்யா தன்னை மீறி உடைப் பெடுத்த கண்ணீரைத் துடைத்தபடி கையசைத்தாள். கார் புறப்பட்டது.

* * *

ஆவலுடன் வந்த ராமிடம் லலிதாம்மா அந்த கடிதத்தை ஒப்படைத்து விட்டு தன் அறைக்குச் சென்று விட்டார்.

படிக்க படிக்க... இதயம் கனத்துப் போனது ஹரிராமுக்கு.

'ஏன் இப்படிப் பண்ணிட்டே சத்யா? மேலும், மேலும் என்னை தண்டிக்கிறியா? இனி உங்கள் பார்வையிலேயே படமாட்டேன் என்று எழுதியிருக்கிறாயே. ஹேமாவை நீ நினைத்துப் பார்க்கிறாய். ஆனால் அவள்?

அவளுடன் சேர்ந்து வாழ்வது தான் உனக்கு நான் செய்யும் கைமாறா? வாழ்கிறேன். ரெட்டை வாழ்க்கை வாழ்கிறேன். உன்னை மனசு முழுக்க நிரப்பி வச்சுக்கிட்டு அவ கூட வாழத்தான் போகிறேன்.

ஆனா, நான் உன்மேல வச்சிருக்கிற பிரியத்தை உணர்ந்திருந்தா இப்படியொரு கடிதம் எழுதியிருப்பியா? என் மனசை உடைச்சிட்டுப் போய்ட்டியே சத்யா?

எனக்கு நீ வேணும் சத்யா. பிரியமானவளே... எனக்கு உன் பிரியம் வேணும். தருவாயா? நீ சொன்னதும் நான் உன்னை மறந்துடணுமா? அதெப்படி மறப்பேன்? நான் உன்னை மறுபடி சந்திப்பேன்ற நம்பிக்கை நிறைய இருக்கு. அது எத்தனை வருஷமானாலும் சரி... நாம கண்டிப்பா சந்திப்போம். அப்ப நீ என் நேசத்தை புரிஞ் சுப்பே. அப்ப உன் கண்ல இருந்து... ஒரு சொட்டு கண் ணீர் வழியுமே! அதுதான் நீ எனக்குத் தர்ற சன்மானம். அந்தப் புரிதலுக்காக, நேசத்துக்காக காத்திருப்பேன் சத்யா!'

கடிதத்தை மடித்து பாக்கெட்டில் வைத்தவன், நாகூக் காய் கண்களையும் துடைத்துக் கொண்டு காரில் ஏறினான்.

ஜன்னல் வழியே அவனையேப் பார்த்துக் கொண் டிருந்த லலிதாம்மாவின் நெஞ்சமும் விம்மியது.

*